தமிழரசு

Tamilarasu

(Monthly)

மே 2023 (May 2023)
விலை ரூ.20/– (Price Rs.20/-)

செய்தி – மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு

மலர் (Vol.) : 53
இதழ் (Issue) : 11

1 இலட்சம்

பயனாளிகளுக்கு ஓய்வூதிய பயன்கள் வழங்குதல்

மற்றும் புதுமைப் பெண், நான் முதல்வன் திட்டங்களின் கீழ் ஆணைகள் வழங்கும் விழா

வழங்குபவர்

திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் முன்னிலையில், தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையின் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மிட்சுபிஷி எலக்ட்ரிக் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனம், ரூ.1,891 கோடி முதலீட்டில் 2,000க்கும் மேற்பட்ட நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் அறைகளுக்கான குளிர்சாதன இயந்திரங்கள் மற்றும் காற்றமுத்த கருவிகள் உற்பத்தி ஆலை அமைப்பதற்கு கட்டமைக்கப்பட்ட ஊக்கச் சலுகைகள் வழங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் தமிழ்நாடு அரசு மற்றும் மிட்சுபிஷி எலக்ட்ரிக் இந்தியா பிரைவேட் லிமிடெட் இடையே 09.05.2023 அன்று சென்னையில் மேற்கொள்ளப்பட்டது.

தொழிலாளர் வாழ்வில் முன்னேற்றமும், நிம்மதியும் காண அயராது பாடுபடும் இயக்கம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின்
மே நாள் வாழ்த்துச் செய்தி - 30.04.2023

உழைக்கும் தோழர்களின் உன்னதத்தை உலகுக்கே எடுத்துரைக்கும் மே நன்னாளாம் இந்தப் பொன்னாளில், நாட்டின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் முதுகெலும்பாகத் திகழும் தொழிலாளத் தோழர்களுக்கும், அவர்தம் குடும்பத்தினருக்கும் எனது இதயம் நிறைந்த உழைப்பாளர் நாள் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்கும்போதெல்லாம் பல்வேறு தொழிலாளர் நலத்திட்டங்களை அக்கறையோடு நிறைவேற்றி, தொழிலாளர் வாழ்வில் முன்னேற்றமும், நிம்மதியும் காண அயராது பாடுபடும் இயக்கம் என்பதை உழைப்பாளர் சமுதாயம் நன்கு அறியும்.

எதிர்க்கட்சி வரிசையில் இருந்தால், தொழிலாளர்களின் உரிமைகளுக்காகத் தொடர்ந்து போராடியிருக்கிறோம். ஆட்சியில் இருக்கும்போது, அவர்களுக்கான உரிமைகளைப் பேணும் திட்டங்களை வகுத்துச் செயல்படுத்துகிறோம்.

மே தினத்திற்கு ஊதியத்தோடு கூடிய அரசு விடுமுறை; தொழிலாளர்களுக்கு 20 விழுக்காடு போனஸ், ஊக்கத் தொகை; நிலமற்ற ஏழை வேளாண் தொழிலாளர் குடும்பங்களுக்கு இலவச நிலம்; வேளாண் கூலிகளாகவும், வேறுபல தொழில்களில் உழைப்பாளிகளாகவும் திகழும் ஏழை, எளிய கருவுற்ற பெண்களுக்கு ரூ.6,000 நிதியுதவி; தொழிலாளர் குடும்பங்களின் பசிப்பிணி போக்கிட ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி; உழைப்பாளர்களின் உயிர்காக்கும் கலைஞர் காப்பீட்டுத் திட்டம்; குடிசைகளில்லா கிராமங்கள், குடிசைப் பகுதிகளில்லா நகரங்கள் கொண்ட தமிழ்நாடு காணும் கலைஞர் வீடு வழங்கும் திட்டம்; அமைப்புசாராத் தொழிலாளர் நலவாரியங்கள் எனப் பல்வேறு முத்தான திட்டங்களை உழைக்கும் சமுதாயத்தின் நலனுக்காக நிறைவேற்றியது தி.மு.க. ஆட்சிதான் என்பது வெள்ளிடை மலை.

அந்த உறுதிப்பாடு குலையாமல் தொழிலாளர் நலன் காக்க, திராவிட முன்னேற்றக் கழகமும், அதன் அரசும் என்றென்றும் பாடுபடும் என்பதை இந்த நன்னாளில் தெரிவித்து, உழைக்கும் தோழர்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழரசு

தமிழ்நாடு அரசு
செய்தித்துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2054
சோபகிருது வருடம்
சித்திரை - வைகாசி
மே 2023

மலர் : 53 விலை ரூ.20 இதழ் : 11

ஆசிரியர் - வெளியிடுபவர்
த. மோகன், இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு இணைச் செயலாளர்

நிருவாக ஆசிரியர்
இரா. அண்ணா
இணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர்
அ. மகேஸ்வரி
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள்
க.அ. முகம்மது ரசூல்
எஸ். உதயா கதிரவன்
ச. மஞ்சுளா
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

உதவி ஆசிரியர்கள்
மு. மணிமேகலை
கு. சுபாஷ்
இரா. பாலாஜி
சி. சுஜிதா

நிருபர்கள்
எஸ்.ஆர்.எஸ்.ஸ்ரீந்தர்
ஜெ.ஜெயசிம்ஹன்

ஓவியர்
இரா. உமாமகேஸ்வரி

இதழ் உதவியாளர்
நி. ஷீலா

கணினி வடிவமைப்பு
தி. ஜெய்சங்கர்
க.இரா. உமாமகேஸ்வரி

முதுநிலை அச்சுப்பிழைத் திருத்துபவர்
கோ. சந்திரசேகர்

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
எண்.5, இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை-600 113.
தொலைபேசி : 22542221/22542224
மின்னஞ்சல் : ddpub.tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tndipr.gov.in

தமிழரசு இதழுக்கு
www.tamilarasu.org என்ற இணையதளத்தில்
சந்தா தொகையினை நேரடியாகச் செலுத்தலாம்.

நவில்தொறும் நூனயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு. (குறள் 783)

படிக்கப் படிக்க இன்பம் தரும் நூலின் சிறப்பைப்போல் பழகப் பழக இன்பம் தரக்கூடியது பண்புடையாளர்களின் நட்பு.

– திருக்குறள் **கலைஞர்** உரையிலிருந்து...

இந்த இதழில்...

★ ஈடில்லா ஆட்சி ஈராண்டே சாட்சி 5
★ உங்களில் ஒருவனாக, உங்களோடு ஒருவனாக என்றும் இருப்பேன் 7
★ விழுப்புரம் மாவட்டத்தில் "கள ஆய்வில் முதலமைச்சர் திட்டம்" 15
★ "ஸ்காட்லான்ட் யார்டு" காவல்துறைக்கு இணையாகச் சிறப்பாகப் பணியாற்றிவரும் தமிழ்நாடு காவல்துறை 21
★ திண்டிவனத்தில் நவீன வசதிகளுடன் ரூ.155 கோடி மதிப்பீட்டில் மருந்துப் பூங்கா 40
★ விளையாட்டுக்களுக்குப் புத்துயிர் அளிக்கும் நோக்கத்தில் மக்களுடன் பெரு நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுவதற்கான ஒரு முன்னெடுப்பு 49
★ திருச்சிராப்பள்ளி மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் ரூ.30.43 கோடி மதிப்பீட்டில் திருக்கோயிலில் பக்தர்கள் வரிசை வளாகம் மற்றும் திருமண மண்டபம் 52
★ கிறித்துவராக மதம் மாறிய ஆதிதிராவிடர்கள், அனைத்து வகையிலும் சமூகநீதியின் பயன்களைப் பெறும் வகையில் அரசினர் தனித் தீர்மானம் 59
★ இளைஞர்களுக்குத் தன்னைப் பற்றிய சிந்தனையும் நாட்டைப்பற்றிய பொதுநோக்கமும் இருக்க வேண்டும் 64
★ உளுந்தூர்ப்பேட்டைத் தொழிற்பேட்டையில் ரூ.2,302 கோடி முதலீட்டில் 20,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் 74

முதலாம் பக்க அட்டை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், 06.05.2023 அன்று, சென்னை, கலைவாணர் அரங்கத்தில், ஆட்சி பொறுப்பேற்று ஈராண்டு நிறைவடைந்ததையொட்டி தமிழ்நாடு அரசின் சாதனைகளை விளக்கும் வகையில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் தயாரிக்கப்பட்டுள்ள **"ஈடில்லா ஆட்சி ஈராண்டே சாட்சி"** என்ற ஈராண்டு சாதனை மலரை வெளியிட்டார்.

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள : tndiprnews DIPR TN tndipr TN DIPR www.dipr.tn.gov.in

ஈடில்லா ஆட்சி ஈராண்டே சாட்சி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், 06.05.2023 அன்று, சென்னை, கலைவாணர் அரங்கத்தில், இவ்வரசு ஆட்சி பொறுப்பேற்று ஈராண்டு நிறைவடைந்ததையொட்டி தமிழ்நாடு அரசின் சாதனைகளை விளக்கும் வகையில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் தயாரிக்கப்பட்டுள்ள "ஈடில்லா ஆட்சி ஈராண்டே சாட்சி" என்ற ஈராண்டுச் சாதனை மலர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உதிர்த்த முத்துக்கள், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110இன் கீழ் அறிவித்த அறிவிப்புகள், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய உரைகள், முதலமைச்சரின் உரைகள், காலப்பேழை புத்தகம், ஈராண்டுச் சாதனைகளை விளக்கும் தொகுப்புக் காணொலிக் குறுந்தகடு ஆகியவற்றை வெளியிட்டார். மேலும், தமிழ்நாடு அரசின் ஈராண்டுச் சாதனைகளை விளக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள புகைப்படக் கண்காட்சியையும் திறந்து வைத்துப் பார்வையிட்டார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு கொரோனா காலகட்டத்தில் பதவியேற்ற நாள் முதல் நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன், பொதுமக்களுக்கு நிவாரண உதவிகளையும், அத்தியாவசியப் பொருட்களையும் வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தையும் பாதுகாத்தது, வடகிழக்குப் பருவ மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளில் களஆய்வு மேற்கொண்டு, நிவாரணம் மற்றும் துயர் துடைப்பு நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொண்டதோடு, இனிவரும் காலங்களில் வெள்ளப் பாதிப்புகள் ஏற்படாவண்ணம் மழைநீர் வடிகால் பணிகளை மேற்கொண்டது.

மகளிர்க்குப் பேருந்துகளில் கட்டணமில்லாப் பயண வசதி, முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், நான் முதல்வன் திட்டம், புதுமைப் பெண் திட்டம், உங்கள் தொகுதியில் முதலமைச்சர், மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் – நம்மைக் காக்கும் 48, இல்லம் தேடிக் கல்வி, எண்ணும் எழுத்தும், பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டம், விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு வழங்கும் திட்டம் போன்ற பல்வேறு ஏற்றமிகு திட்டங்களைச் சீரிய முறையில் செயல்படுத்தி வருவதால் தமிழ்நாடு நாட்டிலேயே முதன்மை மாநிலமாக விளங்கி வருகிறது. மேலும், தமிழ்நாட்டினை 2030ஆம்

ஆண்டிற்குள் ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக உயர்த்திட வேண்டும் என்ற இலக்கினை அடைந்திட "முதலீட்டாளர்களின் முதல் முகவரி – தமிழ்நாடு" என்ற முதலீட்டாளர்கள் மாநாடுகள் நடத்தி முதலீடுகளை ஈர்த்து, தொழில் துறையில் முன்னணி மாநிலமாக தமிழ்நாட்டினை திகழச் செய்திடவும், படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கிடவும் பல்வேறு நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது.

இத்தகைய சிறப்புமிக்க தமிழ்நாடு அரசின் ஈராண்டுச் சாதனைகளை இளைய தலைமுறையினர் மற்றும் அனைத்துத் தரப்பு மக்களும் அறிந்திடும் வகையில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் தயாரிக்கப்பட்டுள்ள "ஈடில்லா ஆட்சி ஈராண்டே சாட்சி" என்ற ஈராண்டு சாதனை மலர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உதிர்த்த முத்துக்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110இன் கீழ் அறிவித்த அறிவிப்புகள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய உரைகள், முதலமைச்சரின் உரைகள் என்ற தலைப்பில் பல்வேறு நிகழ்ச்சிகளில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரைகள் (4 தொகுப்புகள்), "Penning Down Change" என்ற காலப்பேழை புத்தகம், ஈராண்டுச் சாதனைகளை விளக்கும் தொகுப்புக் காணொலிக் குறுந்தகடு ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்.

அதனைத் தொடர்ந்து, இவ்வரசு பொறுப்பேற்று இரண்டு ஆண்டு காலங்களில் மருத்துவம், வேளாண்மை, கல்வி, தொழில், உள்ளாட்சி, சமூகநலம், பொதுப்பணி, என அனைத்துத் துறைகளிலும் மக்கள் மேம்பாட்டிற்காகச் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு புதிய திட்டங்கள் மற்றும் முக்கிய நிகழ்வுகள் குறித்த தமிழ்நாடு அரசின் ஈராண்டுச் சாதனைகளை விளக்கும் வகையில் செய்தி மக்கள் தொடர்புத் துறையால் அமைக்கப்பட்டுள்ள புகைப்படக் கண்காட்சியை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்துப் பார்வையிட்டார்.

மக்களாட்சியின் மகத்தான பயணம் தொடரும்...

ஆறாவது முறையாய் ஆட்சிப் பொறுப்புக்கு வந்துள்ள திராவிட முன்னேற்றக் கழக அரசு, ஈராண்டை நிறைவு செய்து மூன்றாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது.

நாட்காட்டியில் நகரும் ஒவ்வொரு நாளும் நாட்டுக்கு நன்மை செய்யும் நாளாகவே அமைந்துள்ளது.

தினந்தோறும் திட்டங்கள் தீட்டி வருகிறோம். ஊர்தோறும் வளர்ச்சியைக் கண்டு வருகிறோம். துறைதோறும் மலர்ச்சியை உருவாக்கி வருகிறோம்.

திசைதோறும் கவனத்தை ஈர்த்துள்ள திராவிட மாடல் மக்களாட்சியின் மகத்தான பயணம் பல பத்து ஆண்டுகளுக்கும் தொய்வின்றித் தொடரும்!

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின்
சமூக வலைத்தளப்பதிவு - 07.05.2023

tndiprnews DIPR TN tndipr TN DIPR www.dipr.tn.gov.in

உங்களில் ஒருவனாக, உங்களோடு ஒருவனாக என்றும் இருப்பேன்

ஒரு இலட்சம் பயனாளிகளுக்கு ஓய்வூதிய ஆணைகள், "புதுமைப் பெண்" திட்டத்தின்கீழ் உயர்கல்வி உதவித்தொகைக்கான வங்கிப் பற்று அட்டைகள், "நான் முதல்வன்" திட்டத்தின்கீழ்ப் பயன்பெற்றவர்களைப் பாராட்டிக் கேடயங்கள் வழங்கி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் ஆற்றிய உரை - 06.05.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 06.05.2023 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில், ஆட்சி பொறுப்பேற்று இரண்டு ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டிச் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டில் புதியதாக ஒரு இலட்சம் பயனாளிகளுக்கு ஓய்வூதிய ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 10 பயனாளிகளுக்கு ஓய்வூதியத்திற்கான ஆணைகளையும், "புதுமைப் பெண்" திட்டத்தின் கீழ் 10 மாணவியர்களுக்கு உயர்கல்வி உதவித்தொகைக்கான வங்கிப் பற்று அட்டைகளையும், "நான் முதல்வன்" திட்டத்தின் கீழ் பயன்பெற்றவர்களில் 5 பயனாளிகளுக்குக் கேடயங்களையும் வழங்கிப் பாராட்டினார்.

சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் ஒரு இலட்சம் பயனாளிகளுக்கு ஓய்வூதிய ஆணைகள் வழங்குதல்

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் வாயிலாகத் தமிழ்நாடு அரசு சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினர்களை பாதுகாக்கும் வகையில் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், ஓய்வூதியத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் அனைத்துத் தகுதியுள்ள பயனாளிகளுக்கும் மாதாந்திர ஓய்வூதியத் தொகையாக ரூ.1,000 வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு அரசின் முன்னோடித் திட்டங்களில் ஏழை, எளிய மக்களுக்கு நேரடியாகப் பயனளித்துவரும் சமூகப் பாதுகாப்புத்

திட்டங்களின்கீழ், முதியோர், மாற்றுத்திறனாளிகள், விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், வேளாண் தொழிலாளர்கள் போன்ற நலிவுற்ற பிரிவினர்களுக்கு 12 வகையான திட்டங்களின்கீழ்த் தற்போது 34,62,092 பயனாளிகள் ஓய்வூதியம் பெற்று வருகின்றனர்.

தற்போது பல்வேறு மாவட்டங்களில் இத்தகைய முதியோர் உதவித்தொகைக்கான அனுமதி பெற்று காத்திருப்போர் பட்டியலிலுள்ள 64,098 நபர்கள் மற்றும் புதியதாக 35,902 நபர்கள், என மொத்தம் 1,00,000 நபர்களுக்கு வரும் ஜுன் மாதம் முதல் மாதம் ரூ.1,000 உதவித்தொகை பெறும் வகையில், மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.1,500 மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் பயனாளிகளின் எண்ணிக்கையை உயர்த்தி ஒரு இலட்சம் நபர்கள் கூடுதலாகப் பயன்பெறும் வகையில் ஆணையிட்டுள்ளார்.

அதன் அடிப்படையில் விளிம்பு நிலையிலுள்ள ஒரு இலட்சம் ஏழை, எளிய நபர்கள் பயன்பெறும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 10 பயனாளிகளுக்கு ஓய்வூதிய ஆணைகளை வழங்கித் தொடங்கி வைத்தார். இந்த ஒரு இலட்சம் பயனாளிகளும் வரும் ஜுன் மாதம் முதல் உதவித்தொகையினைப் பெறத்துவங்குவார்கள்.

"புதுமைப் பெண்" திட்டத்தின்கீழ் உயர்கல்வி உதவித்தொகைக்கான வங்கிப் பற்று அட்டைகள் (Debit Card) வழங்குதல்

பெண்கல்வியைப் போற்றும் விதமாகவும், உயர்கல்வியை உறுதி செய்து இன்றைய பெண் சமூகம்நாளையதமிழ்நாட்டின்நல்லகுடிமக்களைப் பேணும் உயர்கல்வி கற்ற பெண்களாகவும், கல்வியறிவு, தொழில்நுட்பம் நிறைந்த உழைக்கும் சமூகத்தைச் சார்ந்தவராகவும் உருவாகிட 05.09.2022 அன்று சென்னையில் நடைபெற்ற விழாவில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித் திட்டத்தின்கீழ், அரசுப் பள்ளிகளில் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை பயின்று உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1,000 வீதம் உதவித்தொகை வழங்கும் "புதுமைப் பெண்" திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

இத்திட்டத்தின் மூலம், பெண்களுக்கு உயர்கல்வி அளித்து, பாலினச் சமத்துவத்தை ஏற்படுத்துதல், குழந்தைத் திருமணத்தைத் தடுத்தல், குடும்பச் சூழ்நிலை மற்றும் வறுமை காரணமாக மேற்படிப்பு படிக்க இயலாத மாணவிகளுக்குப் பொருளாதார ரீதியாக உதவுதல், பெண் குழந்தைகளின் இடைநிற்றல் விகிதத்தைக் குறைத்தல், பெண் குழந்தைகளின் விருப்பத் தேர்வுகளின்படி அவர்களின் மேற்படிப்பைத் தொடர ஊக்குவித்தல், பெண்களுக்கான தொழில் வாய்ப்புகளை அதிகரித்தல், பெண்களின் சமூக, பொருளாதாரப் பாதுகாப்பை உறுதி செய்தல் ஆகியவற்றின் மூலம் அறிவார்ந்த சமுதாயத்தை உருவாக்க வழிவகை செய்யப்படுகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 05.09.2022 அன்று தொடங்கி வைக்கப்பட்ட "புதுமைப் பெண்" திட்டத்தின் முதற்கட்டத்தில் 1,16,210 மாணவிகளும், 08.02.2023 அன்று தொடங்கி வைக்கப்பட்ட இரண்டாம் கட்டத்தின் மூலம் மேலும் 94,507 மாணவிகளும், என மொத்தம் 2,10,717 மாணவியர்கள் பயன்பெற்று வருகின்றனர். இத்திட்டத்திற்காக இதுவரை மொத்தம் ரூ.121.18 கோடி மாணவியர்களுக்கு உயர்கல்வி உதவித்தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

அதன் தொடர்ச்சியாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் "புதுமைப் பெண்" திட்டத்தின்கீழ் 10 மாணவியர்களுக்கு உயர்கல்வி உதவித்தொகைக்கான வங்கிப் பற்று அட்டைகளை வழங்கினார்.

"நான் முதல்வன்" திட்டத்தின்கீழ் பயன்பெற்றவர்களைப் பாராட்டி கேடயங்கள் வழங்குதல்

தமிழ்நாட்டு இளைஞர்களின் வேலைவாய்ப்புக்கெனத் தொழில் துறையின் தேவை சார்ந்த திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை வழங்க "நான் முதல்வன்" திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 01.03.2022 அன்று தொடங்கி வைத்தார். இத்திட்டத்தின் மூலம் 2022-2023ஆம் ஆண்டு 13 இலட்சம் இளைஞர்களுக்குத் திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

கல்லூரிப் பாடத்திட்டத்தில் வழங்கப்படும் வழக்கமான பாடப்பிரிவுகளுடன் சேர்த்து மாறிவரும் தொழில்நுட்ப உலகிற்கேற்பத் திறன்

படிப்புகளை வழங்குவதே "நான் முதல்வன்" திட்டம் ஆகும். துறை சார்ந்த வல்லுநர்களின் உதவியுடன் பிரத்தியேக திறன்சார் பாடங்களை வடிவமைத்து, அவர்கள் கல்லூரி பாடத் திட்டத்துடனேயே சேர்த்து அவர்கள் படிக்கும் கல்லூரிகளில் வழங்குவதே இத்திட்டத்தின் சிறப்பம்சமாகும். இத்திட்டத்தின்கீழ் மொத்தம் 483 பொறியியல் கல்லூரிகளில் 4,98,972 மாணவர்களும், 842 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 8,11,338 மாணவர்களும் பயனடைந்துள்ளனர்.

இப்பயிற்சிகளின் மூலமாக மாணவர்கள் அதிகபட்சமாக ஆண்டுக்கு ரூ.40 இலட்சம் வரையிலான ஊதியத்தில் வேலைவாய்ப்புகளைப் பெற்றுள்ளனர். திறன் பயிற்சி பெற்ற மாணவர்களுக்குத் தொடர்ச்சியாக வேலைவாய்ப்பினைப் பெற்றுத் தருவதற்கான முகாம்கள் கல்லூரி வளாகங்களிலேயே தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

பொறியியல் கல்லூரிகளில் 2022-2023ஆம் ஆண்டு "நான் முதல்வன்" திட்டத்தின் மூலமாக 1,15,682 இறுதியாண்டு மாணவர்களுக்கு, Siemens, Dassalt, Microsoft, IBM, Cisco Autodesk போன்ற பன்னாட்டு நிறுவனங்கள் மூலமாகவும் L&T, TCS, Infosys, NSE போன்ற புகழ்பெற்ற உள்நாட்டு நிறுவனங்கள் மூலமாகவும் திறன் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளது. இதன் பலனாக, தமிழ்நாடு முழுவதும் இதுவரை நடந்துள்ள வேலைவாய்ப்பு முகாம்கள் மூலமாக 59,132 மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கப்பெற்றுள்ளது. மேலும், இத்தகைய வேலைவாய்ப்பு முகாம்கள் இம்மாத இறுதிவரை நடைபெறவுள்ளது.

கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் "நான் முதல்வன்" திட்டத்தின் மூலமாக 2,48,734 இறுதியாண்டு மாணவர்களுக்கு முன்னணி நிறுவனங்களின் பயிற்றுநர் மற்றும் பாடங்களுடன் திறன் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டது. இதன் பலனாக, தமிழ்நாடு முழுவதும் ஏப்ரல் மாதம் தொடங்கி இதுவரை நடைபெற்றுள்ள வேலைவாய்ப்பு முகாம்கள் மூலமாக 62,634 மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கப் பெற்றுள்ளது. மேலும், இந்த வேலைவாய்ப்பு முகாம்கள் ஜுன் மாத இறுதிவரை நடைபெறவுள்ளது.

மேலும், CII, TIDCO, SIPCOT, MSME, ELCOT, DISH. Employment, StartupTN, Guidance TN, FICCI, NASSCOM போன்ற அமைப்புகளுடன் இணைந்து வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தி மேலும் பல இலட்சம் மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதன் தொடர்ச்சியாக, இன்றையதினம் "நான் முதல்வன்" திட்டத்தின்கீழ், கலை மற்றும் அறிவியல், பொறியியல் கல்லூரிகளில் பயின்று திறன் பயிற்சி முடித்துப் பல்வேறு தனியார் நிறுவனங்களில் உயர்ந்த ஊதியத்துடன் வேலைவாய்ப்புப் பெற்றுப் பயனடைந்தவர்களில் 5 நபர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கேடயங்களை வழங்கிப் பாராட்டி வாழ்த்தினார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தை, நன்றியை நான் முதலில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

"முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்…" உங்களால் மறக்க முடியாத குரல் இது. இரண்டாண்டுகளுக்கு முன்பு இதே நாளில் தமிழ்நாட்டு மக்களாகிய உங்களுடைய அன்போடு, ஆதரவோடு முதலமைச்சர் பொறுப்பில், தமிழ்நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டுசெல்ல என்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டேன். மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை நிறைவேற்ற முடியுமா, எடுத்துக் கொண்ட பணியை முடித்துக் காட்ட முடியுமா என்று என்னை நானே கேட்டுக்கொண்டபோது, என் மனதிற்கு தெம்பும் தைரியமும் கொடுத்தவர்கள் மூன்று பேர்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்.

ஆயிரமாயிரம் ஆண்டுகளாக சனாதனத்தால் அடிமைப்பட்டுக்கிடந்த தமிழ் மக்களை - திராவிட இனத்தைத் தன்னுடைய 95 வயது வரையில் ஓயாத உழைப்பால் சுயமரியாதை கொண்ட சமுதாயமாக மாற்றிக் காட்டியவர் தந்தைப் பெரியார் அவர்கள்.

சுயமரியாதை பெற்ற இனம் தனக்கான உரிமைகளைப் பெற்றாக வேண்டும் என்ற உயர்ந்த இலட்சியத்தோடு ஏழை, எளிய மக்களுக்கான அரசியல் இயக்கத்தை உருவாக்கி, ஆட்சி அமைத்துக் காட்டியவர் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

தன்னுடைய ஆட்சிக்காலத்தில் நிறைவேற்றிக் காட்டக்கூடிய சாதனைகளை, திட்டங்களை, அதன் மூலமாக ஆட்சி என்பதற்கான இலக்கணம் என்ன என்பதை இந்தியாவிற்கே வழிகாட்டியவர் நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்.

இவர்கள் மூன்றுபேரையும் மனதில் நினைத்துப் பார்த்தேன். அவர்களோடு அண்ணல் அம்பேத்கர், பெருந்தலைவர் காமராஜர், தோழர் ஜீவானந்தம், கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத் உள்ளிட்டவர்களும் என் மனதில் தோன்றினார்கள். ஏற்றுக்கொண்ட பொறுப்பை நிறைவேற்றிக் காட்ட முடியும் என்ற தன்னம்பிக்கையும் தைரியமும் தானாக எனக்கு வந்து விட்டது.

மக்களுக்காகப் பணியாற்றுவது என்பது எனக்குப் புதிதல்ல. பிறந்து வளர்ந்ததே பொதுவாழ்க்கையுடைய அத்தனை தன்மைகளையும் எதிர்கொண்ட கோபாலபுரம் வீட்டில்தான்! சிறுவனாக, இளைஞனாக வளர்ந்தபோதே திராவிட இயக்கத்துக்கு என்னை ஒப்படைத்துக் கொண்டு, தலைவர் கலைஞருடைய கட்டளையை மீறாமல் பணியாற்றி வந்திருக்கிறேன். 50 ஆண்டுகளுக்கு மேலாக அரசியலில் இருக்கிறேன், பல சோதனைகளை நான் சந்தித்திருக்கிறேன்.

“எதையும் தாங்கும் இதயம் வேண்டும்” என்றார் பேரறிஞர் அண்ணா.

“இதையும் தாங்கிப் பழகு” என்று எனக்குக் கற்றுக் கொடுத்தார் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

தன்னைத் தாக்குபவர்களையும் தாங்கி நிற்கிற நிலம் போன்றது நம்முடைய திராவிட இயக்கம். அதனால்தான், சட்டமன்றத் தேர்தலில் நான் வெற்றிபெற்று, அந்த வெற்றிச் சான்றிதழைப் பெற்றுக்கொண்டு முத்தமிழறிஞர் தலைவர் கலைஞருடைய ஓய்விடத்திற்குச் சென்று அங்கே அதைக் காணிக்கையாக்கி, அப்போது நான் சொன்னேன், “எங்களுக்கு வாக்களித்தவர்களுக்கு

மட்டுமல்ல, வாக்களிக்காதவர்களுக்கும் சேர்த்துச் செயல்படக்கூடிய அரசாக எங்கள் அரசு இருக்கும்" என்று பத்திரிகையாளர்களிடம் அன்றைக்கு நான் சொன்னேன். தமிழ்நாட்டில் உள்ள அத்தனை பேருக்கும்தான் நான் முதலமைச்சர். இது தமிழ்நாட்டுமக்கள் தந்த பொறுப்பு. அவர்களுக்காகப் பணியாற்ற வேண்டியது என்னுடைய கடமை. என்னால் முடிந்த அளவு பணியாற்றுகிறேன், ஓய்வின்றிப் பணியாற்றுகிறேன், என் சக்திக்கு மீறிப் பணியாற்றுகிறேன். அந்த உழைப்பின் பயனைத் தமிழ்நாட்டு மக்களான உங்களுடைய முகங்களில் பார்க்கிறேன். நீங்கள் பேசுகிற வார்த்தைகளில் கவனிக்கிறேன். நீங்கள் காட்டுகின்ற அன்பில் கரைகிறேன். நீங்கள் என்னை நம்பி ஒப்படைத்த பணியைச் சரியாக செய்து கொண்டிருக்கிறேன் என்பது என் மனதிற்கு நிம்மதியைத் தருகிறது.

இந்த இரண்டு ஆண்டுகளில் நம்முடைய அரசு நிறைவேற்றிய திட்டங்களால் பயனடைந்தவர்கள் இங்கே பேசும்போது, ஒவ்வொரு வார்த்தையும் உதட்டிலிருந்து வரவில்லை, அவர்களுடைய இதயத்தில் இருந்து வருகிறது.

திராவிட மாடல் என்றால் என்ன என்று கேட்கிறவர்களுக்கு நான் பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. உங்களுடைய மகிழ்ச்சியும் உங்களுடைய புன்னகையுமே பதில் சொல்லிக் கொண்டிருக்கிறது!

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்று திருக்குறள் சொல்கிறது.

எல்லோருக்கும் எல்லாம் என்று சொல்வது திராவிட மாடல்.

மக்களைச் சாதியால், மதத்தால், அதிகாரத்தால், ஆணவத்தால் பிரித்துப் பார்க்கிறவர்களுக்குத் திராவிட மாடல் என்றால் புரியாது!

தமிழ்நாட்டுக்கு விடியல் ஏற்படும் என்ற நம்பிக்கையோடு திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வாக்களித்து ஆட்சியில் உட்கார வைத்த மக்களுக்கு, அறிவார்ந்த தமிழ்நாட்டு மக்களுக்குத் திராவிட மாடல் என்றால் என்ன என்பது நன்றாகப் புரியும்!

"மக்களுக்குச் சம்பந்தமில்லாத பதவியில் இருக்கின்றவர்களைப் பற்றிக் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. நம் கடமையை செய்தால் போதும் என்கிற குறிக்கோளுடன் நான் செயல்படுகிறேன்."

சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னால் 'உங்கள் தொகுதியில் ஸ்டாலின்' என்ற பயணத்தைத் தமிழ்நாட்டில் இருக்கிற 234 தொகுதிகளுக்கும் நான் நடத்தினேன். மக்களிடம் மனுக்களைப் பெற்றபோது நான் சொன்னது, "உங்கள் கவலைகளை – உங்கள் கோரிக்கைகளை - உங்கள் எதிர்பார்ப்புகளை – என்னிடம் ஒப்படைத்திருக்கிறீர்கள்." இனி இதெல்லாம் என்னுடைய கவலைகள், என்னுடைய கோரிக்கைகள், என்னுடைய எதிர்பார்ப்புகள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைந்ததும் இதற்கெல்லாம் 100 நாட்களில் தீர்வு காண்பேன்"- என்று உறுதி கொடுத்தேன். சொன்னதைச் செய்வதுதான் திராவிட மாடல். மனு கொடுத்தவர்கள் எங்களுக்கு வாக்களித்தவர்களா? வாக்களிக்காதவர்களா? என்று பிரித்துப் பார்க்கவில்லை. தி.மு.க. ஜெயித்த தொகுதியா? தோற்ற தொகுதியா? என்று பார்க்கவில்லை. பெரும்பாலான கோரிக்கைகளை நாங்கள் இன்றைக்கு நிறைவேற்றியிருக்கிறோம்.

இன்றைக்குக்கூட இந்த நிகழ்ச்சியில் சாதனைகளை மட்டும் சொல்லுகிற நிகழ்ச்சியாக இல்லாமல் 'புதுமைப் பெண்' – 'நான் முதல்வன்' திட்டங்களின்கீழ் ஆணைகளும், ஒரு இலட்சம் பயனாளிகளுக்கு முதியோர் உதவித்தொகைகளும் வழங்குகின்ற விழாவாகவும் ஏற்பாடு செய்திருக்கிறோம்.

செயின்ட் ஜார்ஜ் கோட்டை என்பது, இரண்டாண்டுக் காலமாக ஏழை மக்களின் நலன் காக்கக்கூடிய குடியிருப்பாக மாறியிருக்கிறது. தலைமைச் செயலகம் என்பது தமிழ்நாட்டு மக்கள் ஒவ்வொருவரையும் முன்னேற்ற உழைக்கும் முதன்மைச் செயலகமாக மாறியிருக்கிறது.

இந்த ஆட்சியின் முகம் என்பது அதிகாரம் முகம் அல்ல, அன்பு.

இந்த ஆட்சியின் முகம் என்பது ஆணவம் அல்ல, ஜனநாயகம்.

இந்த ஆட்சியின் முகம் என்பது அலங்காரமல்ல, எளிமை.

இந்த ஆட்சியின் முகம் என்பது சர்வாதிகாரமல்ல, சமத்துவம்.

இந்த ஆட்சியின் முகம் என்பது சனாதனமல்ல, சமூகநீதி.

அதனால்தான் சிலரால் விமர்சிக்கப்படுகிறது. பலரால் விரும்பப்படுகிறது.

நமது ஆட்சி என்பது, சமூகநீதி - சமநீதி - சுயமரியாதை – சமதர்மம் - சகோதரத்துவம் ஆகிய உயரிய பண்பாட்டின் அடிப்படையில் அமைக்கப்பட்டிருக்கக்கூடிய ஆட்சி!

இரண்டு ஆண்டுகளை முடித்துவிட்டு, இப்போது மூன்றாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறோம். தமிழ்நாட்டில் வாழும் எட்டு கோடி மக்களும் ஏதாவது ஒரு விதத்தில் நன்மையை அடைந்திருக்கும் ஆட்சியாக நமது திராவிட மாடல் ஆட்சி அமைந்திருக்கிறது.

உங்கள் வீட்டில் குழந்தைகள் இருந்தார்கள் என்றால், அந்தக் குழந்தைகளுடைய ஊட்டச்சத்தை உறுதி செய்யக்கூடிய திட்டப்படி சத்தான உணவை நம் அரசு வழங்குகிறது!

உங்கள் வீட்டில் அரசுப் பள்ளியில் படிக்கின்ற ஒரு மாணவனோ - மாணவியோ இருந்தால், அவர்களுக்குக் காலைச் சிற்றுண்டியை நம் அரசு வழங்குகிறது!

உங்கள் வீட்டில் அரசுப் பள்ளியில் படித்து, காலேஜுக்குப் போகின்ற ஒரு மாணவி இருந்தால், புதுமைப்பெண் திட்டம் மூலமாக அவர்களுக்கு மாதம் மாதம் ஆயிரம் ரூபாயை நம் அரசு வழங்குகிறது!

உங்கள் வீட்டில் இருக்கின்ற எல்லா பெண்களுக்கும் பஸ்ஸில் கட்டணமில்லாமல் பயணம் செய்கிற வசதியை நம் அரசு உருவாக்கித் தந்திருக்கிறது!

உங்கள் வீட்டில் கல்லூரிக்குப் போகிற மாணவர் இருந்தால், அவரை எல்லா விதத்திலும் வேலைவாய்ப்புக்குத் தகுதிப்படுத்த, 'நான் முதல்வன்' திட்டம் மூலமாக நம் அரசு பயிற்சி தருகிறது!

விவசாயி இருந்தால், அவருக்கு நம் அரசு இலவச மின் இணைப்புக் கொடுக்கிறது!

மகளிருக்குச் சுயஉதவிக் குழுக்களின் மூலமாக அதிக கடனுதவியை நம் அரசுதான் கொடுத்துக் கொண்டிருக்கிறது!

திருநங்கையர்-மாற்றுத்திறனாளிகள்–கோயில் பூசாரிகள் - மீனவர்கள் - தொழிலாளர்கள் என அனைத்து வகைப்பட்ட மக்களுக்கும் உதவிகளை வழங்கிக் கைதூக்கி விடுகிறது நம் அரசு!

அரசு ஊழியர்களின் நலன் காத்து அவர்களைப் பாதுகாத்து வேலைவாய்ப்புகளை உருவாக்கியும் தருகிறது நம் அரசு!

புதிய தொழில் முதலீடுகள் மூலமாக ஏராளமான வேலைவாய்ப்புகளை உருவாக்கி வருவது நம்முடைய அரசு!

ஆண்-பெண், கிராமம்-நகரம், குழந்தைகள்-முதியோர் என எல்லா வகையிலும் எல்லோருக்குமான வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு செயல்படுவது நமது அரசு.

மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்றார் பேரறிஞர் அண்ணா. மக்களின் மகிழ்ச்சியே என்னுடைய மகிழ்ச்சி.

மாதவரம் பால்பண்ணை அருகே தள்ளுவண்டி உணவுக்கடை வைத்திருந்தவர் மேரியம்மாள். கைம்பெண் உதவித்தொகை கேட்டு கடந்த ஆட்சியில் விண்ணப்பித்து அவருக்கு அது கிடைக்கவில்லை. நம்முடைய ஆட்சி வந்ததும், மாதம்தோறும் ரூ.1,000 அவருக்கு உதவித்தொகையாக வழங்கப்படுகிறது. மேரியம்மாளின் மகிழ்ச்சிதான், என்னுடைய மகிழ்ச்சி!

தரமணியைச் சேர்ந்த சஜீத், செவித்திறன் குறைபாடு கொண்ட சிறுவன். அந்தக் கருவியை வாங்குவதற்குப் பணமில்லை. அந்தச் சிறுவனுக்கு நானே என் கையால், காதொலிக் கருவியைப் பொருத்திவிட்டேன். அருகில் இருந்து வரக்கூடிய சத்தங்களையெல்லாம் கேட்டு சஜீத் சிரித்தார், அந்த அழகைப் பார்த்தபோது எனக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது!

டானியா என்ற பள்ளிச் சிறுமியைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர். அவருக்கு இப்போது ஒன்பது வயது. நான்காம் வகுப்புப் படித்துக் கொண்டிருக்கிறார்கள். முகச்சிதைவு நோய் காரணமாகப் பாதிக்கப்பட்டிருந்த அந்தச் சிறுமியை, கூட படிக்கிற சில மாணவர்கள் புறக்கணிக்கிறார்கள் என்று செய்தி கிடைத்தது. உடனே அவரை மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை கொடுத்தோம். இப்போது மகிழ்ச்சியாகப் பள்ளிக்குச் சென்று வருகிறார்கள். அவர்களுடைய வீட்டிற்கே நேரில் சென்று அந்தச் சிறுமியின் முகத்தில் அரும்பிய அந்தப் புன்னகையைப் பார்த்து, வாழ்த்தி விட்டு வந்தபோது எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

மெரினா கடலில் கால் நனைக்கும்போது மாற்றுத்திறனாளி பவானி கணேஷ் அவர்கள் அடைந்த மகிழ்ச்சிதான் என்னுடைய மகிழ்ச்சி.

விளிம்பு நிலை மக்களாக இருக்கிற இருளர் – நரிக்குறவர் மக்களுக்கும் என்ன தேவை என்று கவனித்து எல்லா மாவட்டத்திலும் அவர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுத்து, அவர்களுடைய சுயமரியாதையையும் மாண்பையும் நிலைநாட்டியிருக்கிறோம். அவர்களுடைய வீட்டிற்கே சென்று நான் காலை உணவு சாப்பிட்டேன். சாப்பிட்டபோது அந்த உணவு காரமாக இருந்தது. ஆனால் அதைவிட அன்பு அதிகமாக இருந்தது, அந்த அன்புதான் இன்றைக்கு நம் அரசு இந்தப் பெயரை, இந்தச் சிறப்பைப் பெற்றிருக்கிறது. மக்களுடைய முகத்தில் மகிழ்ச்சியைச் செயற்கையாக வர வைக்க முடியாது. இதயம் மகிழ்ந்தால்தான் இயற்கையாக முகமும் மலரும்.

நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில், கோடிக்கணக்கான மக்களுடைய இதயத்தில் மகிழ்ச்சியும், முகத்தில் மலர்ச்சியும் நிறைந்திருக்கிறது. அதை, நான் ஒவ்வொரு மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்கிறபோது கவனிக்கிறேன். மாவட்டம்தோறும் நடந்த நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாக்களின் மூலமாக,

* வீட்டுமனைப்பட்டா

* கல்விக் கடனுதவி

* சுயதொழில் தொடங்கக் கடனுதவி

* கூட்டுறவுக் கடன்கள்

* நகைக் கடன்கள்

* மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்குக் கடன்கள்

* உழவர்களுக்குப் புதிய இலவச மின் இணைப்பு

* பயிர்க்கடன்கள்

* புதிய ஓய்வூதிய ஆணைகள்

* மாணவ, மாணவியர்க்கு விலையில்லாச் சீருடைகள், காலணிகள், புத்தகப் பைகள்

* உழவர்களுக்கு மரக்கன்றுகள்

* வேளாண் பொருள் தொகுப்புகள்

* கோவில் பணியாளர்களுக்கு ஊக்கத் தொகைகள்

* சாலைகள்

* மேம்பாலங்கள்

* குடியிருப்புகள்

* சத்துணவு மையங்கள்

* சமூக நலக் கூடங்கள் –

என்று எத்தனையோ திட்டங்களை மாவட்டந்தோறும் - நகரங்கள் தோறும் நாம் செய்து கொடுத்திருக்கிறோம். துறைகள்தோறும் சாதனைகளைச் செய்து காட்டிக் கொண்டிருக்கிறோம்.

சென்ற ஆட்சியில் சீரழிந்து கிடந்த அரசு, அந்த அரசினுடைய நிருவாகம், அதை சீர் செய்ய பல்வேறு நடவடிக்கைகளை இன்றைக்கு நாம் எடுத்து வருகிறோம்.

தலைமைச் செயலகத்தில் என் தலைமையில் இதுநாள் வரை 350க்கும் மேற்பட்ட துறைரீதியான ஆய்வுக் கூட்டங்கள் நடந்து பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டிருக்கிறது. ஆட்சிப் பொறுப்பேற்று இதுநாள் வரை 6,905 கோப்புகளில் கையெழுத்திட்டிருக்கிறேன். அதோடு நிற்கவில்லை. கோட்டையில் தீட்டுகிற திட்டங்கள் கடைக்கோடி மனிதருக்கும் சென்று சேர்வதை உறுதிப்படுத்த 'கள ஆய்வில் முதலமைச்சர்' என்ற திட்டத்தைத் தொடங்கி இதுவரை நான்கு கட்டங்களில், 16 மாவட்டங்களில் அரசு அதிகாரிகளுடன் ஆய்வு நடத்தியிருக்கிறேன். இப்படி இரண்டாண்டு சாதனைகளை முழுவதுமாகச் சொல்லி முடிக்க வேண்டுமென்றால், இன்னும் இரண்டு நாட்கள் நீங்கள் இங்கேயே தங்கி இருக்க வேண்டும்.

சொன்னதைச் செய்வோம்- செய்வதைச் சொல்வோம் என்பது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய நடைமுறை. அப்படித்தான் ஆட்சி நடத்தினார். ஆனால் நமது திராவிட மாடல் அரசு, சொல்லாததையும் செய்வோம் - சொல்லாமலும் செய்வோம் என்கிற வேகத்தோடு செயல்பட்டு வருகிறது.

முதலமைச்சராக நான் பொறுப்பேற்றபோது கடந்த ஆட்சியாளர்கள் விட்டுச் சென்ற தமிழ்நாட்டினுடைய பொருளாதார நிலைமை என்ன? அரசாங்க கஜானாவினுடைய நிலைமை என்ன? அதையெல்லாம் மாற்றி, இருண்டு கிடந்த தமிழ்நாட்டில் விடியலை உண்டாக்கியிருக்கிறோம்.

ஒன்றிய அரசிடம் இருந்து தமிழ்நாட்டினுடைய உரிமைகளைக் காப்பாற்ற என்ன செய்ய வேண்டுமோ அதையெல்லாம் செய்து கொண்டு வருகிறோம். வளமான தமிழ்நாட்டை - இந்தியாவிலேயே முதன்மையான மாநிலமாகத் தமிழ்நாட்டை- எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கும் தமிழ்நாட்டை உருவாக்கிவிட முடியும் என்கிற நம்பிக்கை நமக்கு அதிகமாக இருக்கிறது.

உங்களுடைய மகிழ்ச்சியும், வாழ்த்துக்களும் நம்முடைய இலக்கை நோக்கி என்னை இன்னும் அதிகமாக உழைக்க வைக்கும். கொடுத்த வாக்குறுதிகளை முழுமையாக நிறைவேற்ற உழைப்பேன். உங்களில் ஒருவனாக, உங்களோடு ஒருவனாக என்றும் இருப்பேன். ஆட்சியின் ஐந்தாண்டுகளும் உங்களின் நலனுக்காக இருக்கும். அதன்பிறகும், உங்கள் ஆதரவோடு தொடரும் என்ற நம்பிக்கையோடு என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்.

விழுப்புரம் மாவட்டத்தில்

"கள ஆய்வில் முதலமைச்சர் திட்டம்"

"கள ஆய்வில் முதலமைச்சர்" திட்டத்தின்கீழ், விழுப்புரம், கடலூர் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களின் தொழில் மற்றும் வணிகச் சங்கப் பிரதிநிதிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள், மீனவப் பிரதிநிதிகளுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்துரையாடல்.

மாவட்டங்களுக்குச் சென்று நிருவாகப் பணிகளையும், வளர்ச்சி மற்றும் நலத்திட்டப் பணிகளையும் நேரடியாக ஆய்வு செய்யும் "கள ஆய்வில் முதலமைச்சர்" திட்டத்தின்கீழ், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் முதன்முறையாக வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர், திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் அரசுத் திட்டங்கள் குறித்து 01.02.2023, 02.02.2023 ஆகிய தேதிகளில் வேலூர் மாவட்டத்திற்கு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். அதனைத் தொடர்ந்து, சேலம், கிருஷ்ணகிரி, தருமபுரி மற்றும் நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் 15.02.2023, 16.02.2023 ஆகிய தேதிகளில் சேலம் மாவட்டத்திற்கு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர், மதுரை, இராமநாதபுரம், திண்டுக்கல், சிவகங்கை, தேனி மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் அரசுத் திட்டங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்வதற்காக 05.03.2023, 06.03.2023 ஆகிய தேதிகளில் மதுரை மாவட்டத்திற்கு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

அதன் தொடர்ச்சியாக 26.04.2023 அன்று விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களில் "கள ஆய்வில் முதலமைச்சர்" திட்டத்தின்கீழ் ஆய்வு மேற்கொள்வதற்காக விழுப்புரத்திற்கு வருகை தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், ஒலக்கூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு நேரில் சென்று திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து, விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி மாவட்டங்களைச் சேர்ந்த விழுப்புரம் மாவட்ட குறு மற்றும் சிறு தொழில் சங்கம், திண்டிவனம் வெண்மணியாத்தூர் சிட்கோ தொழில்முனைவோர் சங்கம், கடலூர் மாவட்ட விவசாயச் சங்கங்களின் கூட்டமைப்பு, ஈஐடி பாரி கரும்பு விவசாயிகள் சங்கம், சிறு, குறு முதலீட்டாளர்கள், மீனவப் பிரதிநிதிகள், கள்ளக்குறிச்சி மற்றும் சின்ன சேலம் அரிசி ஆலை அதிபர்கள் சங்கங்கள், கள்ளக்குறிச்சி மாவட்ட சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழிலதிபர்கள் சங்கம், பல்வேறு விவசாய சங்கப் பிரதிநிதிகள் போன்ற சங்கங்களின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி அவர்களின் கோரிக்கைகள் குறித்துக் கேட்டறிந்தார்.

இந்தக் கலந்துரையாடலின்போது, விழுப்புரம் மாவட்ட குறு மற்றும் சிறு தொழில் சங்க நிருவாகிகள் இந்தியாவிலேயே தமிழ்நாட்டைத் தொழில் துறையில் முன்னணி மாநிலமாக விளங்கிட பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவதற்காகவும், வெளிநாட்டு தொழில் நிறுவனங்களை தமிழ்நாட்டில் தொழில் தொடங்கிட நடவடிக்கை எடுப்பதுடன் அதற்கான கட்டமைப்பு வசதிகளையும் ஏற்படுத்தி வருவதற்காகவும் சங்கத்தின் சார்பில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவித்தார்கள். மேலும், சங்கத்தின் சார்பில் விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை ஆகிய மாவட்ட இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் வகையில் விழுப்புரம் நகரத்தில் ஐடி பார்க் அமைக்க வேண்டும் என்றும், கனரகத் தொழில் நிறுவனங்கள் விழுப்புரம் மாவட்டத்தில் அமைத்திட வேண்டும் என்றும், பாசன விளைநிலம் இல்லாத பகுதிகளைக் கண்டறிந்து சிட்கோ மூலம் தொழில் பேட்டை அமைத்திட வேண்டும் என்றும்,தொழில்முனைவோர்களுக்கு கருத்தரங்கு மற்றும் பயிற்சிகள் அளித்திடவும், உற்பத்தி செய்த பொருட்களைக் காட்சிப்படுத்திடவும் வணிக வளாகம் கட்டித்தர வேண்டும் என்றும், பொற்கொல்லர்களுக்குப் பாதுகாப்பான தொழில் பூங்கா அமைத்துத் தர வேண்டும் போன்ற பல்வேறு கோரிக்கைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் வைத்தனர்.

கள்ளக்குறிச்சி குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழிலதிபர்கள் சங்கத்தின் சார்பில் உளுந்தூர்பேட்டையில் ரூ.2,302 கோடியில் காலணித் தொழிற்சாலை அமைப்பதற்குப் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டு மாவட்ட வளர்ச்சிக்கு வித்திட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. மேலும், உளுந்தூர்பேட்டை அருகே உள்ள ஆசனூர் சிட்கோ தொழிற்பேட்டையில் தெருவிளக்குகளைச் சீர் செய்திடவும், உற்பத்தித் தொடங்கிய தொழில் நிறுவனங்களுக்கு விற்பனை பத்திரம் வழங்கிடவும் ஆவன செய்திட வேண்டும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைக்கப்பட்டது.

திண்டிவனம் வெண்மணியாத்தூர் சிட்கோ தொழில்முனைவோர் சங்கத்தின் சார்பில் திண்டிவனத்தில் ESI மருத்துவமனை அமைத்திட வேண்டும் என்றும், திண்டிவனம் சிட்கோ-விற்குத் தனி துணை மின்நிலையம் அமைத்திட வேண்டும் என்றும் கோரிக்கை வைத்தனர்.

விவசாய சங்கங்களின் சார்பில் அனைத்துக் கால்வாய்களையும் தூர்வாருவதற்கு ஆவன செய்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்குத் தங்களது நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர். மேலும், கடல்நீர் ஊடுருவலைத் தடுக்க கொள்ளிடம் ஆற்று முகத்துவாரங்களில் தரைமட்ட தடுப்பணை அமைக்க வேண்டும், முந்திரி, வாழை, பலா போன்ற வேளாண் விளை பொருட்களை மதிப்புக்கூட்டி வருவாய் ஈட்ட தொழில் சார்ந்த திட்டங்களை உருவாக்க வேண்டும், கரும்பு விவசாயத்திற்கான சொட்டுநீர்ப் பாசனத்திற்கு வழங்கப்படும் மானியத்தை ஏழு ஆண்டுகளுக்கு ஒரு முறை என்பதை மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை என்று வழங்க வேண்டும், நியாய விலைக்கடைகளில் பாரம்பரிய அரிசி வகைகள் மற்றும் அனைத்துச் சிறு தானியங்களை விற்பனை செய்திட வேண்டும், நெல், மணிலா, பயறு வகை நுண்ணூட்டங்களுக்கு வழங்கப்படும் மானியம் போன்று தென்னை நுண்ணூட்டங்களுக்கும் மானியம் வழங்கிட வேண்டும், தென்னை விவசாயிகளுக்குத் தென்னங்காய்களை உலர்த்திட உலர்களங்களைப் பெரிய அளவில் அமைத்திட ஆவன செய்திடவேண்டும், உளுந்து சார்ந்த தொழிற்சாலைகளை உளுந்தூர்பேட்டையில் அமைத்திட வேண்டும், பெரியசெவலையிலிருந்து சிவப்பட்டினம் வரை 15 கிலோ மீட்டர் தூரத்திற்குச் செல்லும் கெடிலம் ஆற்றில் தடுப்பணைகள் கட்ட வேண்டும், மக்காச்சோளம் மற்றும்

மரவள்ளி சார்ந்த தொழிற்சாலை சின்னசேலம் மற்றும் கள்ளக்குறிச்சி பகுதிகளில் அமைத்திட வேண்டும், விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், உப்புவேலூர் கிராமத்தில் நிரந்தரமாக ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அமைக்க வேண்டும், செஞ்சியில் வேளாண் உற்பத்திக் கருவிகள் நிலையம் அமைக்க வேண்டும், சிறுதானிய விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் தனியாகக் கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும், கம்பு, கேழ்வரகு, தினை போன்ற சிறுதானியங்களின் மதிப்புக்கூட்டி சத்து மாவுகள் தயாரிக்கும் அலகுகள் நிறுவிட வேண்டும், செயற்கை உரப் பயன்பாட்டைத் தடுக்க பசுந்தாள் விதை உற்பத்தி செய்து, விவசாயிகளுக்கு வழங்கிட விழுப்புரம் மாவட்டத்தை விதை உற்பத்தி மண்டலமாக அறிவிக்க வேண்டும், விழுப்புரம் மாவட்டத்தில் வேளாண் கல்லூரி அமைக்க வேண்டும், திண்டிவனத்திலும் செஞ்சியிலும் நெல் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க வேண்டும் போன்ற பல்வேறு கோரிக்கைகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் வைக்கப்பட்டது.

தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்புச் சார்பில் 40 வேளாண் விளைபொருட்களுக்குச் சந்தைக் கட்டண வசூலை இரத்து செய்ததற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. மேலும், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் மரச்சிற்பம் செதுக்கும் கலைஞர்களுக்கு அரசு மானியத்துடன் நவீன தொழில்நுட்பங்களைக் கொண்ட பொதுவசதி மையம் அமைத்திட வேண்டும் என்று கோரிக்கை வைக்கப்பட்டது.

அரிசி ஆலை அதிபர்கள் சங்கத்தின் சார்பில் அரிசி ஆலைகளுக்கு உச்ச நேர மின் கட்டணத்தில் இருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்று கோரிக்கை வைக்கப்பட்டது.

மீனவச் சங்கப் பிரதிநிதிகள் சார்பில் மீன்பிடித் தடைக்காலத்தில் மீனவக் குடும்பங்களுக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகையினை உயர்த்தி வழங்கிட வேண்டும், மீன்பிடி விசைப்படகு மற்றும் இயந்திரம் பொருத்திய நாட்டுப்படகுகளுக்கு அரசினால் வழங்கப்படும் விற்பனை வரி விலக்களிக்கப்பட்ட மானிய எரியெண்ணெயின் அளவினை உயர்த்தி வழங்கிட வேண்டும், கடலூர் மாவட்ட மீனவர்கள் பயன்பெறும் வகையில் நல்லவாடு, சாமியார்பேட்டை, சின்னூர் வடக்கு, தாண்டவராயன்சோழகன்பேட்டை கிராமங்களில் புதிய வலை பின்னும் கூடம், மீன் ஏலக்கூடம் கட்டித்தர வேண்டும் போன்ற பல்வேறு கோரிக்கைகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் வைக்கப்பட்டது.

பல்வேறு சங்கங்களின் கோரிக்கைகளைக் கேட்டறிந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அவற்றைப் பரிசீலித்து உரியவற்றை நிறைவேற்றித் தருவதாக அவர்களிடம் தெரிவித்தார்.

ஒலக்கூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஆய்வு

“கள ஆய்வில் முதலமைச்சர்” திட்டத்தின்கீழ் விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டுவரும் அரசுத் திட்டங்களை ஆய்வு செய்வதற்காக விழுப்புரம் செல்லும் வழியில், விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், ஒலக்கூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 26.04.2023 அன்று நேரில் சென்று திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஊராட்சி ஒன்றிய அலுவலர்களிடம், கோடைக் காலத்தில் கிராமப் பகுதிகளில் குடிநீர்ப் பிரச்சினை இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும், பொதுமக்களுக்கு எவ்வித சிரமமின்றிக் குடிநீர்க் கிடைத்திட தக்க முன்னேற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். முதலமைச்சர் கிராமச் சாலைத் திட்டத்தில் நடைபெற்று வரும் பணிகள் குறித்தும், ஜல்ஜீவன் திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட பணிகளின் முன்னேற்றம் குறித்தும் ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் இந்த ஒன்றியத்திற்குட்பட்ட 52 பஞ்சாயத்துகளிலும் வேலை நடப்பதை உறுதி செய்ய வேண்டும் என்றும், அவர்களுக்கான ஊதியத்தை எவ்வித தாமதமின்றி உடனுக்குடன் வழங்கிட வேண்டும் என்றும் உத்தரவிட்டார். பின்னர், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டப் பதிவேட்டினைப் பார்வையிட்டு ஆய்வு செய்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இப்பதிவேட்டில் பணிபுரியும் நபர்களின் பெயர், வேலை செய்யும் நாட்கள், வழங்கப்படும் ஊதியம் ஆகியவை குறித்த விவரங்கள் முறையாக பராமரிக்கப்பட வேண்டும் என்று உத்தரவிட்டார்.

தொடர்ந்து, கலைஞர் வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் வீடு இல்லாதவர்களுக்கு முன்னுரிமை அளித்து வீடுகளைக் கட்டித்தர வேண்டும் என்றும், இத்திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட அனைத்து வீடு கட்டும் பணிகளையும் விரைந்து முடித்திட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

பரனூர் அரசு மறுவாழ்வு இல்லத்தில் ஆய்வு

செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள பரனூரில் தொழுநோயாளிகளுக்கான மறுவாழ்வு இல்லம் 1971ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இந்த அரசு மறுவாழ்வு இல்லத்தில் தற்போது 61 ஆண்கள், 58 பெண்கள், என மொத்தம் 119 நபர்கள் வசித்து வருகின்றனர்.

“கள ஆய்வில் முதலமைச்சர்” திட்டத்தின்கீழ் விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் அரசுத் திட்டங்களை ஆய்வு செய்வதற்காக விழுப்புரம் செல்லும் வழியில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 26.04.2023 அன்று செங்கல்பட்டு மாவட்டம், பரனூரில் உள்ள மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் அரசு மறுவாழ்வு இல்லத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இவ்வில்லத்தில் வசிப்பவர்களிடம் இங்குள்ள வசதிகள் குறித்துக் கேட்டறிந்தார். மேலும், இல்லவாசிகளுக்குப் போர்வைகள் மற்றும் உடைகளை வழங்கினார்.

பரனூர் அரசு மறுவாழ்வு இல்லத்திற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் அளித்து வருவதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்த இல்லவாசிகள், உணவூட்டுச் செலவினத்தை 42 ரூபாயிலிருந்து 100 ரூபாயாக உயர்த்தியமைக்காக தங்களது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொண்டனர். மேலும், 5ஆவது வார்டில் தண்ணீர்த் தொட்டி அமைக்கும் பணியினைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்றும், குப்பை வண்டி வழங்கிட வேண்டும் போன்ற கோரிக்கைகளை வைத்தனர். அவர்களது கோரிக்கைகளைக் கனிவுடன் கேட்டறிந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்,

அவற்றை உடனடியாக நிறைவேற்றிட உரிய நடவடிக்கை எடுக்குமாறு அரசு அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

ஆய்வுக் கூட்டத்தில் ஆற்றிய உரை

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

உங்களது எல்லைகளுக்கு உட்பட்ட மாவட்டங்களில் சட்டம் ஒழுங்கையும் - பொது அமைதியையும் நிலைநாட்டி வரும் உங்கள் அனைவருக்கும் முதலில் என்னுடைய பாராட்டினைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஒரு மாநிலத்தின் நீண்ட கால வளர்ச்சிக்குப் பலகாரணிகள் இருந்தாலும், அங்கு நிலவும் சட்டம் - ஒழுங்கு தான் அவற்றில் மிக முக்கியமானதாக அமைகிறது. அமைதியான மாநிலத்தில் சமூகப் பொருளாதார வளர்ச்சிகள் தொய்வுகளின்றி ஏற்படும். இன்றைய தினம் தமிழ்நாட்டிற்கு பல்வேறுவிதமான புதிய தொழில் முதலீடுகள் எல்லாம் வந்துகொண்டிருக்கிறது. இதற்கு என்ன காரணம் கேட்டீர்களானால், அதற்கு நமது மாநிலம் அமைதியாக இருக்கிறது, சட்டம் ஒழுங்கு முறையாக பராமரிக்கப்படுகின்றது என்பதுதான் அர்த்தம். அதற்கு நீங்களெல்லாம் அடித்தளமாக இருந்து கொண்டிருக்கிறீர்கள்.

அதே நேரத்தில் சில சமயங்களில் சிறு பிரச்சினைகள் கூட ஆரம்ப கட்டத்தில் சரியான நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், அதுவே பின்னர் பெரிய பிரச்சினையாகப் போய்விடுகிறது. அந்தப் பிரச்சினைகள் குறித்த செய்திகள் மிக வேகமாகப் பரவி விடுகிறது. எனவே, சிறு சம்பவம் கூட கவனமாகக் கண்காணிக்கப்பட வேண்டும் என்பதில்தான் நீங்களெல்லாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

அடுத்தபடியாக, காவல் துறையினராகிய நீங்களும், மாவட்ட ஆட்சியர்களும், சமூக ஊடகங்களின் வீச்சினையும், அவை ஏற்படுத்தக்கூடிய தாக்கத்தினையும் உணர்ந்து செயல்படுமாறு கேட்டுக்கொள்கிறேன். உதாரணமாக, குறிப்பிட்ட வழக்கில் குற்றவாளியைக் கைது செய்து சிறையில் அடைத்திருப்பீர்கள், ஆனாலும் அந்தக்

குற்றச் சம்பவம் குறித்த வீடியோ பதிவு பெரிய சம்பவம் போல பரவி கொண்டிருக்கும். இந்தத் தொழில்நுட்ப யுகத்தைச் சமாளிப்பதும் மிகப்பெரிய சவால்.

எனவே, இதனைக் கருத்தில் கொண்டு, உங்கள் செயல்பாடுகள் குறித்துத் தவறான தகவல் பரப்பப்படும்போது நீங்கள் அதனை மறுத்துச் சரியான தகவலை ஊடகங்களுக்கு விரைந்து அளித்திட வேண்டும். மேலும், மாவட்ட அளவில் முக்கிய வழக்குகளில் நீங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளை ஊடகங்களுக்கு அளிப்பதால் அவை குறித்த வதந்திகள் பரப்பப்படுவது தவிர்க்கப்படும்.

குற்ற நிகழ்வுகளைப் பொறுத்தவரை, மாவட்ட காவல்துறைக்கு Q Branch உளவுத்துறை, சமூக ஊடகங்கள், மாவட்ட நிருவாகம் ஆகியவற்றின் மூலம் பெறப்படும் தகவல்களைச் சேர்த்துக் கூர்மையாக ஆய்வு செய்து முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். குற்றச் சம்பவம் நடக்காமல் தடுக்க இது பெரிதும் உதவும் என்று நான் சொல்லி வருகிறேன்.

இவ்வாறு, முன்கூட்டியே நீங்கள் மேற்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மூலமாகப் பல குற்றச்சம்பவங்கள் நடக்காமல் தவிர்க்க முடியும். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், சாதி, மத மோதல்கள், கூட்டு வன்முறைகள், திட்டமிட்ட கலவரங்கள் ஆகியவை சமீபகாலங்களில் நிகழவில்லை.

இந்த நிலை தொடரும் வகையில் நீங்கள் ரோந்துப் பணிகளைப் பரவலாக்க வேண்டும். உயர் அலுவலர்கள் களப்பணியில் காணப்படவேண்டும். அப்போதுதான் சார்நிலை அலுவலர்கள் மேலும், கவனமுடன் உற்சாகத்துடன் பணியாற்றுவார்கள்.

இளைஞர்கள் போதைப்பொருட்களுக்கு அடிமையாகாமல் தடுக்க வேண்டியது காவல்துறையின் கடமை. இதில், மாவட்ட ஆட்சியர்களின் பங்கும் முக்கியமானது. பள்ளிகள், கல்லூரிகளின் நிருவாகிகளுடன் தொடர்பில் இருங்கள். அவர்களிடம் விவரங்கள், புகார்கள் இருக்கலாம். அவற்றை நீங்கள் அறிய வேண்டும். மாணவர்களிடம் விழிப்புணர்வைத் தொடர்ந்து ஏற்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். போதைப்பொருட்களைப் பொறுத்தவரை, மிகமிகக் கடுமையான நடவடிக்கை தொடர்ந்து எடுக்கப்படவேண்டும். இது தமிழ்நாட்டின் எதிர்காலம் சம்மந்தப்பட்டது என்பதை நீங்கள் உணர வேண்டும்.

பெண்கள், குழந்தைகளின் பாதுகாப்பு மிகமிக முக்கியமானதாகும். இவர்களது பாதுகாப்பிற்குக் காவல் துறை முழுமையாக பொறுப்பேற்க வேண்டும். இவர்கள் மீதான குற்றங்களில் காலதாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். அவற்றில் சிறப்புக் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

சமூகக் குற்றங்கள் தடுப்பு, போதைப் பொருள் தடுப்பு ஆகிய இரண்டும் உங்கள் எல்லைக்குள் நடக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு காவல் ஆய்வாளரும் அவரது காவல் நிலைய எல்லைக்குள் இந்தக் குற்றங்கள் நடக்காமல் தடுத்துவிட்டாலே மாவட்டத்தில் முழுமையாக அமைதியை நிலைநாட்டிவிட முடியும். அவ்வாறு நடைபெற வேண்டுமானால் காவல் கண்காணிப்பாளர்களாகிய நீங்கள் காவல் நிலையங்களுக்குச் சென்று அடிக்கடி ஆய்வு மேற்கொண்டு, கொள்ளை, கொலை வழக்குகளின் விசாரணை நிலை குறித்துத் தொடர்ந்து ஆய்வு செய்ய வேண்டும். அத்துடன் நீங்கள் பொதுமக்கள் மற்றும் சேவை அமைப்புகளுடன் நல்லுணர்வுடன் இருக்க வேண்டும்.

காவல்துறை சிறப்பாகச் செயல்பட அனைவரின் ஒத்துழைப்பும் உங்களுக்குத் தேவை. அவைகளை நீங்கள் சரியாக பயன்படுத்திக்கொள்ளுங்கள். காவல்நிலைய மரணங்கள் இந்த ஆண்டில் இல்லை என்ற சூழலை உருவாக்கி உள்ளோம். இது தொடர வேண்டும். இதற்கு, காவல் கண்காணிப்பாளர்களின் கவனமான கண்காணிப்புத் தேவை.

அதேபோல், காவல் நிலையங்களுக்கு வருபவர்கள் கண்ணியமாக நடத்தப்படவேண்டும். பொதுமக்கள் பயமின்றிப் புகார் அளிக்கும் வகையில் உங்கள் காவல் நிலையங்கள் செயல்பட வேண்டும்.

காவல்துறை உங்களின் நண்பன் என்ற வாசகத்தை நாம் சொல்லாமல், காவல்துறை எங்கள் நண்பன்; என்று பொதுமக்கள் சொல்லும் அளவிற்கு நாம் நடந்துகொள்ள வேண்டும், நடந்துகொள்வீர்கள் என்ற நம்பிக்கையுடன் விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

"ஸ்காட்லாண்ட் யார்டு" காவல்துறைக்கு இணையாகச் சிறப்பாகப் பணியாற்றிவரும் தமிழ்நாடு காவல்துறை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை குறித்த மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளித்து ஆற்றிய உரை - 21.04.2023

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

நான், முதல்-அமைச்சர்! ஆனால், என்னுடைய துறையான உள்துறையின் மீதான மானியக் கோரிக்கைதான் அனைத்துத் துறைகளிலும் கடைசியாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இது ஏன் என்று உங்கள் அனைவருக்கும் தெரியும். அனைத்துத் துறைகளும் உங்கள் துறைதானே என்று நீங்கள் நினைப்பதால்தான், அப்படி எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்கு முதலில் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி அவர்கள், தனது துறையின் சார்பில் நடைபெற்ற மானியக் கோரிக்கை விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசியபோது முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் பேசிய ஒன்றைச் சுட்டிக் காட்டினார். பேரறிஞர் அண்ணாவின் அமைச்சரவையில் இருந்த அமைச்சர்களின் ஒவ்வொரு துறையையும் குறிப்பிட்ட தலைவர் கலைஞர் அவர்கள், நாம் வகிக்கக்கூடிய துறைகள் வேறுபட்டிருந்தாலும் நாம் அனைவரும் 'அண்ணாத்துரை'-யைச் சேர்ந்தவர்கள் என்று தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டதாக இங்கே எடுத்துச் சொன்னார். உண்மைதான்,

எனக்குத் தலைவர் கலைஞர் முதலில் வைக்க நினைத்த பெயர் என்னவென்றால், அய்யாத்துரை! எனவே, மாண்புமிகு அமைச்சர்கள் அனைவரும் தனித்தனித் துறையை வகித்தாலும் நீங்கள் அனைவரும் இந்த அய்யாத்துரையின் இரத்த நாளங்கள்தான்.

இது ஏப்ரல் 2023; 2 ஆண்டுகளுக்கு முன்னால் இதே ஏப்ரல் மாதத்தில்தான் தமிழ்நாட்டு மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆட்சியில் அமர்த்துவதற்கு முடிவெடுத்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தால், வீழ்ந்து கிடக்கும் தமிழ்நாடு எழுச்சி பெறும்; "தாழ்ந்த தமிழ்நாடு தலைநிமிரும்" என்று மக்கள் முடிவெடுத்தார்கள்! மே 7ஆம் நாள், "முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்!" என்று முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டேன்.

இன்னும் இரண்டு வார காலத்தில், இரண்டு ஆண்டுகாலம் நிறைவடைந்து, திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி மூன்றாவது ஆண்டில் அடியெடுத்து வைக்க இருக்கிறது. இனித் தமிழ்நாட்டை நிரந்தரமாகத் திராவிட முன்னேற்றக் கழகம்தான் ஆளவேண்டும் என்று மக்கள் மனநிறைவுடன் முடிவெடுக்கும் வகையில் இந்த இரண்டாண்டு காலமாக நாம் ஆட்சியை நடத்தி வருகிறோம் என்பது யாராலும் மறுக்க முடியாத உண்மை.

மகத்தான சாதனை

மிக மோசமான நிதி நெருக்கடி, நிதி மேலாண்மையில் ஒன்றிய அரசின் உதவியின்மை ஆகிய மிகக் கடினமான சூழல்கள் உள்ள போதிலும், மகத்தான சாதனைகளைக் கழக அரசு நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் செய்து கொடுத்துள்ளது. தமிழ்நாட்டு மக்கள் ஒவ்வொருவருக்கும் ஏதாவது ஒரு வகையில் தமிழ்நாடு அரசு நன்மை செய்து கொண்டிருக்கிறது என்பதை என்னால் தலைநிமிர்ந்து சொல்ல முடியும்!

- ❖ மகளிர்க்குப் பேருந்துகளில் கட்டணமில்லா பயண வசதி செய்து தரப்பட்டதன் மூலமாக, இதுவரை 265 கோடி பயணங்களை மகளிர் மேற்கொண்டுள்ளார்கள்.
- ❖ குடும்பத் தலைவிகளுக்கு ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகையைச் செப்டம்பர் மாதம் முதல் தரவிருக்கிறோம். இதன்மூலம் ஒரு கோடி மகளிர், மாதம் தோறும் ஆயிரம் ரூபாய் பெறப் போகிறார்கள்.
- ❖ பல்வேறு மாவட்டங்களில் நான் கலந்துகொண்ட நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாக்களின் மூலமாக மட்டும் ஒரு கோடிப் பேருக்குப் பல்வேறு உதவிகள் செய்யப்பட்டுள்ளன. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றபோது ரூ.62 ஆயிரம் கோடியாக இருந்த வருவாய் பற்றாக்குறையை, நடப்பு மதிப்பீடுகளில் ரூ.30 ஆயிரம் கோடியாகக் குறைத்துள்ளோம்.
- ❖ தமிழ்நாட்டை நோக்கி ரூ.2 இலட்சம் கோடி மதிப்பிலான புதிய தொழில் முதலீடுகளை நாம் ஈர்த்துள்ளோம்.
- ❖ மாநில உள்நாட்டு உற்பத்தி 6.11 விழுக்காடாக உயர்ந்துள்ளது.
- ❖ வேளாண் உற்பத்தி அதிகமாயிருக்கிறது. பாசனப் பரப்பும் அதிகமாகியிருக்கிறது.

இப்படித் துறைவாரியாக நான் சொல்லத் தேவையில்லை. அனைத்து அமைச்சர்களும் அவற்றை இதே அவையில், விரிவாக ஆதாரங்களோடு சொல்லி இருக்கிறார்கள். இப்படித் துறைரீதியாகச் சாதனைகளை நெஞ்சை நிமிர்த்திச் சொல்லும் திராவிட மாடல் அரசாக நமது அரசு அமைந்துள்ளது.

- ❖ உதயசூரியன் உதிப்பதற்கு முன்னால் எழுந்து உழவுக்குச் செல்லும் உழவர்களின் முகத்தில் மலர்ச்சி இருக்கிறது; காரணம், இலவச மின்சாரம் கிடைக்கிறது.
- ❖ காலை நேரத்தில் பள்ளிக்குச் செல்லும் குழந்தைகள் முகத்தில் மலர்ச்சி காணப்படுகிறது, காரணம், பள்ளியிலேயே காலை உணவு கிடைக்கிறது.
- ❖ பல்வேறுப் பணிகளுக்காகப் புறப்படும் மகளிர் முகத்தில் மலர்ச்சி காணப்படுகிறது, காரணம், பேருந்துகளில் கட்டணமில்லை.

இப்படி மக்களுக்கு நேரடியாகத் தினமும் பலன் தரும் அரசாகத் தமிழ்நாடு அரசு இருக்கிறது. அதனால்தான் அவதூறுகளை யார் அள்ளி வீசினாலும், திசைதிருப்பும் திருகுவேலைகளை யார் செய்தாலும், மக்கள் மனங்களை யாராலும் மாற்ற முடியவில்லை; ஏமாற்றவும் முடியவில்லை! நாங்கள் தேர்தலில் மட்டும் வெல்லவில்லை; மக்களின் மனங்களையும் வென்று, அவர்கள் நெஞ்சங்களில் நிரந்தரமாகக் குடியேறி இருக்கிறோம்.

திராவிட மாடல் அரசு

இது தனிப்பட்ட ஸ்டாலினின் அரசு அல்ல; இது திராவிட முன்னேற்றக் கழகம் என்ற தனிப்பட்ட கட்சியின் அரசு அல்ல; ஓர் இனத்தின் அரசாக, எட்டுக் கோடி மக்களின் அரசாக, ஒரு கொள்கையின் அரசாக இருக்கிறது; திராவிட மாடல் என்ற கோட்பாட்டின் அரசாக இருக்கிறது. சமூகநீதி-சமத்துவம் - சமதர்மம் - சகோதரத்துவம் - மொழி உரிமை-இன உரிமை-மாநில சுயாட்சி ஆகிய கொள்கைகளை உள்ளடக்கிய 'திராவிடவியல் கோட்பாடு' என்பதே திராவிட மாடல் சாசனம்.

- ❖ பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற அய்யன் வள்ளுவர் நெறியும்,
- ❖ யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற கணியன் பூங்குன்றனாரின் வாக்கும் –
- ❖ திராவிட இயக்கத்தின் தீரர்களாம் சர். பிட்டி தியாகராயரும், டி.எம். நாயரும் - நடேசனாரும் காட்டிய வழியும்,
- ❖ தந்தைப் பெரியாரின் சுயமரியாதைச் சமதர்மமும்,–
- ❖ பேரறிஞர் அண்ணாவின் தமிழ்நாடு உரிமை முழக்கங்களும் –
- ❖ தமிழினத் தலைவர் கலைஞரின் ஒடுக்கப்பட்டோர் சமூகநீதிச் செயல்பாடுகளும்,
- ❖ இனமானப் பேராசிரியரின் மொழி, இன உரிமை வழிகாட்டுதல்களும் - என்னுள் இருந்து இயக்கிக் கொண்டு இருக்கிறது.

இவைதான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியினுடைய சாதனைக்கும், கம்பீரத்துக்கும், வெற்றிக்கும், துணிச்சலுக்கும் காரணங்கள்! ஓர் அரசு மக்கள் நல அரசாகவும் இருக்க வேண்டும், அதே நேரத்தில் கொள்கை அரசாகவும் இருக்க வேண்டும். மக்களுக்கான உதவிகளை மட்டும் செய்துவிட்டு, கோட்பாடுகளில் இருந்து விலகிச் சென்றுவிடக் கூடாது. ஒரு பக்கம் மக்கள் நலன், இன்னொரு பக்கம் கொள்கை உரம். இவை இரண்டையும் முன்னெடுக்கும் ஆட்சியாக இரண்டாண்டுகளை நாம் நிறைவு செய்யப்போகிறோம்.

இது இந்தியாவையே ஈர்க்கும் ஆட்சியாக அமைந்துள்ளது என்பது, என்னுடைய பெருமை மட்டுமல்ல; இந்த அமைச்சரவையின் பெருமை! ஏன், எங்களோடு தோளோடு தோள் சேர்த்து நிற்கும் கூட்டணிக் கட்சிகளுடைய பெருமை! இன்னும் சொல்லப்போனால், நாங்கள் கவனிக்கத் தவறும் இடங்களைச் சுட்டிக்காட்டும் உரிமை எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் உண்டு. ஆனால், அந்தக் கடமையிலிருந்து தவறி, என்ன நிலைக்கு அவர்கள் போய்க் கொண்டிருக்கிறார்கள் என்பதைப்பற்றி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். அதுதான் எனக்கும் வேதனையாக இருக்கிறது. இருந்தாலும், அவர்களுக்கும் என்னுடைய நன்றியை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த அவை பல ஆரோக்கியமான விவாதங்களைக் கண்டிருக்கிறது. அதேபோன்ற ஆரோக்கியமான விவாதமாகவே உங்கள் அனைவரது உரைகளையும் நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆதரித்தாலும், எதிர்த்தாலும் மக்களுக்காகத்தான் பேசுகிறீர்கள் என்று எடுத்துக் கொள்பவனாக, ஏற்றுக் கொள்பவனாக நான் இருக்கிறேன். ஆசிரியராய் இருந்து இந்த அவைக்குத் தலைமை ஆசிரியராக மட்டுமல்ல, சட்டமன்ற நெறிமுறைகளுக்கு ஆசானாகவும் திகழ்ந்து வரும் பேரவைத் தலைவரான தங்களுக்கும் எனது நன்றியைத் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு

உள்துறை மீதான மானியக் கோரிக்கை விவாதத்தில் 12 பேர் பேசி இருக்கிறார்கள். பாராட்டிப் பேசி இருந்தாலும், விமர்சித்து பேசி இருந்தாலும் இரண்டு தரப்புக்கும் மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சில காவலர்களின் செயல்பாடுகள் குறித்து இங்கே விமர்சனங்கள் வைக்கப்பட்டன.

இதுபற்றி பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதை, இதே அவையில் பேசியதை நான் நினைவூட்ட விரும்புகிறேன். "எந்தச் சமுதாயத்தில் இருந்து போலீஸ் படையினர் தேர்ந்தெடுக்கப்படுகிறார்களோ, அந்தச் சமுதாயத்தைப் பிரதிபலிக்கின்ற நிலைக் கண்ணாடியாக அந்தப் படையினர் விளங்குவார்கள். அந்தச் சமுதாயத்திலிருந்து வெகுதூரம் அவர்கள் விலகி இருப்பது இல்லை.

போலீஸ் படை நன்றாக நேர்த்தியாகச் செயல்படுகிறது என்றால், அது சமுதாயத்தின் தன்மையைக் காட்டும். அதேபோல் போலீஸ் படையினர் எங்கேனும் செயலாற்றுவதில் தவறு இழைத்தால், சமுதாயத்தில் நிலவும்

குறைபாட்டையே அவை காட்டுகின்றன. தங்களால் உருவாக்கப்படாத பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டியவர்களாக அவர்கள் இருக்கிறார்கள். முரண்பாடு ஏற்படுகின்ற இடங்களில் எல்லாம் அவர்கள் இருந்தாக வேண்டியிருக்கிறது.

சகல விதத்திலும் சகிப்புத் தன்மையோடு அவர்கள் நடந்துகொள்ள வேண்டியிருக்கிறது. உள்ளக் கொந்தளிப்பு அடையாமல் பற்றற்ற அமைதியுடன் நடந்துகொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள். பெற்ற பயிற்சிக்கு ஒப்ப, கடமை உணர்ச்சி மிக்கவர்களாக அவர்கள் நடந்துகொள்ள வேண்டி இருக்கிறது" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள், அப்படித்தான் காவல் துறையினர் நடந்து வருகிறார்கள்.

அவர்களது செயல்பாட்டில் குற்றங்குறைகள் இருக்கலாம். குறையே இல்லை என்று நான் சொல்ல மாட்டேன். குறை கண்டுபிடிக்கப்பட்டதும், அவை திருத்தப்பட்டனவே தவிர, கண்டும் காணாமல் விடப்படவில்லை. சம்பவம் நடந்ததும் குற்றவாளி தப்பிவிட்டார் என்றோ, குற்றவாளியைக் கைது செய்யவில்லை என்றோ, குற்றவாளியைக் காப்பாற்றினார்கள் என்றோ புகார் இருந்தால் சொல்லுங்கள். உடனடியாக நடவடிக்கை எடுக்கச் சொல்கிறேன், அதில் உறுதியாக நான் இருக்கிறேன். எந்தக் குற்றவாளியையும், அது யாராக இருந்தாலும், எப்படிப்பட்ட கொம்பனாக இருந்தாலும், அவர்களை நாங்கள் நிச்சயமாகக் காப்பாற்ற மாட்டோம் என்று இந்த மாமன்றத்தில் உறுதியாகக் கூறுகிறேன். சிறுசிறு தவறுகள் நடந்திருந்தாலும், அதனைத் திருத்திக் கொள்ளும் பண்பைக் காவல் துறையினர் பெற வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அமைதியான மாநிலம்

மானியக் கோரிக்கை மீதான விவாதத்துக்குப் பதிலளித்துப் பேசிய மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அனைவரும் இந்த மாநிலத்தில் என்னென்ன இருக்கிறது என்று பேசினார்கள். என்னென்ன இல்லை என்பதைச் சொல்வதாக என்னுடைய உள்துறை அமைந்துள்ளது.

❖ தமிழ்நாட்டில் சாதிச் சண்டைகள் இல்லை.

❖ மதச்சண்டைகள் இல்லை.

❖ கூட்டு வன்முறைகள் இல்லை.

❖ கலவரங்கள் இல்லை.

❖ துப்பாக்கிச் சூடு இல்லை.

❖ காவல் நிலைய மரணங்கள் இல்லை.

இப்படி இல்லை... இல்லை... இல்லை... என்றுதான் என்னால் சொல்ல முடியும்.

இதெல்லாம் இல்லை என்பதற்கு அடையாளமாகத்தான்...

❖ புதிய தொழிற்சாலைகள் வருகின்றன.

❖ புதிய முதலீடுகள் வருகின்றன.

❖ புதிய நிறுவனங்கள் வருகின்றன.

❖ அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சி வருகிறது.

❖ ஆட்சிக்கு நல்ல பெயர் வருகிறது.

❖ "அமைதியான மாநிலம் தமிழ்நாடு" என்ற நற்பெயர் வருகிறது.

ஒரு மாநிலம் வளருகிறது என்றால், அது அமைதியான மாநிலமாக இருக்கிறது என்று பொருள்.

சட்டம் ஒழுங்கைப் பேணி, பொதுமக்களிடம் அச்ச உணர்வைப் போக்கி இருக்கிறது நமது அரசு. எந்தவிதக் குறுக்கீடும் இன்றிக் காவல் துறையைச் செயல்பட அனுமதித்துள்ளோம். இதனால்தான் சமூகவிரோதிகள், கொள்ளையர்கள், வன்முறையாளர்கள் உடனுக்குடன் கைது செய்யப்படுகிறார்கள்.

"ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை"

- என்கிறார் வள்ளுவர்.

அதாவது, ஒருவர் செய்த குற்றங்களை எப்பக்கமும் சாயாமல், நடுநிலையோடு பாரபட்சமின்றி ஆராய்ந்து, குற்றத்திற்குத் தக்க தண்டனையை வழங்குதல் நீதியாகும் என்ற அய்யன் வள்ளுவரின் வாக்குப்படி அரசு செயல்பட்டு வருகிறது. மாநிலக் காவல்துறையினர் சட்டம்-ஒழுங்கை, தொடர்ந்து சிறப்பாகப் பராமரித்து வருவதோடு, குற்றச் செயல்களில் ஈடுபடும் நபர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் மீது பாரபட்சமின்றிக் கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். தமிழ்நாட்டில் சாதி, சமய வெறியர்கள், சமூக விரோதிகள் மீது அரசு மேற்கொண்ட கடும் நடவடிக்கைகள் காரணமாக, சாதி, சமய பூசல்கள் ஏதுமின்றி மாநிலத்தில் அமைதி நிலவுகிறது.

குற்றங்களுக்கு உடனடி நடவடிக்கை

காவல்துறையினர், மாநிலம் முழுவதும், குற்ற நடவடிக்கைகளில் ஈடுபடும் ரவுடிகள் மற்றும் கொள்ளையர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுத்து, கொலை, கொள்ளை மற்றும் சமுதாயக் குற்றங்களில் ஈடுபடுவோர் மீதும், ஆட்களைக் கடத்தி பணம் பறித்தல், தடை செய்யப்பட்ட லாட்டரி சீட்டுக்கள் விற்பனை, மணல் மற்றும் ரேஷன் அரிசி கடத்துதல், கட்டப் பஞ்சாயத்துக்களில் ஈடுபடுதல், அதிக வட்டி வசூலித்தல் போன்ற சமூக விரோத செயல்களில் ஈடுபடுவோர் மீதும், கஞ்சா, நிதி நிறுவன மோசடி, சைபர் குற்றங்கள், சமூக வலைதளங்களில் வதந்திகளைப் பரப்புவோர் ஆகியோர் மீதும் கடுமையான நடவடிக்கைகளை எடுத்து, அவர்களைத் தடுப்புக் காவலில் அடைத்து வருகின்றனர். குற்றம் நடந்ததும் உடனடியாக நடவடிக்கை எடுப்பதால் குற்றங்கள் குறைந்துள்ளன.

மிகப்பெரிய மோதல் ஒன்று அரசின் வேகமான நடவடிக்கைகளால் எப்படி தவிர்க்கப்பட்டது என்பதற்கு எடுத்துக்காட்டுதான், வடமாநிலத் தொழிலாளர்கள் தாக்கப்படுகிறார்கள் என்று பரப்பப்பட்ட வதந்திகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள். தமிழ்நாட்டில், பீகார், அசாம், மேற்கு வங்கத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர். புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் பாதுகாப்பாகவும், அமைதியாகவும் தங்கள் தொழில்களில் ஈடுபடும்வண்ணம் மாநில அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதற்கிடையேதான், அந்த வதந்தி தமிழ்நாட்டில் பரப்பப்பட்டது. இதுகுறித்து, என்னுடைய தலைமையில் அவசர ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டது. இவ்வாறு வதந்திக் காணொலிகளைப் பரப்புவோர் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு காவல் துறையினருக்கு நான் உத்தரவிட்டேன்.

வடமாநிலங்களில் இரு பிரிவினரிடையே நடைபெற்ற மோதல் சம்பவத்தைத் தமிழ்நாட்டில் நடந்தது போன்று சித்தரித்துக் காட்டியுள்ளதாகக் காவல் துறை இயக்குநர் அவர்கள் உடனடியாக விளக்கம் தந்தார். அந்தந்த மாவட்ட நிருவாகத்தினரும், காவல் துறையினரும், வடமாநிலத்தவர்கள் அதிகம் பணிபுரியும் இடங்களில் குறிப்பாக உணவு விடுதிகள், கட்டுமான நிறுவனங்கள், பல்வேறு தொழிற்சாலைகள் போன்றவற்றுக்குச் சென்று புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்குத் தமிழ்நாட்டில் உரிய பாதுகாப்பு வழங்கப்படும் என்பதைத் தெளிவுபடுத்தி, அவர்களது அச்சத்தைப் போக்கக்கூடிய வகையில் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

பீகார் மாநில முதலமைச்சர் மாண்புமிகு நிதீஷ் குமார் அவர்களை நானே தொலைபேசியில் தொடர்புகொண்டு வடமாநிலத் தொழிலாளர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் பாதுகாப்புக் குறித்து விரிவாக எடுத்துரைத்தேன். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நாடாளுமன்றக் குழுத் தலைவர் திரு. டி.ஆர். பாலு அவர்கள் 07.03.2023 அன்று பீகார் முதலமைச்சரை நேரடியாகச் சந்தித்து வடமாநிலத் தொழிலாளர்களின் பாதுகாப்பிற்கு மாநில அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கை குறித்துப் பேசியிருக்கிறார் என்பதை நீங்கள் நன்றாக அறிவீர்கள்.

திருநெல்வேலியில் நேரடி ஆய்வு

பீகார் மாநில ஊரக வளர்ச்சித் துறைச் செயலாளர் திரு. பாலமுருகன் தலைமையிலான நான்கு பேர் கொண்ட குழு தமிழ்நாட்டிற்கு வந்து சென்னை, திருப்பூர், கோயம்புத்தூர் உள்ளிட்ட இடங்களில் மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட அதிகாரிகளோடு கலந்தாலோசனை செய்ததோடு, பீகார் மாநில தொழிலாளர்களையும் சந்தித்துப் பேசினார்கள். இந்தக் குழுவினர் தமிழ்நாடு அரசு மேற்கொண்ட நடவடிக்கை குறித்து மகிழ்ச்சி தெரிவித்ததோடு அதுகுறித்து பத்திரிகைகளுக்குப் பேட்டியும் அளித்திருக்கின்றனர்.

07.03.2023 அன்று திருநெல்வேலி மாவட்டம், காவல்கிணறு பகுதியில் வடமாநிலத் தொழிலாளர்களை நானே நேரடியாகச் சந்தித்து அவர்களின் பாதுகாப்புக்காக அரசு மேற்கொண்டுவரும் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து விளக்கிப் பேசினேன். இந்த விவகாரம் தொடர்பாக, இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் தற்போது வரை மொத்தம் 88 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன, 178 பேர் கைது செய்யப்பட்டார்கள்.

குறிப்பாக, தமிழ்நாடு காவல் துறையின் தனிப்படையினர் தெலுங்கானா, பீகார் மற்றும் ஜார்கண்ட் மாநிலங்களுக்கு நேரடியாகச் சென்று பீகார் மாநிலத்தைச் சேர்ந்த ரூபேஷ் குமார் என்பவரை 06.03.2023 அன்று தெலுங்கானாவிலும், பிரசாந்த் குமார் என்பவரை 11.03.2023 அன்று ஜார்கண்ட் மாநிலத்திலும், உபேந்திர சஹானி என்பவரை 18.03.2023 அன்று பீகாரிலும் கைது

செய்து தமிழ்நாட்டிற்கு அழைத்து வந்தனர். வதந்திக் காணொலியைப் பரப்பிய உத்தரபிரதேச மாநில பா.ஜ.க. செய்தித் தொடர்பாளர் பிரசாந்த் உம்ராவ் என்பவர் மீதும் வழக்குத் தொடரப்பட்டு, உயர்நீதிமன்ற ஜாமீன் பெற்றுள்ளார்.

அது மட்டுமின்றி, யூடியூப் சேனல் நடத்தி வரும் பீகார் மாநிலத்தைச் சேர்ந்த மணிஷ் காஷ்யப் என்பவர் கைது செய்யப்பட்டு, தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் அடைக்கப்பட்டுள்ளார். எதிர்காலத்தில் சமூக வலைத்தளங்களில் பரப்பப்படக்கூடிய வதந்திகளால் உலகளவில், சட்டம் ஒழுங்கு பிரச்சினை பெருமளவில் இருக்கும் என்று பலராலும் கூறப்படுகின்ற நிலையில், வடமாநிலத் தொழிலாளர்கள் பிரச்சினையில் தமிழ்நாடு அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளைப் பிற மாநில அரசுகளும் மனந்திறந்து பாராட்டின.

முன்னணி ஊடகங்களான 'டைம்ஸ் ஆப் இந்தியா' தலையங்கம் எழுதியது. 'நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்', 'ஃபிரண்ட் லைன்' போன்ற இதழ்கள் பாராட்டியும் கட்டுரைகள் எழுதியிருக்கின்றன. மாநிலத்தின் வளர்ச்சிக்கு வடமாநிலத் தொழிலாளர்களின் பங்களிப்பை இந்த அரசு நன்றாக உணர்ந்துள்ளது.

வந்தாரை வாழ வைக்கும் தமிழ்நாட்டில் புலம்பெயர்ந்த வடமாநிலத்தவர்களையும் நமது மாநிலத்தவராகக் கருதி அவர்களுக்குத் தேவையான அனைத்துப் பாதுகாப்பு நடவடிக்கைகளையும் மாநில அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாடு அரசு துரிதமாக நடவடிக்கை எடுத்ததால்தான் தமிழ்நாட்டிலும், சில வடமாநிலங்களிலும் கொந்தளிப்பு எழாமல், அது தவிர்க்கப்பட்டது.

சட்டம் ஒழுங்கு நிலைநாட்டப்பட்டு வருகிறது

மாநிலத்தில் சட்டம்-ஒழுங்கைப் பராமரிப்பதைப் பொறுத்தவரையில், போராடியவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது யார் ஆட்சியில் என்பதையும், அதற்கு ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் தலைமையில் ஆணையம் அமைத்து, விசாரித்து நடவடிக்கை எடுக்கப்பட்டது எந்த ஆட்சியில் என்பதையும் இந்த மாமன்ற உறுப்பினர்களும் தமிழ்நாட்டு மக்களும் நன்கு அறிவார்கள். அதைப் பற்றியெல்லாம் விளக்கமாகப் பேசி, மீண்டும் ஒருமுறை விவாதத்திற்குள் செல்ல நான் விரும்பவில்லை.

ஆனால், நேற்று இந்த அவையில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது, ஸ்டெர்லைட் துப்பாக்கிச்சூட்டைப் பற்றிப் பேசினார். நான் ஒரே ஒரு கேள்வி மட்டும் எழுப்ப விரும்புகிறேன். அறையிலிருந்து அவர்கள் கேட்டுக் கொண்டிருப்பார்கள். எனவே, அந்த உரிமையோடு அவர்களைக் கேட்க விரும்புகிறேன். 100 நாட்கள் அமைதியாக நடந்த அந்த போராட்டத்தில் துப்பாக்கிச்சூட்டிற்கு உத்தரவிட்டது யார்? அதை மட்டும் எதிர்க்கட்சித் தலைவர் ஏன் சொல்லவே மாட்டேன் என்கிறார். முதலமைச்சராக இருந்தபோதும் சொல்ல விரும்பவில்லை. இப்போது எதிர்க்கட்சித் தலைவர் ஆன பின்பும் அவர் சொல்ல விரும்பவில்லை. ஆனால், நமது அரசைப் பொறுத்தவரை, துப்பாக்கிச்சூடு சம்பவங்களில் பொதுமக்கள் ஒருவர் கூட உயிரிழக்காதவாறு சட்டம் ஒழுங்கு நிலைநாட்டப்பட்டு வருகிறது.

12.07.2022 அன்று கள்ளக்குறிச்சி மாவட்டம், கனியாமூர் தனியார் பள்ளி மாணவி உயிரிழந்ததையடுத்து நடந்த தாக்குதல் சம்பவத்தைக் காவல் துறையினர் திறமையாகக் கையாண்டதோடு உயிரிழப்பு ஏதும் இல்லாமல் பார்த்துக்கொண்டனரே, அதுவே ஒரு அரசு மக்கள் போராட்டத்தை எப்படிப் பொறுப்புடன் கையாள வேண்டும் என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு.

காவல்நிலைய மரணங்களைத் தடுப்பதைப் பொறுத்தவரையில், அதிலும் இந்த அரசு சாதனை படைத்துள்ளது. 2019ஆம் ஆண்டு 11 காவல் நிலையங்களில் 11 நபர்கள் இறந்த நிலை மாற்றப்பட்டு, 2023ஆம் ஆண்டு இதுநாள் வரையில், காவல்நிலைய மரணங்கள் ஏதும் நடைபெறவில்லை என்ற நிலையை அடைந்துள்ளோம். கடந்த ஆட்சியோடு ஒப்பிடும்போது தற்போதைய ஆட்சியில் காவல் நிலைய மரணங்கள் பெருமளவில் குறைந்து விட்டன. காவல் நிலைய மரணங்களே இல்லை என்ற நிலையை அடைவதற்கான வழிவகைகளில் இந்த அரசு நிச்சயம் ஈடுபடும்.

குற்றங்களைத் தடுப்பதே இந்த அரசின் முக்கிய இலக்கு. அதையும் மீறி அங்கும் இங்குமாக ஓரிரு இடங்களில் நடைபெறக்கூடிய குற்றங்களிலும் வழக்கமாக நடைபெறும் குற்றச் சம்பவங்களிலும் குற்றவாளிகள் உடனுக்குடன் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

தீவிரவாத - மதவாத - தடைசெய்யப்பட்ட இயக்கங்களின் நடவடிக்கைகளைக் கூர்ந்து கண்காணித்தும், மாநில எல்லைகளில் சோதனைச் சாவடிகள் அமைத்தும், கடலோர மாவட்டங்களில் சோதனைகளைத் தீவிரப்படுத்தியும், மலைப் பகுதிகளில் உள்ள வனப்பகுதிகளில் அடிக்கடித் தீவிரச் சோதனைகள் நடத்தியும், தக்க பாதுகாப்பு நடவடிக்கைகளைக் காவல்துறையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

அமைதிப் பூங்காவான தமிழ்நாடு

கடந்த 23.10.2022 அன்று கோயம்புத்தூர் உக்கடம் பகுதியில் நடந்த கார் சிலிண்டர் வெடிப்புச் சம்பவம் தொடர்பாக வழக்குப் பதிவு செய்யப்பட்டதோடு, சம்பவத்தில் ஈடுபட்ட எதிரிகள் உடனடியாகக் கைது செய்யப்பட்டனர். மேலும், 26.10.2022 அன்று எனது தலைமையில் நடந்த ஆய்வுக்கூட்டத்தில், வழக்கில் மாநிலம் தாண்டிய பரிமாணங்களும், பன்னாட்டுத் தொடர்புகளும் இருக்க வாய்ப்பு இருந்ததால், இவ்வழக்கை தேசிய புலனாய்வு முகமைக்கு மாற்றிட ஒன்றிய அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டது.

மூன்றே நாளில், ஒரு மாநில அரசு இதுபோன்ற வழக்கைத் தேசியப் புலனாய்வு முகமை விசாரணைக்கு மாற்றியது என்றால், அது தமிழ்நாடு அரசுதான். இந்தியாவிலேயே தமிழ்நாடு அரசுதான் இவ்வளவு விரைவாக வழக்கினை மாற்றியிருக்கும். மேலும், கோயம்புத்தூர் மாநகரின் பாதுகாப்பைக் கருதி கரும்புக்கடை, சுந்தராபுரம், கவுண்டம்பாளையம் ஆகிய இடங்களில் புதிய காவல் நிலையங்கள் அமைக்கவும், இத்தகைய சம்பவங்களைத் தடுக்க காவல்துறையில் சிறப்புப் படையை உருவாக்கவும், கோயம்புத்தூர் பகுதியில் முக்கிய இடங்களில் கூடுதல் கண்காணிப்புக் கேமராக்கள் பொருத்தவும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

தமிழ்நாடு காவல்துறை நுண்ணறிவுப் பிரிவின் ஒரு அங்கமாக விளங்கும் சிறப்புப் பிரிவின் நுண்ணறிவுத் தகவல்களின்படி விரைவாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதன் மூலம் மதரீதியான மோதல்கள் எதுவுமின்றித் தமிழ்நாடு அமைதிப் பூங்காவாகத் திகழ்ந்து வருகிறது.

தீவிரவாத அமைப்புகளின் மூளைச் சலவையில் இருந்து இளைஞர்களைக் காக்க சமய அறிஞர்கள், உளவியல் நிபுணர்கள் மற்றும் பெற்றோர்கள் உதவியோடு ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. அதன்படி, 2022-2023ஆம் ஆண்டில் 20 இளைஞர்கள் நல்வழிப்படுத்தப்பட்டுள்ளனர்.

சட்டம் ஒழுங்கு சிறப்பாகச் செயல்பட்டு வருவது குறித்து, புள்ளிவிவரத்தைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

2021, 2022 ஆகிய ஆண்டுகளில் தாக்கலான 182 ஆதாயக்கொலை வழக்குகளில் 171 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 3,194 கொலை வழக்குகளில் 3,144 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 252 கூட்டுக் கொள்ளை வழக்குகளில் 242 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 5,281 கொள்ளை வழக்குகளில் 4,240 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 874 வன்புணர்வு வழக்குகளில் 849 வழக்கு எதிரிகள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். 90 பாலியல் துன்புறுத்தல் வழக்குகளில், 75 வழக்கு எதிரிகள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். 9,440 போக்சோ வழக்குகளில், 9,340 வழக்கு எதிரிகள் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

காவல்நிலையங்களில் வரவேற்பாளர் நியமனம்

இந்த அரசின் விழிப்புணர்வுப் பிரச்சாரங்களால் குற்றம் நடைபெற்றவுடன் புகார் கொடுக்க மக்கள் முன் வருகிறார்கள். காவல் நிலையங்களில் “வரவேற்பாளர்” நியமனம், காவல்துறையின் மனிதநேய அணுகுமுறை போன்றவற்றால் பதிவு செய்யப்படும் வழக்குகள் ஒரு சில குற்றங்களில் அதிகரிக்கலாம். அதற்குக் காரணம், புகார்கள் வரும்பொழுது, கடந்த ஆட்சியில் இழுத்தடித்ததுபோல் இல்லாமல், இப்போது உடனடியாக வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன. அப்படிப் பதிவு செய்யப்பட்ட வழக்குகளை மூடி வைக்காமல் உடனடியாக விசாரித்துக் குற்றவாளிகளும் கண்டுபிடிக்கப்படுகிறார்கள், எதிரிகள் கைது செய்யப்படுகிறார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டுதான் மேற்கண்ட புள்ளிவிவரங்கள் என்பதை இந்த மன்றத்திற்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நேற்று மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது, ஆருத்ரா போன்ற நிதி நிறுவனங்களின் மோசடிகள் பற்றிக் குறிப்பிட்டுப் பேசினார்கள். நான் நேற்றே இதுகுறித்து விளக்கமாகப் பதிலளித்து இருக்கிறேன். இருந்தாலும் ஒன்றை மட்டும் அழுத்தம் திருத்தமாக இந்த அவையில் பதிவு செய்ய விரும்புகிறேன். மக்களிடம் ஆசையைத் தூண்டி

இதுபோன்ற நிறுவனங்கள் ஏமாற்றுகின்றன. இத்தகைய நிதி நிறுவனங்கள் அனைத்தையும் கண்காணிக்குமாறு காவல்துறைக்கு நான் உத்தரவிட்டுள்ளேன்.

இத்தகைய நிதி நிறுவனங்களின் மோசடிகளைத் தடுக்க முதன்முதலில் சட்டம் கொண்டு வந்ததும், முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் என்பதைக் குறிப்பிட்டுக்காட்ட விரும்புகிறேன். மேலும், இதுபோன்ற நிதி நிறுவனங்களில் முதலீடு செய்யும்போது பொதுமக்கள் எச்சரிக்கையோடும், விழிப்புணர்வோடும் இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற சில முக்கியமான குற்றச் சம்பவங்களில் உரிய நடவடிக்கை எடுக்காததால், தி.மு.க. ஆட்சி அமைந்ததும் உரிய நடவடிக்கை எடுத்து வருகிறோம் என்பதற்குச் சில உதாரணங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

சிறப்பு நீதிமன்றம்

பொள்ளாச்சி பாலியல் புகார் வழக்கும் சென்ற ஆட்சியினுடைய தலைப்புச் செய்திகளுள் ஒன்று என்று உறுப்பினர்கள் எல்லோரும் நன்கு அறிவீர்கள். இந்த விவகாரத்தில் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யவே பொதுமக்கள் ஒருபக்கம் போராடினார்கள். அரசியல் கட்சிகள் ஒருபக்கம் போராடினார்கள் தி.மு.க. கட்சி ஒருபக்கம் போராடினார்கள். ஆக, இப்படித் தன்னார்வத் தொண்டு அமைப்பைச் சார்ந்தவர்கள் எல்லோரும் போராடினார்கள். அப்படி ஒரு நிலை சென்ற ஆட்சியில் ஏற்பட்டது. பிறகு, மாநிலக் குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறைக்கு மாற்றப்பட்டு, அங்கும் முறைப்படி விசாரிக்காத காரணத்தாலே மீண்டும் அதற்காகப் போராடி, அந்த வழக்கை சிபிஐ-க்கு கொண்டு போனோம். இவ்வழக்கில் கைது செய்யப்பட்ட 9 பேரில் அ.தி.மு.க. இளைஞரணி நிருவாகி ஒருவரும் உண்டு. பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகளை ஒழிக்க விரும்பக்கூடிய கழக அரசு பொறுப்பேற்றவுடன், சிபிஐ விசாரணைக்கு உதவி செய்ய தமிழ்நாடு அரசின் சார்பில் ஒரு பெண் எஸ்.பி.-யை நியமித்தோம்.

ரூ.19,42,000 நிதி ஒதுக்கீடு செய்து, சிறப்பு நீதிமன்றம் அமைத்தோம். அந்தச் சிறப்பு நீதிமன்ற வளாகத்தில் சிசிடிவி கண்காணிப்பு, காணொளி விசாரணை அறை, நீதிபதி அறை, சாட்சிகளுக்கான தனிப் பாதுகாப்பு அறை உள்ளிட்ட வசதிகள் செய்யப்பட்டன.

மூன்று மாதங்களுக்கு முன்பு நீதிமன்ற விசாரணை துவங்கப்பட்டு, 80 சாட்சிகளில் இதுவரை 4 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். பெண்களுக்குப் பாலியல் தொல்லை கொடுத்தவர்கள் உரிய தண்டனை பெற இந்த அரசு வழக்குகளின் அடிப்படையில் விசாரணையை உன்னிப்புடன் கண்காணித்து விரைந்து முடிக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

கொடநாடு வழக்கில் உண்மை வெளிவரும்

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நேற்றுப் பேசும்போது, 'கொடநாடு வழக்கை நாங்கள் சிபிஐ-க்கு கொண்டு போக கோரிக்கை வைக்கப் போகிறோம்' என்றார். இந்தச் சம்பவம் நடைபெற்றது அ.தி.மு.க. ஆட்சியில். கொடநாடு பங்களா என்பது, அந்தக் கட்சியின் முன்னாள் முதலமைச்சர் அம்மையார் அவர்கள் "முகாம் அலுவலகமாக" பயன்படுத்திய பங்களா. அங்கு மர்மமான முறையில் கொலை, கொள்ளை, தற்கொலை, விபத்து எல்லாம் நடந்தன.

அவர்கள் ஆட்சிக் காலத்திலேயே முறையாகக் கண்டுபிடித்திருந்தால், இந்தக் கோரிக்கையை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் இப்போது வைத்திருக்க வேண்டிய அவசியமே வந்திருக்காது. அந்தச் சம்பவம் நடந்ததும், உடனடியாக ஆதாரங்கள் சேகரிக்கப்பட்டு, தடயங்களையும் காப்பாற்றி, வாக்குமூலங்களையும் முறையாகப் பெற்று வைத்திருந்தால், வழக்கை விரைந்து முடித்திருக்க முடியும்.

ஆண்டுகள் பல உருண்டோடியதால், சில விஷயங்களை முழுமையாக வெளிக்கொண்டுவர தாமதம் ஏற்படுகிறது. ஆனாலும், சிபிசிஐடி விசாரணையில் முக்கியத் தகவல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தி.மு.க. ஆட்சிக்கு வந்தபோது, 2021 செப்டம்பர் 9ஆம் தேதி பேசிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், "கொடநாடு வழக்கை நடத்துங்கள், வேண்டாம் என்று சொல்லவில்லை, புது விசாரணை செய்யுங்கள், நாங்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை" என்று சொன்னார்கள். அவரே ஆகஸ்ட் 18ஆம் தேதி பேசும்போது, 'வழக்கு முடியும் தருவாயில் இருக்கும்போது எதற்காக மேல் விசாரணை செய்ய வேண்டும்?' என்று பேட்டியும் கொடுத்தார்கள். இப்போது சிபிஐ-க்குப் போவேன்

என்கிறார். எத்தனை முரண்பாடு? ஏன் இந்தத் தடுமாற்றம்?

இன்னொன்றையும் குறிப்பிட்டுள்ளார். கொடநாடு வழக்கில் சம்பந்தப்பட்ட சயனுக்கு தி.மு.க. வழக்கறிஞர்கள் உதவி செய்தார்கள் என்று கூறியிருக்கிறார். சம்பந்தப்பட்ட எதிரிகள் 11.01.2019 அன்று புதுடெல்லியில் தெஹல்கா பத்திரிகையாளர், மேத்யூ சாமுவேல் என்பவரோடு பத்திரிகையாளர்களைச் சந்தித்து, கொடநாடு கொலை, கொள்ளை வழக்கில், அப்போது முதலமைச்சராக இருந்த மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் மீது குற்றம் சாட்டினார்கள். உடனே அதிகாரத்தைப் பயன்படுத்தி, அச்சுறுத்தும் வகையில் அவர்கள்மீது வழக்குப் புனைந்தது யார்? ஒரு முதலமைச்சர் மீது புகார் கூறுவோர் மீது பொய் வழக்குப் போடும்போது, பொறுப்புள்ள எதிர்க்கட்சியாக அன்று இருந்த தி.மு.க.வின் வழக்கறிஞர்கள் சட்ட உதவியைச் செய்தார்கள். இதுதான் உண்மை.

முன்னாள் முதலமைச்சர் அம்மையார் அவர்களின் பங்களாவில் நடைபெற்ற கொலை, கொள்ளையை அவர் கட்சியின் முதலமைச்சராக இருந்தவரே மறைக்க முயலும்போது, தி.மு.க. எப்படிச் சும்மா இருக்க முடியும்? ஆகவே, கொடநாடு வழக்கில் உண்மைக் குற்றவாளிகள் யார், முறையாக விசாரணையை நடத்தாமல் திசை திருப்பியது யார் என்பதை எல்லாம், உறுதியாக சொல்கிறேன்; நிச்சயமாகச் சொல்கிறேன்; சிபிசிஐடி விசாரணையில் வெளிவரும் என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஆப்பரேஷன் கஞ்சா வேட்டைகள்

அ.தி.மு.க. ஆட்சி விட்டுச் சென்ற "பேரழிவுகளில்" போதைப் பொருட்கள் நடமாட்டமும் ஒன்று. 10 ஆண்டு ஆட்சியில் இருந்தவர்கள் விட்டுச் சென்ற படு பாதகங்களில் ஒன்றுதான், இந்தச் சீரழிவுக்குக் காரணம். அதனால்தான் ஆட்சிக்கு வந்தவுடன் முதலில் "ஆப்பரேஷன் கஞ்சா வேட்டைகள்" அடுத்தடுத்துத் தொடங்கப் போவதை அறிவித்து, போதைப் பொருட்களையெல்லாம் கைப்பற்றினோம்.

போதை மருந்துகள் மற்றும் உள வெறியூட்டும் பொருட்கள் சட்டம், 1985இன்படி கஞ்சா விற்போரின் சொத்துக்கள் மற்றும் வங்கிக் கணக்குகளை முடக்குவது ஓர் இயக்கமாகவே தொடங்கப்பட்டது. போதைப் பொருட்களை ஒழிக்க என் தலைமையில் மாவட்ட ஆட்சியர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது. முதலமைச்சரின்கீழ் இதற்காக ஆய்வுக்கூட்டம் தனியாக நடத்தப்பட்டது இதுதான் முதல் முறை. இதுவரையில் இதுபோன்ற ஒரு கூட்டம் நடந்ததே கிடையாது. தி.மு.க. ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, என் தலைமையில் நடைபெற்ற கூட்டம்தான் முதல் கூட்டம்.

இப்படித் தொடர் நடவடிக்கைகளின் பலனாக, இன்று கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களின் நடமாட்டம் அ.தி.மு.க. ஆட்சியில் இருந்ததைவிட பெருமளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. சில காவல் நிலைய எல்லைகளில் போதைப் பொருட்களே இல்லை என்ற நிலை எட்டப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் கஞ்சா பயிரிடுவது முற்றிலுமாக ஒழிக்கப்பட்டுள்ளது.

வெளி மாநிலங்களிலிருந்து கஞ்சா மற்றும் போதைப் பொருட்கள் தமிழ்நாட்டிற்குக் கடத்தப்படுவதை தடுக்கும்பொருட்டு, தற்போது மாவட்டங்களில் செயல்பட்டு வரும் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவைப் போதைப் பொருள் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவுடன் ஒன்றிணைத்து அனைத்து மாவட்டங்களிலும் புதிதாக அமலாக்கப் பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை உருவாக்கப்பட்டுள்ளது.

பள்ளி, கல்லூரி மாணவர்களிடத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு, 11.08.2022 அன்று ஒரே நாளில் 74 இலட்சம் மாணவர்கள் "போதைப் பொருட்கள் ஒழிப்பு உறுதிமொழியை" எடுத்துக்கொண்டார்கள். அது ஒரு உலகச் சாதனை நிகழ்வாக அமைந்தது; அதில் நானும் கலந்து கொண்டேன். ஆகவே, அனைத்து முனைகளிலும் சட்டத் துணையுடன் அரசு நடத்தும் இந்த தாக்குதலில், பத்தாண்டுக் காலமாக வேரூன்றியிருந்த "போதைப் பொருட்கள் சாம்ராஜ்யம்" சரிந்துள்ளது. அதுதான் இந்த அரசினுடைய சாதனை!

களஆய்வில் முதலமைச்சர் திட்டம்

கோட்டையில் அமர்ந்து திட்டங்களைத் தீட்டினால் மட்டும் போதாது; அவையெல்லாம் தானாக நடந்துவிடும் என்று நினைக்காமல், மக்களுக்கு நெருக்கமாகச் சென்று திட்டங்களைக் கண்காணிக்கவும் வேண்டும் என்ற நோக்கத்தோடுதான், 'கள ஆய்வில் முதலமைச்சர்' என்ற திட்டத்தை நான் தொடங்கினேன். மாவட்டங்களுக்கே நேரடியாகச் சென்று, தொடர்புடைய அதிகாரிகளை

அழைத்துப் பேசி வருகிறேன். இது அனைத்துத் துறைகளிலும் ஒரு நல்ல விளைவுகளைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

இதில் காவல்துறைச் செயல்பாடுகள் தொடர்பாகத் தனி ஆய்வுக் கூட்டமே நடத்துகிறேன். வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர், திருவண்ணாமலை, சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, நாமக்கல், மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை, இராமநாதபுரம், விருதுநகர் ஆகிய மாவட்டக் காவல்துறை அதிகாரிகளுடன் நேரடி ஆலோசனைகள் நடத்தியிருக்கிறேன். இந்த ஆய்வுக் கூட்டங்களின்போது, நிலுவையில் உள்ள முக்கிய வழக்குகள், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள், கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்கள் தொடர்பான குற்றங்கள் எனக் குற்ற வழக்குகள் தொடர்பான தகவல்கள் மட்டுமின்றி, காவலர் மற்றும் பொதுமக்கள் நலனில் காவல்துறையின் பங்கும் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வுகளின்போது வழங்கப்பட்ட அறிவுரைகளின் காரணமாக, சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் காவல் நிருவாகத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக உயரதிகாரிகள் எனக்கு அடிக்கடி தகவல் தந்து கொண்டிருக்கிறார்கள்.

கடந்த மூன்று மாதங்களுடன், சென்ற ஆண்டின் முதல் மூன்று மாத சராசரியை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, கொலைச் சம்பவங்கள் 13 விழுக்காடு குறைந்துள்ளன, கொள்ளைச் சம்பவங்கள் 18 விழுக்காடு, கன்னக்களவு 11 விழுக்காடு, கலவர வழக்குகள் 26 விழுக்காடு குறைந்துள்ளன. குறிப்பாக, முக்கிய வழக்குகளில் புலன் விசாரணையைத் தீவிரப்படுத்துதல், போதைப் பொருட்கள் நடமாட்டம் தொடர்பாக தொடர்ச் சோதனைகள் மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் நடத்துதல், நிலுவையில் உள்ள பிடியாணைகளை நிறைவேற்றுதல், பொதுமக்கள் மற்றும் காவலர் குறை தீர்ப்பு முகாம்களைக் காவல் கண்காணிப்பாளர்கள் முறையாக நடத்தி மனுக்களுக்குத் தீர்வு காணுதல், காவலர் வரவேற்புத் திட்டம் மற்றும் வார ஓய்வுத் திட்டம் ஆகியவற்றை முறையாக அமல்படுத்துதல் போன்றவற்றில் கூடுதல் ஈடுபாட்டுடன் செயல்படுவதாக நான் அறிகிறேன்.

இத்தகைய கள ஆய்வின்போது காவல் நிலையங்கள் உள்ளிட்ட எந்த அரசு அலுவலகங்களிலும் நான் திடீர்ச் சோதனை மேற்கொள்ளக்கூடும் என்ற எதிர்பார்ப்பு அனைவர் மத்தியிலும் எழுந்துள்ளது. இதனால் காவல் நிலையங்கள் உள்ளிட்ட அனைத்து அரசு அலுவலகங்களின் செயல்பாடுகளில் புது வேகம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

கடந்த 29.09.2021 அன்று தருமபுரி மாவட்டம், அதியமான்கோட்டை காவல் நிலையத்திற்கும், 15.04.2022 அன்று அம்பத்தூர் காவல் நிலையத்திற்கும் சென்று ஆய்வு மேற்கொண்டு, வழக்குகளின் பதிவேடுகள், பொதுமக்கள் அளித்த புகார்கள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்துக் கேட்டறிந்து, உரிய அறிவுரைகளை வழங்கினேன். இவை அனைத்தும் காவல்துறை அதிகாரிகள் மற்றும் அலுவலர்களுக்கும் ஆட்சிக்குமான நெருக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

குற்றங்களைத் தடுக்க நவீனத் தகவல் தொழில்நுட்பச் சாதனங்கள்

குற்றங்களுக்குத் தண்டனை வாங்கித் தரும் துறையாக மட்டுமல்ல, குற்றங்கள் நடைபெறாமல் தடுக்கும் துறையாகக் காவல்துறை செயல்பட வேண்டும் என்று நான் தொடர்ந்து அறிவுறுத்தி வருகிறேன். அந்த வகையில் காவல்துறையின் செயல்பாடு காரணமாகக் குற்றங்கள் நாளுக்கு நாள் குறைந்து வருகின்றன. குற்றங்களைத் தடுக்க காவலர்களுக்கு நவீனத் தகவல் தொழில்நுட்பச் சாதனங்கள் (Body worn Camera) வழங்கப்பட்டுள்ளது.

தி.மு.க. ஆட்சி அமைந்த பின்னர் காவல் துறையில், 1) ஸ்மார்ட் காவலர், 2) முகம் அடையாளம் காணும் திட்டம் (Face Recognition System), 3) தேசிய கைரேகை அடையாளம் காணும் திட்டம் (National Fingerprint Identification System), 4) காவல் உதவி செயலி, 5) Senior Officer பெட்டிஷன் சிஸ்டம், 6) E-office, 7) பந்தோபஸ்து மேனேஜர், 8) Road Safety Portal, 9) Drones - எனப் புதுமையான பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இவற்றுள் ஒரு சில திட்டங்கள் முன்பு அறிவிக்கப்பட்ட பழைய திட்டங்களாக இருந்தாலும், இங்கே, நேற்றைக்கு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் 45 நிமிடங்கள் அவர்களுடைய ஆட்சியில் என்ன நடந்தது, என்ன திட்டம் தீட்டினார்கள் என்று பட்டியல் போட்டார். ஆனால், அதுவெல்லாம் எந்த நிலையில் இருந்தது என்று சொல்லவில்லை. செயல்படாமல் இருந்த நிலையையெல்லாம்

இன்றைக்கு நாங்கள் சீர்படுத்தி, அதையெல்லாம் செய்துகொண்டிருக்கிறோம். ஆகவே, முன்பு அறிவிக்கப்பட்ட பழைய திட்டங்களாக இருந்தாலும், அவர்கள் அறிவித்தார்களே என்று கிடப்பில் போட்டுவிடவில்லை. அதை இன்றைக்கு முறைப்படுத்தி, அதையெல்லாம் இப்போது அரசு முழு வீச்சில் செயல்படுத்திக்கொண்டிருக்கிறது. இதுதான் உண்மை.

தமிழ்நாட்டைக் காவலர்கள் பாதுகாக்கும்போது அவர்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இந்த அரசுக்கு உள்ளது என்பதை நான் நன்றாக அறிவேன். கழக ஆட்சிக் காலத்தில் காவலர் நலன் எப்போதும் பேணிப் பாதுகாக்கப்பட்டுள்ளது. காவலர் நலன் காக்க, தி.மு.க. எப்போதெல்லாம் ஆட்சிக்கு வருகிறதோ, கலைஞர் எப்போதெல்லாம் முதலமைச்சராக வருகிறாரோ, அப்போதெல்லாம் ஆணையங்கள் மூன்று முறை அமைக்கப்பட்டுள்ளது. காவல்துறைக்காக, காவல்துறையினுடைய சீர்திருத்தத்திற்காக ஆணையங்கள் அமைக்கப்பட்டன.

ஐந்தாவது காவல் ஆணையம்

கடந்த ஆட்சிக் காலத்தில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த நான், காவல் ஆணையம் அமையுங்கள், அமையுங்கள் என்று பலமுறை இதே அவையில் கோரிக்கை வைத்தேன். அமைக்கப்படும் என்று அன்றைய முதலமைச்சர் வாக்குறுதி அளித்தார். ஆனால் அந்த நான்காவது காவல் ஆணையத்தையும் முறையாக அமைக்கவில்லை. பெயருக்கு அறிவித்தார்கள். அதை முறையாக அமைக்கவில்லை; செயல்படவும் இல்லை.

எனவே, நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதும், ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி சி.டி. செல்வம் அவர்கள் தலைமையில் ஐந்தாவது காவல் ஆணையத்தையும் புதியதாக அமைத்துள்ளோம்.

அந்த ஆணையத்தின் இடைக்கால அறிக்கை 17.03.2023 அன்று பெறப்பட்டது. அதன் பரிந்துரைகளின் அடிப்படையிலான நடவடிக்கைகளை இன்றைய அறிவிப்புகளில் நீங்கள் காணலாம். முழு அறிக்கை வந்தவுடன், காவலர் நலன் காக்கும் மேலும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதையும் உறுதியாக நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

காவல் நிலையங்களுக்கு வரும் பொதுமக்களை இன்முகத்தோடு வரவேற்றுக் குறைகளைக் கேட்டறிய ஒவ்வொரு காவல் நிலையத்திலும் வரவேற்பாளர்கள் (Receptionist) நியமிக்கப்பட்டனர். இப்பணிக்கு மறைந்த காவலர்களினுடைய வாரிசுகள் 1,132 பேருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டது. இதில் 1,088 நபர்களுக்கு இதுவரை பணியாணை வழங்கப்பட்டுள்ளது.

13.06.2021 முதல் முதலமைச்சர் மற்றும் முக்கியப் பிரமுகர்களின் வழிக்காவல் பணியிலிருந்து பெண் காவலர்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டது. அவர்களுக்கு இலகுவான பணிகளை வழங்கவும் உத்தரவிடப்பட்டது.

09.11.2021 முதல் காவலர், தலைமைக் காவலர், உதவி ஆய்வாளர், துணைக் கண்காணிப்பாளர்கள் ஆகியோருக்குத் தற்போது வழங்கப்படும் வீடுகளின் அளவை விட விகிதாச்சாரப்படி உயர்த்தி வழங்கி ஆணையிடப்பட்டது.

10.11.2021 முதல் காவல் ஆளிநர்கள் தற்செயல் விடுப்பிற்கு ஒப்புதல் அளிக்கும் மென்பொருள் "CLAPP", அது ஒரு APP "CLAPP" ரூ.10 இலட்சம் செலவில் அமல்படுத்தப்பட்டது.

16.11.2021 அன்று காவலர்களுக்குக் காவல் நிலையங்களில் உடற்பயிற்சி மேற்கொள்ள 38 மாவட்டங்கள் மற்றும் 7 மாநகரங்களில் உடற்பயிற்சிக்கூடம் அமைக்க தலா ரூ.2 இலட்சம் வீதம் ரூ.90 இலட்சம் அனுமதிக்கப்பட்டது.

காவல் துறையினரின் நலன்களைப் பாதுகாக்க காவலர்களுக்கு வழங்கப்படும் இடர்படி 24.11.2021 அரசாணையின்படி ரூ.800லிருந்து ரூ.1,000 ஆக உயர்த்தப்பட்டது.

01.12.2021 முதல் காவலர்களின் வாழ்க்கை துணைவியாருக்கும் மருத்துவப் பரிசோதனை, பெண்களுக்கான சிறப்புப் பரிசோதனை ஆகியவை அளிக்கப்பட்டு வருகின்றன.

24.01.2022 முதல் காவல் நிலையங்களில் உடனடி மற்றும் அவசரச் செலவுகளை மேற்கொள்ள ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் ரொக்க சில்லறைச் செலவின நிதி (Cash Contingency Fund) உயர்த்தி வழங்கப்பட்டது. 04.03.2022 அன்று புதியதாக ஆறு மாவட்டங்களில் காவலர் அங்காடிகள் நிறுவ உத்தரவிடப்பட்டது. 01.08.2022 அரசாணைமூலம் மெரினா கடற்கரையில் பொதுமக்கள் நீரில் மூழ்குவதை தடுக்க "மெரினா கடற்கரை உயிர் காப்புப் பிரிவு" அமைக்கப்பட்டது. இப்படி அறிவிப்புகளை ஆணையாக உடனுக்குடன் பிறப்பித்துள்ளதன்

காரணத்தால்தான் இந்த அரசு இதை கம்பீரமாக, இவைகளையெல்லாம் நாங்கள் சுட்டிக்காட்டுகிறோம். அதிலும் குறிப்பாகப் பெண் காவலர் நலனுக்காக ஏராளமான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. போலீஸ் போன்ற அதிகாரமிக்க பணிகளில் பெண்கள் ஈடுபடுத்தப்பட வேண்டும் என்று தந்தைப் பெரியார் அவர்கள் வலியுறுத்தினார்கள். இதற்குச் செயல்வடிவம் கொடுத்தவர் முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள்.

மகளிர் காவலர் இணைந்ததன் 50ஆவது ஆண்டு நிறைவு விழா

வரும் ஜூன் 3ஆம் நாள், 'தமிழினத் தலைவர்' கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடங்கவிருக்கிறது. அவரது நூற்றாண்டு தொடங்கும் ஆண்டிலேயே, அவர் முன்னெடுத்த முக்கியத் திட்டமான, தமிழ்நாடு காவல்துறையில் மகளிர் காவலர்கள் இணைந்ததன் 50ஆவது ஆண்டு நிறைவு பெறுகிறது. முத்தமிழறிஞர் கலைஞரின் முயற்சியால்தான் இன்று ஏராளமான பெண்களின் காவல்துறைக் கனவு நனவாகிக் கொண்டிருக்கிறது. இந்தியாவில் அதிக பெண் காவலர்களைக் கொண்ட முதல் ஐந்து மாநிலக் காவல்துறைகளில் தமிழ்நாடு காவல்துறையும் இன்றைக்கு இடம்பெற்றிருக்கிறது. தற்போது, எனது பாதுகாப்புக்கான உள்வட்ட பாதுகாப்புப் பிரிவிலேயே ஒரு பெண் உதவி ஆய்வாளர் மற்றும் எட்டு பெண் காவலர்கள் பணியாற்றி வருகிறார்கள்.

தமிழ்நாடு காவல்துறையில் மகளிர் காவலர்கள் இணைந்ததன் 50ஆம் ஆண்டு பொன்விழாவைத்தான் 17.03.2023 அன்று சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கிலே சிறப்பாகக் கொண்டாடினோம். அந்த நிகழ்ச்சியிலே சிறப்பு அஞ்சல் உறையினை வெளியிட்டோம். பெண்கள் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் 'அவள்' திட்டத்தை அறிமுகப்படுத்தி வைத்தேன். அந்த விழாவில் பெண் காவலர்களுக்கான சிறப்பு வாய்ந்த நவரத்தினத் திட்டங்களை அறிவித்தேன். ரோல்கால் என்ற காவல் வருகை அணிவகுப்பிற்கான நேரம் காலை 7 மணி என்பதைத் தளர்த்தி 8 மணியென மாற்றியமைக்கப்படும். சென்னை மற்றும் மதுரையில் பெண் காவலர்கள் தங்கும் விடுதிகள் அமைக்கப்படும். அனைத்துக் காவல் நிலையங்களிலும் பெண் காவலர்களுக்குக் கழிப்பறைகளுடன் தனி ஓய்வு அறை கட்டித்தரப்படும். தேவையான அனைத்து இடங்களிலும் காவல் குழந்தைகள் காப்பகம் அமைக்கப்படும். கலைஞர் காவல் பணி விருதும், கோப்பையும் ஆண்டுதோறும் வழங்கப்படும். பெண் காவலர்கள் குடும்பச் சூழ்நிலைக்கு ஏற்ப விடுப்பு மற்றும் பணியிடமாறுதல் வழங்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்படும். பெண் காவலர்களுக்குத் துப்பாக்கிச் சுடும் போட்டி ஆண்டுதோறும் நடத்தப்படும். பெண் காவலர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண 'காவல் துறையில் பெண்கள்' என்ற தேசிய மாநாடு ஆண்டுதோறும் நடத்தப்படும். பெண் காவலர்களின் நலனுக்காகப் பணி ஆலோசனை வழிகாட்டுதல் குழு அமைக்கப்படும் என்பன அந்த 9 அறிவிப்புகள். இவற்றை விரைந்து நிறைவேற்றவும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் பெண்ணியத்தையும், பெண் உரிமையையும், பெண் பாதுகாப்பையும் உறுதி செய்யக்கூடிய வகையில், காவல்துறையில் பெண்காவலர்கள் முதல் பெண் அதிகாரிகள் வரை அனைவரின் தேவைகளைப் பூர்த்தி செய்வது, அவர்களது நலனை மேம்படுத்த வேண்டியது அவசியம். இதனை உணர்ந்தே தி.மு.க. அரசு பெண் காவலர்களுக்குப் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகிறது.

காவலர் பணியிடங்கள் நிரப்புதல்

காவலர் பணியிடங்களைப் பொறுத்தவரைக்கும் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இரண்டாம் நிலைக் காவலர், சிறைக்காவலர், தீயணைப்பாளர் பணியிடங்களுக்கு 11,812 நபர்கள் 2021ஆம் ஆண்டு தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அதேபோன்று, 2022ஆம் ஆண்டு, 3,552 காலிப் பணியிடங்களுக்கு, காவலர்களை நியமித்திட தேர்வு நடத்தப்பட்டு, 29.03.2023 அன்று தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. சார்பு ஆய்வாளர் பணியிடத்திற்கு 2022இல் தேர்வு நடத்தப்பட்டு, 438 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், ஆயுதப்படை, தமிழ்நாடு சிறப்புக் காவல் படை மற்றும் தாலுகா உள்ளிட்ட பிரிவுகளுக்கு, 615 சார்பு ஆய்வாளர்களைத் தேர்வு செய்வதற்காகவும், ஆயுதப்படை மற்றும் தமிழ்நாடு சிறப்புக் காவல்படையில் 2,599 பணியிடங்களை நிரப்புவதற்கும், 106 சார்பு ஆய்வாளர் (தொழில்நுட்பம்) பணியிடங்களை நிரப்புவதற்கும், 63 சார்பு ஆய்வாளர் (விரல் ரேகை) பணியிடங்களை நிரப்புவதற்கும் உரிய அறிவிக்கைகள் விரைவில் வெளியிடப்படவுள்ளன.

காவல் துணைக் கண்காணிப்பாளர்களைப் பொறுத்தவரையில், அந்தப் பணியிடங்களை

நிரப்புவதற்கு, கடந்த 2021-2022ஆம் ஆண்டிற்கான 91 நபர்களை உள்ளடக்கிய தேர்ந்தோர் பட்டியல் வெளியிடப்பட்டு, பணியாணைகள் வழங்கப்பட்டுள்ளன. 2022-2023ஆம் ஆண்டைப் பொறுத்தவரையில், காவல் துணைக் கண்காணிப்பாளருக்கான காலிப்பணியிடம் 47 என நிர்ணயிக்கப்பட்டு, தேர்ந்தோர் பட்டியல் வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சிறு தண்டனைகள் ரத்து

2021-2022ஆம் ஆண்டு காவல்துறையின் மானியக் கோரிக்கையின்போது, காவலர்கள் மீதான சிறு தண்டனைகள் கைவிடப்பட்டு, அவர்களுக்கு உரிய பதவி உயர்வு மற்றும் சலுகைகள் வழங்கப்படும் என்ற அறிவிப்பினை வெளியிட்டோம். அந்த அறிவிப்பிற்கிணங்க, கடந்த 07.12.2021 அன்று அரசாணை வெளியிடப்பட்டு, அதன் அடிப்படையில் 2,249 சிறுதண்டனைகள் அரசால் ரத்து செய்யப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், “உங்கள் துறையில் முதலமைச்சர்” என்ற திட்டத்தின்கீழ், மொத்தம் 3,329 மனுக்கள் காவலர்களிடமிருந்து, காவல்துறைத் தலைமை இயக்குநர் அவர்களால் 01.07.2021 முதல் 31.03.2023 வரை பெறப்பட்டு, அவற்றுள் 2,930 மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, தண்டனைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன. அதோடுமட்டுமல்லாமல், நான் காவல்துறைத் தலைமை இயக்குநர் அலுவலகத்தை, 22.09.2022 அன்று ஆய்வு செய்தபோது, சிறு தண்டனைகளை ரத்து செய்யக் கோரி, காவலர்கள் என்னிடம் மனுக்களை அளித்தனர்.

அவற்றில், மொத்தம் 336 மனுக்கள் “உங்கள் துறையில் முதலமைச்சர்” திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டு, தற்போது அவை அரசின் நடவடிக்கையில் உள்ளது. எனவே, காவலர்கள் மீதான சிறுதண்டனையைப் பொறுத்தவரையில், மொத்தம் பெறப்பட்ட 5,922 மனுக்களில், 5,179 மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டு, காவலர்கள் மீதான தண்டனை ரத்து செய்யப்பட்டுள்ளது என்பதை இம்மாமன்றத்திற்கு மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

தடய அறிவியல்துறை ஆய்வு அறிக்கைகள்

குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதில் தடய அறிவியல் துறையின் பங்கு இன்றியமையாதது. நமது ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு 15 தடயவியல் ஆய்வுப் பிரிவுகள் கொண்ட சென்னை தலைமை ஆய்வகம் 13.05.2022 அன்று இந்தியத் தரச் சான்று நிறுவனத்தின் சான்றிதழைப் பெற்றுள்ளது.

2022 துவக்கத்தில் 19,347 வழக்குகள் ஆய்வுக்காக நிலுவையில் இருந்தன. 2022இல் பெறப்பட்ட 81,328 வழக்குகளையும் சேர்த்து, மொத்தம் 1 இலட்சத்து 675 வழக்குகள். இவற்றில் 31.12.2022 வரை 91,506 வழக்குகளில் தடய அறிவியல் துறை ஆய்வு அறிக்கை வழங்கியிருக்கிறது.

தடய அறிவியல் துறை வரலாற்றில் முதல் முறையாக கழக ஆட்சியில்தான் 91 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆய்வு அறிக்கைகள் அளிக்கப்பட்டு, இப்படியொரு சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது என்பதைப் பெருமையுடன் நான் சொல்லிக்கொள்கிறேன்.

இதை மேலும் வலுப்படுத்தும் வகையில், கோவையில் புதிய மரபணு ஆய்வுப் பிரிவு, மதுரை அறிவியல் ஆய்வகத்திற்கு ரூ.1.20 கோடி மதிப்பில் அதி நவீன மரபியல் ஆய்வுக் கருவி, போதைப் பொருட்களைத் துல்லியமாகக் கண்டறிய ரூ.2.50 கோடிச் செலவில் LC-MS எனும் அதி நவீன கருவி வாங்க ஒப்புதல் எனப் பெண்களுக்கு எதிரான குற்றங்கள், போக்சோ குற்றங்களின் விசாரணை, போதைப் பொருள் ஒழிப்பிற்குத் தேவையான விரைவான ஆய்வு என அனைத்திற்கும் முன்னுரிமை அளித்து, இத்துறை இந்த அரசில் செயல்பட்டு வருகிறது.

மக்களைப் பாதுகாக்கும் தீயணைப்பு வீரர்கள்

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை தன்னலமற்று உயிர்களையும், உடைமைகளையும் காப்பாற்றும் பணியினைச் சிறப்பாகச் செய்து வருகிறது. தீ விபத்து மற்றும் மீட்புப் பணி அழைப்புகளில் உடனடியாகத் தலையிட்டு, 2022ஆம் ஆண்டில் 6,275 மனித உயிர்களையும், ரூ.249.65 கோடி மதிப்புள்ள உடமைகளையும் காப்பாற்றியிருக்கிறார்கள்.

தீயணைப்பு வீரர்கள் பாதுகாப்பாக இருந்தால்தான் மக்களைப் பாதுகாக்க முடியும். அதனால், 1,350 தீ பாதுகாப்பு உடைகள், 450 மூச்சுக் கருவிகள், பாதுகாப்பு உபகரணங்களுடன்கூடிய 3,000 மீட்பு உடைகள் ரூ.49.62 கோடி மதிப்பில் வாங்கி, வழங்கப்பட்டுள்ளன.

பொதுமக்களின் சிறப்பானச் சேவைக்குத் தீயணைப்பு நிலையங்கள் மிக, மிக முக்கியம். ஆகவே, ரூ.62.18 கோடி மதிப்பில், மாநிலம் முழுவதும் 17 இடங்களில் புதிய தீயணைப்பு நிலையங்கள் மற்றும் 4 தரம் உயர்த்தப்பட்ட தீயணைப்பு நிலையங்கள் துவக்கி வைக்கப்பட்டுள்ளன. ட்ரோன்கள், புதிய நீர் தாங்கி வண்டிகள், அவசரக் கால சிறிய மீட்பு ஊர்திகள், வான்நோக்கி நகரும் ஏணி கொண்ட ஊர்தி, உயரழுத்த நீர்த் தாங்கி வண்டி உள்ளிட்ட தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிக்குத் தேவையான பல்வேறு வாகனங்கள் ரூ.24.63 கோடி மதிப்பில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

செங்குன்றம், போடிநாயக்கனூர், துறையூர், இராணிப்பேட்டை, சிவகாசி, பெரும்பாக்கம் உள்ளிட்ட 6 இடங்களில் தீயணைப்பு அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கு ரூ.40.63 கோடி மதிப்பில் 172 குடியிருப்புகள் கட்ட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. தீயணைப்புத் துறைப் பணியாளர்களின் நலனுக்காக இவ்வாறு பல்வேறு திட்டங்களை இந்த அரசு நிறைவேற்றி வருகிறது.

சாலைப் பாதுகாப்புக்கான சிறப்புப் பணிக்குழு

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கு உரையாற்றும்போது, தமிழ்நாட்டில் இயக்கப்படும் வாகனங்களின் எண்ணிக்கை, அதில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை போன்ற விவரங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்று தெரிவித்திருந்தார்கள். இதனைப் பொறுத்தவரையில், மானியக் கோரிக்கை எண் 25, இயக்கூர்திகள் சட்டங்கள்-நிருவாகம் குறித்த உள்துறைப் போக்குவரத்துக் (Home Transport) கொள்கை விளக்கக் குறிப்பில், பக்கம் 56இல் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை அவருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சாலைப் பாதுகாப்பைப் பொறுத்தவரையில், எங்களது அரசு பல சீரிய முயற்சிகளை எடுத்து வருகிறது. சாலைப் பாதுகாப்புத் தொடர்பாக அரசுக்கு அவ்வப்போது உரிய ஆலோசனைகளை வழங்கிட, மாநிலக் குற்ற ஆவணக் காப்பகத்தின் காவல்துறை கூடுதல் இயக்குநர் அவர்களின் தலைமையில் சாலைப் பாதுகாப்புக்கான சிறப்புப் பணிக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் சாலைப் பாதுகாப்பு முயற்சிகளைத் திறம்படச் செயல்படுத்திட ‘இன்னுயிர்க் காப்போம் திட்டம்’ எங்களது அரசால் வகுக்கப்பட்டு, சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 19.04.2023 வரை விபத்துக்குள்ளான 1,56,000 நபர்கள் பயனடைந்திருக்கிறார்கள். இத்திட்டத்தின்கீழ் ரூ.138.13 கோடிச் செலவிடப்பட்டுள்ளது.

2019இல் சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 18,129 ஆக இருந்த நிலையில், தமிழ்நாடு அரசின் சீரிய நடவடிக்கையால் 2022இல் 17,884 ஆக குறைக்கப்பட்டுள்ளது. முதலமைச்சரின் விபத்து நிவாரண நிதியின்கீழ் 2023-2024ஆம் ஆண்டிற்கு ரூ.120 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த அரசைப் பொறுத்தமட்டில், கடந்த அ.தி.மு.க. ஆட்சி உச்ச நீதிமன்றத்துக்கும், ஒன்றிய அரசுக்கும் விபத்து எண்ணிக்கையைக் குறைத்து, தவறான தகவல் அளித்ததுபோல் இல்லாமல், விபத்துக் குறித்த உண்மைத் தகவல்களைக் கொள்கை விளக்கப் புத்தகத்தில் வெளியிட்டுள்ளது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

காவலர் குடியிருப்புகள்

மாண்புமிகு உறுப்பினர் திரு. பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்கள், பொள்ளாச்சியில் காவலர் குடியிருப்புகள் கட்டுவதற்கான இடம் தயார் நிலையில் இருப்பதாகவும், அதனை உடனே கட்டித் தரவேண்டுமென்றும் ஒரு கோரிக்கை வைத்திருந்தார். அவரது கோரிக்கையைப் பொறுத்தவரையில், பொள்ளாச்சி வட்டம், ப்ளாக் எண் 26, வார்டு எண் D, பொள்ளாச்சி நகரத்தில் சர்வே எண்கள் 1592, 1594, 1597, 1599 காவல்துறைக்குச் சொந்தமான இடத்தில், 8 ஆய்வாளர் குடியிருப்புகளும், 20 உதவி ஆய்வாளர் குடியிருப்புகளும், 204 தலைமைக் காவலர், காவலர்களுக்கான குடியிருப்புகளும் கட்டுவதற்குத் திட்டமிட்டு, அதற்கான மதிப்பீடு ரூ.104 கோடிக்குத் தயார் செய்யப்பட்டு, தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும்

காவல்துறையின் மானியக் கோரிக்கையில் பேசிய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள், திரு. தி.வேல்முருகன் அவர்கள், திரு. ம.சிந்தனைச் செல்வன் அவர்கள், திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள் உள்ளிட்டோர் “1996ஆம் ஆண்டு நேரடி உதவி ஆய்வாளர்களாக நியமனம் செய்யப்பட்ட 1,100 காவல் உதவி ஆய்வாளர்கள், காவல் ஆய்வாளர்களாகப் பதவி உயர்வு பெற்ற பின்னர், அவர்களில் 241 பேர் காவல் துணைக்

கண்காணிப்பாளர்களாகப் பதவி உயர்வு பெறாமல் உள்ளனர் என்றும், அவர்களுக்குக் காவல் துணைக் கண்காணிப்பாளர் பதவிக்குரிய பயிற்சி வழங்கப்பட்டு, பணி ஆணை வழங்கப்படாமல் உள்ளதாகவும், இதுகுறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றும் கோரிக்கை விடுத்தார்கள். பொதுவாகக் காவல்துறையில் குறிப்பிட்ட பதவிகளுக்குக் காலிப் பணியிடங்கள் உருவாகும்போது அதற்கேற்றவாறு அந்தப் பணியிடங்கள் நிரப்பப்படுகின்றன.

ஆகவே காலிப்பணியிடங்கள் உருவாக, உருவாக நிச்சயம் காலதாமதம் இன்றிப் பதவி உயர்வு வழங்க அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

வருடாந்திரப் பராமரிப்பு ஒப்பந்தத்தில் கண்காணிப்புக் கேமராக்கள்

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சென்னை மாநகரக் காவல் எல்லைக்குள் இரண்டரை இலட்சம் கண்காணிப்புக் கேமராக்கள் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் வைக்கப்பட்டதாக கூறினார். ஆனால் அ.தி.மு.க. ஆட்சியில் உள்துறையிலிருந்து கடந்த 12.11.2020 அன்று வெளியிடப்பட்ட அரசாணை எண்.1348இன்படி அரசு நிதி மற்றும் தனியார் ஒத்துழைப்பில் பொருத்தப்பட்ட கண்காணிப்புக் கேமராக்கள் 1,45,282 மட்டுமே குறிப்பிடப்பட்டு, அவற்றின் பராமரிப்பிற்காக ரூ.50 இலட்சம் வழங்கியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே, இரண்டரை இலட்சம் சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்படவில்லை என்பதே உண்மை!

அது மட்டுமல்ல, தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் சென்னை மாநகரக் காவல் துறை லிமிட்டில் நடத்தப்பட்ட ஆய்வில், வெறும் 60,997 கண்காணிப்புக் கேமராக்கள் மட்டுமே இருந்தது. அவற்றிலும் அரசு செலவில் நிறுவப்பட்டவை வெறும் 2,853 மட்டுமே! மற்றவை தனியார் நன்கொடை மூலமும், தனியார் இடத்தில் அவர்களாலும் பொருத்தப்பட்டவை என்பதும் கண்டறியப்பட்டது.

சில இடங்களில் நாடாளுமன்ற, சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியையும் பயன்படுத்தி அந்த கேமராவை பொருத்தியிருக்கிறார்கள். ஆனால் இந்த அரசு பொறுப்பேற்ற பிறகுதான், 22,229 கேமராக்கள் இரண்டரைக் கோடி ரூபாய் செலவில் "வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம்" செய்யப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வருகிறது, புதிய கண்காணிப்புக் கேமராக்களும் பொருத்தப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நவீனத் தொழில்நுட்பங்கள்

மாண்புமிகு உறுப்பினர் திரு. சிந்தனைச் செல்வன் அவர்கள் சமூகநீதி கருத்துக்களை உள்ளடக்கி, பயிற்சி பெறும் காவலர்களுக்குப் பாடத் திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டுமெனக் கோரிக்கை வைத்திருந்தார். இதனைப் பொறுத்தவரையில், இணையவழிக் குற்றங்கள் (Cyber Crime), சமூக ஊடகங்களைக் கொண்டு, பொய்ச் செய்திகளைப் பரப்புவோர்மீது உரிய நடவடிக்கை எடுப்பது மற்றும் மனித உரிமை குறித்தான வளர்ச்சி, நவீனத் தொழில்நுட்பங்கள் போன்ற முக்கிய அம்சங்கள் இப்புதிய பாடத்திட்டத்தில் இடம்பெறும். அதற்கான கோப்பில் இரண்டு தினங்களுக்கு முன்புதான் நான் கையொப்பமிட்டேன். இதற்கான ஆணைகள் ஓரிரு நாட்களில் வெளியிடப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதனால், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத்தின்மூலம் தெரிவு செய்யப்படும் நேரடி உதவி ஆய்வாளர்கள் மாற்றியமைக்கப்பட்ட பயிற்சி பாடத்திட்டம் மற்றும் நடத்தை விதிகளின்படிப் பயிற்சிகளைப் பெறுவார்கள்.

முன் விடுதலைக்குப் பரிந்துரை வழங்க குழு

மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் இங்கே பேசும்போது முஸ்லிம் விடுதலைப் பற்றி குறிப்பிட்டார்கள். பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் 113ஆவது பிறந்தநாளை முன்னிட்டுச் சிறையில் நீண்டகாலம் சிறைவாசம் அனுபவித்துவரும் ஆயுள் தண்டனை கைதிகளின் தண்டனை பற்றிக் குறிப்பிட்டார்கள். நல்லெண்ணம், மனிதாபிமானம் அடிப்படையில் தண்டனையைக் குறைத்து முன்விடுதலை செய்வது குறித்து, இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு உரிய விரிவான வழிமுறைகளை வகுத்து அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து தமிழ்நாட்டுச் சிறைகளில் 10 ஆண்டுகள், 20 ஆண்டுகள் தண்டனை முடித்தும் இதன்கீழ் பயன்பெற முடியாத ஆயுள் தண்டனைச் சிறைவாசிகள், வயது முதிர்ந்த சிறைவாசிகள், பல்வேறு இணை நோய்கள் இருக்கக்கூடிய உடல்நலம் குன்றிய சிறைவாசிகள், தீராத நோயுற்ற மற்றும் மனநலம் குன்றிய சிறைவாசிகள், மாற்றுத்திறனாளி சிறைவாசிகள் ஆகியோர் நிலையை மனிதாபிமான அடிப்படையில் கருத்தில்கொண்டு இதுகுறித்தான மாண்பமை உச்சநீதிமன்றத் தீர்ப்புகள், இதுதொடர்பாகத் தற்போது

நடைமுறையில் உள்ள சட்டம், விதிகளின் அடிப்படையில் இவர்களின் நிகழ்வுகளை ஆராய்ந்தும், அவர்களின் முன்விடுதலைக்கு உரிய பரிந்துரை வழங்க ஏதுவாக, மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதியரசர் திரு. என்.ஆதிநாதன் அவர்களின் தலைமையின்கீழ் 6 பேர் அடங்கிய ஒரு குழு அமைக்கப்பட்டது.

ஆகவே, தி.மு.க. தேர்தல் அறிக்கையில் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற இந்த அரசு பொறுப்பேற்றவுடன் செயல்பட்டு நடவடிக்கை எடுத்திருக்கிறது. அவ்வாறு அமைக்கப்பட்ட ஓய்வுபெற்ற நீதியரசர் திரு.என்.ஆதிநாதன் அவர்களின் தலைமையிலான குழு தனது பரிந்துரைகளை அளித்துள்ளது. முன்விடுதலையின் அடுத்த கட்டமாக அந்தப் பரிந்துரைகளைச் சம்பந்தப்பட்ட அரசுத் துறைகளின் செயலாளர்கள், தலைமைச் செயலாளர் மற்றும் சட்ட வல்லுநர்கள் உள்ளிட்டோர் பரிசீலித்து வருகிறார்கள் என்பதை இந்த மாமன்றத்திற்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு காவல்துறை முதலிடம்

காவல்துறையினர் எந்தவிதக் குறுக்கீடும் இன்றிச் சுதந்திரமாகச் செயல்படுகிறார்கள். மாநிலத்தில் சட்டம் - ஒழுங்கைச் சிறப்பாக பராமரித்து குற்றங்களில் ஈடுபடுவோர் யாராயினும் அவர்கள்மீது பாரபட்சமின்றி நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

அதனால், புதிய முதலீட்டாளர்கள் தமிழ்நாட்டைத் தேடி வரக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிறோம். தொழில் பெருகி, நம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பும் அதிகரித்துக் கொண்டிருக்கிறது.

ஆகவே, மாநிலத்தின் வளர்ச்சியில் தமிழ்நாடு காவல்துறை முக்கிய பங்கு வகிக்கிறது என்பதை, அதுவும் குறிப்பாக, 10 ஆண்டு அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திற்குப் பிறகு, தமிழ்நாடு காவல்துறை "ஸ்காட்லான்ட் யார்டு" காவல்துறைக்கு இணையாகச் சிறப்பாகப் பணியாற்றி வருகிறது. அத்தகைய சுதந்திரத்தைக் காவல்துறைக்கு இந்த அரசு கொடுத்திருக்கிறது. இரண்டு ஆண்டுகள் தமிழ்நாடு காவல்துறை நிகழ்த்திய சாதனைகளுடன் திருப்தி அடையக்கூடியவன் அல்ல நான்.

அகில இந்திய அளவில் தமிழ்நாடு காவல்துறை இப்போது பிடித்துள்ள முதலிடத்தைத் தொடர்ந்து தக்க வைக்க வேண்டும் என்பதே இந்த அரசினுடைய இலக்கு. அதற்கு இந்த அரசு முழு முயற்சி எடுக்கும். தமிழ்நாடு காவல்துறையின் கடினமானப் பணியை, நம் சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் நன்கு உணர்வார்கள். ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இந்த வேண்டுகோளை வைக்கிறேன்.

அவரவர் தொகுதியில், சட்டம் ஒழுங்குப் பணியில் நியாயமாக, நேர்மையாக நடக்கும் காவலர்களை, காவல்துறை அதிகாரிகளை நீங்களும் மனதாரப் பாராட்டி, அவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்க வேண்டும். தமிழ்நாடு காவல்துறை, இந்தியாவில் முதலிடத்தைத் தொடர்ந்து தக்க வைத்துக் கொள்ளும் அளவிற்கு உதவிட வேண்டும் என்று நான் உங்களையெல்லாம் கேட்டுக்கொள்கிறேன். காவல்துறைக்கு நாம் ஆற்ற வேண்டிய கடமையும், காவல்துறையினர் நம் மக்களுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளும் இணைந்து, நமது 'திராவிட மாடல்' ஆட்சியில் தமிழ்நாட்டை முன்னேற்றப் பாதையில் நிச்சயம் கொண்டு செல்லும் என இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த மார்ச் 20ஆம் தேதியன்று தொடங்கிய இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர், இன்றுடன் முடிவடைகிறது. இந்த 21 அலுவல் நாட்களும் இந்த அவை ஆக்கப்பூர்வமாகச் செயல்பட்டது. மக்களாட்சிக்கு மதிப்பளிக்கும் விதமாக, அவை நடவடிக்கைகளில் ஈடுபட்ட அத்தனை சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தக் கூட்டத் தொடரிலும், ஆளுங்கட்சி உறுப்பினர்களைவிட எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கே அதிக நேரம் பேச வாய்ப்பு தரப்பட்டதாக நான் கருதுகிறேன். அந்த வகையில், இந்த அரசுக்குப் பல்வேறு ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளை வழங்கிய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், பல்வேறு கட்சிகளின் சட்டமன்றக் குழுத் தலைவர்கள் என அனைவருக்கும் இந்த நேரத்தில் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், மக்களாட்சியின் மாண்பைக் காக்கும் விதத்தில், இந்த மாமன்றத்தை வழிநடத்திய மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவரான தங்களுக்கும் நன்றி கூறி விடைபெறுவதற்குமுன், சில முக்கிய அறிவிப்புகளை வெளியிட விரும்புகிறேன்.

❖ ❖ ❖

சிறையிலிருந்து முன்விடுதலை செய்யப்பட்ட 660 முன்னாள் சிறைவாசிகளுக்குச் சுயதொழில் தொடங்கிட ரூ.3.30 கோடி நிதியுதவி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் வழங்கினார் - 05.05.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 05.05.2023 அன்று, சென்னை, ராஜா அண்ணாமலை மன்றத்தில் சிறைகள், சீர்திருத்தப் பணிகள் துறையின் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டுப் பொது மன்னிப்பில் சிறையிலிருந்து முன்விடுதலை செய்யப்பட்ட 660 முன்னாள் சிறைவாசிகளுக்குத் தமிழ்நாடு சிறை மீண்டோர் நலச்சங்கத்தின் சார்பில் சுயதொழில் தொடங்கிட ரூ.3.30 கோடிக்கான காசோலைகளை வழங்கிடும் அடையாளமாக 10 முன்னாள் சிறைவாசிகளுக்குக் காசோலைகளை வழங்கினார்.

இந்தியச் சிறைக்குழுவின் பரிந்துரைக்கிணங்க, தமிழ்நாடு சிறை மீண்டோர் நலச்சங்கம், அலுவல் சாரா நிறுவனமாக, 1921ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. சிறையிலிருந்து விடுதலை பெற்று வருபவர்களின் நல்வாழ்விற்காக, அவர்கள் மீண்டும் குற்றச்செயல்களில் ஈடுபடாமல் தடுத்து, அவர்கள் சமூகத்தில் நேர்மையாக வாழ்வதற்கு வழிவகை செய்யும் வகையில், சுயதொழில் தொடங்கிட தேவையான நிதி உதவிகளை வழங்குவதே இச்சங்கத்தின் குறிக்கோளாகும். சிறை மீண்டோர் நலச்சங்கம் இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டுமே உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

அந்த வகையில், தமிழ்நாடு சிறை மீண்டோர் நலச்சங்கம் மூலமாகப் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டுப் பொது மன்னிப்பில் முன்விடுதலை செய்யப்பட்ட 660 முன்னாள் சிறைவாசிகளுக்கு, அவர்கள் கறவை மாடுகள் வாங்குதல், தையல் தொழில், தேநீர்க் கடை, சலவைத் தொழில், உணவகம் அமைத்தல் போன்ற சுயதொழில்கள் தொடங்கிட ரூ.3.30 கோடிக்கான காசோலைகளை வழங்கிடும் அடையாளமாக 10 முன்னாள் சிறைவாசிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் சிறைகள், சீர்திருத்தப் பணிகள் துறையின் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் காசோலைகளை வழங்கினார்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் ரூ.30.72 கோடிச் செலவில் 7 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 10.05.2023 அன்று தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி, ஊராட்சித் துறை சார்பில் திருவாரூர், திண்டுக்கல், தருமபுரி, நீலகிரி, நாமக்கல், கன்னியாகுமரி, திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் ரூ.30.72 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி, ஊராட்சித்துறை அலுவலக வளாகக் கட்டடம் ஆகியவற்றைத் திறந்து வைத்து, ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர்களின் பயன்பாட்டிற்காக ரூ.25.40 கோடி மதிப்பிலான 200 புதிய வாகனங்களை வழங்கிடும் அடையாளமாக 12 வாகனங்களைக் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

ஊராட்சி ஒன்றியப் பணியாளர்கள், ஒன்றியக்குழு உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றிய அலுவலர்களை சந்திக்க வரும் பொதுமக்கள் ஆகியோரின் வசதிக்காக, பழைய பழுதடைந்த கட்டடங்களுக்குப் பதிலாகப் புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் கட்டும் திட்டம் 2008ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தலைமையிலான அரசால் முதன்முறையாக அறிமுகப்படுத்தப்பட்டது. அதன்படி, தற்போது வரை 277 புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் கட்ட அனுமதி வழங்கப்பட்டு, அதில் 205 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி, ஊராட்சித்துறை அலுவலக வளாகக் கட்டடத்தைத் திறந்து வைத்து, ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள் பயன்பாட்டிற்காக ரூ.25.40 கோடி மதிப்பிலான 200 புதிய வாகனங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் வழங்கினார். (10.05.2023)

ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் மற்றும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அலுவலக வளாகக் கட்டடம் திறந்து வைத்தல்

திருவாரூர் மாவட்டம் – குடவாசல் ஒன்றியத்தில் ரூ.3.17 கோடிச் செலவிலும், திண்டுக்கல் மாவட்டம் – ஒட்டன்சத்திரம் ஒன்றியத்தில் ரூ.3.08 கோடிச் செலவிலும், தருமபுரி மாவட்டம் – ஏரியூர் ஒன்றியத்தில் ரூ.3.21 கோடிச் செலவிலும் மற்றும் கடத்தூர் ஒன்றியத்தில் ரூ.3.10 கோடிச் செலவிலும், நீலகிரி மாவட்டம் – கோத்தகிரி ஒன்றியத்தில் ரூ.3.50 கோடிச் செலவிலும், நாமக்கல் மாவட்டம் –

வெண்ணந்தூர் ஒன்றியத்தில் ரூ.2.91 கோடிச் செலவிலும், கன்னியாகுமரி மாவட்டம் – முஞ்சிறை ஒன்றியத்தில் ரூ.3.90 கோடிச் செலவிலும் கட்டப்பட்டுள்ள 7 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்த ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள், ஊராட்சி ஒன்றியக் கூட்ட அரங்கு, பயிற்சி அரங்கு, ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர், வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கான அறைகள், பொறியியல் பிரிவிற்கெனத் தனி அலுவலக இடம், கணினி அறை, எழுதுபொருட்கள் பாதுகாப்பு அறை உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் 17,324 சதுர அடி பரப்பளவில், இரண்டு தளங்களுடன் கட்டப்பட்டுள்ளன.

மேலும், திருச்சிராப்பள்ளியில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின்கீழ் இயங்கி வரும் மாவட்ட அளவிலான அலுவலகங்களை ஒருங்கிணைக்கும் வகையில், பல்வேறு அலுவலர்களுக்கான தனித்தனி அறைகளுடன் ரூ.7.85 கோடிச் செலவில் 28,716 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலக வளாகக் கட்டடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள் பயன்பாட்டிற்காக 200 புதிய வாகனங்கள் வழங்குதல்

ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள், அவ்வொன்றியப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் பணிகளைக் கண்காணிக்கும் பொருட்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, 2008ஆம் ஆண்டில் முதன்முதலாக வாகனங்கள் வழங்கப்பட்டன.

13 ஆண்டுகள் கடந்த நிலையில் தற்போது மீண்டும் இவ்வரசால் தமிழகத்திலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்களுக்கும் புதிய வாகனங்கள் வழங்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 22.04.2022 அன்று தமிழ்நாடு சட்டப்பேரவை விதி 110இன் கீழ் அறிவித்தார்.

அதன்படி, முதற்கட்டமாக ரூ.25.40 கோடி மதிப்பிலான 200 புதிய ஸ்கார்பியோ வாகனங்களை ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர்களின் பயன்பாட்டிற்காக வழங்கிடும் அடையாளமாக 12 வாகனங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

அரசு பொதுத் தேர்வில் மாநில அளவில் முதலிடம் பெற்ற மாணவிக்கு வாழ்த்து

படமும்/செய்தியும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களை 09.05.2023 அன்று முகாம் அலுவலகத்தில், பன்னிரெண்டாம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் மாநில அளவில் முதல் மதிப்பெண் பெற்ற திண்டுக்கல், அண்ணாமலையார் மில்ஸ் பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவி செல்வி ச. நந்தினி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

திண்டிவனத்தில் நவீன வசதிகளுடன் ரூ.155 கோடி மதிப்பீட்டில் மருந்துப் பூங்கா

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
அடிக்கல் நாட்டினார் - 05.05.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 05.05.2023 அன்று தலைமைச் செயலகத்தில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில், விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் சிப்காட் வளாகத்தில் 111 ஏக்கர் பரப்பளவில், ரூ.155 கோடித் திட்ட மதிப்பீட்டில் பல்வேறு நவீன வசதிகளுடன் அமைக்கப்படவுள்ள மருந்துப் பூங்காவிற்கு அடிக்கல் நாட்டினார். மேலும், தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க மையத்தின் வாயிலாகச் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினர் புத்தொழில் நிதித்திட்டத்தின்கீழ்த் தேர்ந்தெடுக்கப்பட்ட 8 நிறுவனங்களுக்கு மொத்தம் ரூ.9.75 கோடி பங்கு முதலீடு செய்வதற்கான ஒப்புதல் ஆணைகளையும், தமிழ்நாடு புத்தொழில் ஆதார நிதித்திட்டத்தின்கீழ்த் தேர்ந்தெடுக்கப்பட்ட 25 நிறுவனங்களுக்கு முதல் தவணை நிதியாகத் தலா ரூ.5 இலட்சம் வீதம் ரூ.1.25 கோடி நிதி வழங்குவதற்கான ஒப்புதல் ஆணைகளையும் வழங்கினார்.

திண்டிவனம் சிப்காட் வளாகத்தில் மருந்துப் பூங்காவிற்கு அடிக்கல் நாட்டுதல்

திண்டிவனம் சிப்காட் வளாகத்தில் 111 ஏக்கர் பரப்பளவில், ரூ.155 கோடி திட்ட மதிப்பீட்டில் பல்வேறு நவீன வசதிகளுடன் அமைக்கப்படவுள்ள மருந்துப் பூங்காவிற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 05.05.2023 அன்று அடிக்கல் நாட்டினார்.

மருந்துப் பொருட்கள் தயாரிப்பதற்கான பிரத்யேக தொழில்பூங்கா விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் சிப்காட் தொழில் பூங்காவில் 111 ஏக்கர் பரப்பளவில் பல்வேறு நவீன வசதிகளைக் கொண்ட (State-of-Art) மருந்துப் பூங்கா அமைப்பதற்கான அரசாணை வெளியிடப்பட்டு ரூ.155 கோடி திட்ட மதிப்பீட்டில் பெருங்குழுமத் திட்டத்தின்கீழ் (Mega Cluster Scheme) அமைக்கப்படுகிறது. இத்திட்டத்திற்குத் தமிழ்நாடு அரசின் நிதியுதவியாக ரூ.51.56 கோடி மற்றும் ஒன்றிய அரசின் நிதியுதவியாக ரூ.20 கோடியில் பொது வசதி மையம், உலகளாவிய தரக் கட்டுப்பாட்டுச் சோதனை மையம், பூஜ்ய திரவ வெளியேற்றத்துடன் கூடிய கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையம், மருந்துப் பொருட்களை சேமிப்பதற்கான சேமிப்பு கிடங்கு போன்றவை அமைக்கப்படவுள்ளன.

இப்பூங்காவில் 40க்கும் மேற்பட்ட மருந்து தயாரிக்கும் நிறுவனங்கள் அமைக்கப்படுவதன் மூலம் சுமார் 6,000 நபர்கள் நேரடியாகவும் 10,000 நபர்கள் மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு பெறுவர்.

தமிழ்நாடு பட்டியலினத்தவர்/பழங்குடியினர் புத்தொழில் நிதித்திட்டம்

புதுயுகத் தொழில்முனைவில் அனைத்துச் சமூகத்தினரையும் உள்ளடக்கிய வளர்ச்சியினை அடைவதற்காகத் தமிழ்நாடு அரசால் தமிழ்நாடு பட்டியலினத்தவர் / பழங்குடியினர் புத்தொழில் நிதித்திட்டம், தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கத்தின் வழியாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தப் பிரிவுகளைச் சார்ந்த தொழில் முனைவோர்களால் தொடங்கி நடத்தப்பட்டு வரும் புத்தொழில் நிறுவனங்களுக்குப் பங்கு முதலீடாக அல்லது பிணையில்லாக் கடனாக நிதி வழங்கக் கடந்த நிதி ஆண்டில் ரூ.30 கோடி நிதியுடன் இந்த நிதியம் தொடங்கப்பட்டது. இந்த நிதியாண்டில் ரூ.50 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் பயன்பெற விண்ணப்பித்திருந்த நிறுவனங்களில் இருந்து தகுதியான நடுவர் குழுவின் வாயிலாக இரண்டாம் கட்டமாக 8 நிறுவனங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

மேம்பட்ட உற்பத்தித் துறையில் இயங்கும் குகன் இண்டஸ்ட்ரியல் மேனுபேக்சரிங் சொல்யூசன்ஸ், பொழுதுபோக்கு ஊடகத் துறையில் இயங்கும் ஷார்ட்ஃபண்ட்லி, கட்டடவியல் துறையில் இயங்கும் ஸ்பிரிண்ட்6, செயற்கை நுண்ணறிவுத் துறையில் இயங்கும் இண்டியா ஸ்பீக்ஸ், மருத்துவத் தொழில்நுட்பத் துறையில் இயங்கும் டெஸ்டிராட்டம் சொல்யூசன்ஸ் ஆகிய நிறுவனங்களும், பழங்குடியினரால் தொடங்கப்பட்டுள்ள தாளவாடிப் பசுமை எரிபொருள் தயாரிப்பு நிறுவனம், நம்சந்தை - கோத்தகிரி டிரைபல் பிரைவேட் லிமிடெட், சோழகர் டிரைபல் கிரியேசன்ஸ் ஆகிய நிறுவனங்களும் பங்கு முதலீட்டினைப் பெற தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. அந்த நிறுவனங்களுக்கு மொத்தம் ரூ.9.75 கோடி பங்கு முதலீடாக வழங்கப்பட உள்ளது. இதற்கான ஒப்புதல் ஆணைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

தமிழ்நாடு புத்தொழில் ஆதார நிதி (TANSEED)

தொடக்க நிலையில் உள்ள புத்தொழில் நிறுவனங்களுக்கு, ஆதரவு அளிக்கும் வகையில் தமிழ்நாடு அரசானது தகுதியான நிறுவனங்களுக்கு ரூ.10 இலட்சம் ஆதார நிதியாக "தமிழ்நாடு புத்தொழில் ஆதார நிதி – TANSEED" திட்டத்தின்கீழ் வழங்கி வருகிறது. இதுவரை நடைபெற்ற பதிப்புகளில் 84 புத்தொழில் நிறுவனங்கள் இத்திட்டத்தில் பயனடைந்துள்ளன.

தற்போது டான்சீட் 4ஆவது பதிப்பில் இரண்டாம் கட்டமாக உற்பத்தி, நவீனக் கட்டடவியல், இணையப் பாதுகாப்பு, மாற்றுத்திறனாளிகளுக்கான தொழில்நுட்பம், மருத்துவத் தொழில்நுட்பம் போன்ற பல்வேறு துறை சார்ந்து இயங்கும் 25 நிறுவனங்கள் புத்தொழில் ஆதார நிதியினை பெறுவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அதன்படி, தேர்ந்தெடுக்கப்பட்ட 25 நிறுவனங்களுக்கு முதல் தவணை நிதியாக தலா ரூ.5 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.1.25 கோடி நிதி வழங்குவதற்கான ஒப்புதல் ஆணைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

படமும்/ செய்தியும்

அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 133ஆவது பிறந்த நாள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 17.04.2023 அன்று அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 133ஆவது பிறந்த நாளான சமத்துவ நாளையொட்டி, சென்னை, ராஜா அண்ணாமலைபுரம், அண்ணல் அம்பேத்கர் மணிமண்டபத்தில் உள்ள அண்ணல் அம்பேத்கர் அவர்களின் திருவுருவச்சிலைக்கு அருகில் வைக்கப்பட்டிருந்த அன்னாரின் திருவுருவப்படத்திற்குத் தமிழ்நாடு அரசின் சார்பில் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

'வெள்ளுடை வேந்தர்' சர். பிட்டி தியாகராயர் அவர்களின் 172ஆவது பிறந்த நாள்

'வெள்ளுடை வேந்தர்' சர்.பிட்டி.தியாகராயர் அவர்களின் 172 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு தமிழ்நாடு அரசின் சார்பில் 27.04.2023 அன்று பெருநகரச் சென்னை மாநகராட்சி ரிப்பன் மாளிகை வளாகத்தில் அமைந்துள்ள அன்னராது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த திருவுருவப்படத்திற்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு பெருநகரச் சென்னை மாநகராட்சி மேயர், சட்டமன்ற உறுப்பினர்கள், பெருநகரச் சென்னை மாநகராட்சித் துணை மேயர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களின் பிறந்த நாள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, சென்னை, கிண்டியில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலையின் கீழ் வைக்கப்பட்டிருந்த திருவுருவப் படத்திற்கு 17.04.2023 அன்று மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் 133ஆவது பிறந்த நாள்

'பாவேந்தர் பாரதிதாசன்' அவர்களின் 133ஆவது பிறந்த நாளையொட்டி, சென்னை மெரினா கடற்கரை, காமராஜர் சாலையில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த திருவுருவப் படத்திற்கு தமிழ்நாடு அரசின் சார்பில் 29.04.2023 அன்று மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு பெருநகரச் சென்னை மாநகராட்சி மேயர், பெருநகரச் சென்னை மாநகராட்சி துணை மேயர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறைச் செயலாளர், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

முன்னாள் இந்திய கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் வி.பி. இராமன் அவர்கள் பெயரில் சாலை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார் (25.04.2023).

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 25.04.2023 அன்று, தலைமைச் செயலகத்தில், பெருநகரச் சென்னை மாநகராட்சி சார்பில், முன்னாள் இந்தியக் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் வி.பி. இராமன் அவர்கள் வசித்து வந்த லாயிட்ஸ் கார்னர் எனப் பெயரிடப்பட்ட வீடு அமைந்துள்ள பகுதியான மெரினாக் கடற்கரை, காமராஜர் சாலை முதல் இந்தியன் வங்கித் தலைமை அலுவலகம் வரையுள்ள சாலைப் பகுதிக்கு, “வி.பி. இராமன் சாலை” எனப் புதிய பெயர் சூட்டப்பட்ட சாலையின் பெயர் பலகையைக் காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார்.

மறைந்த வி.பி. இராமன் அவர்கள், முன்னாள் இந்தியக் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் மற்றும் ஒன்றிய அரசின் சட்ட அலுவலராக நியமிக்கப்பட்ட முதல் தென்னிந்தியராகவும், பின்னர் தமிழ்நாடு அரசின் அட்வகேட் ஜெனரலாகவும், அவர் இறக்கும் நாள் வரை இந்திய வழக்கறிஞர் கழகத்தின் முன்னணி உறுப்பினராகவும் இருந்தார். சட்டக் கல்லூரியில் துணைப் பேராசிரியராகவும் பணிபுரிந்தார். பேரறிஞர் அண்ணா அவர்களின் கொள்கையில் பெரிதும் ஈர்க்கப்பட்டுத் திராவிட இயக்கத்தில் சேர்ந்து செயல்பட்டார். பேரறிஞர் அண்ணா அவர்களின் ஆங்கில இதழான ஹோம் லேண்ட் இதழின் துணை ஆசிரியர் என்று பல பொறுப்புகளை வகித்தார். முத்தமிழறிஞர் கலைஞர் மற்றும் சமகாலத்துத் தலைவர்களின் பேரன்பையும், நன்மதிப்பையும் பெற்றவராகவும் திகழ்ந்தார். கல்வி மட்டுமின்றி, கருநாடக இசை, ஆங்கில இலக்கியம், கிரிக்கெட் என்று பன்முகத்திறன் கொண்டவராகவும் விளங்கினார்.

வி.பி. இராமன் அவர்களுக்குச் சிறப்புச் சேர்க்கின்ற வகையில், மெரினாக் கடற்கரை காமராஜர் சாலை முதல் இந்தியன் வங்கித் தலைமை அலுவலகம் வரை கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி செல்லக்கூடிய அவ்வை சண்முகம் சாலை எனப் பெயரிடப்பட்டுள்ள சாலைப் பகுதியினை “வி.பி. இராமன் சாலை” எனத் தமிழ்நாடு அரசால் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. வி.பி. இராமன் அவர்கள் வாழ்ந்த லாயிட்ஸ் கார்னர் இல்லமும் இப்பகுதியிலே அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

தேனி, திருச்சிராப்பள்ளி, ஈரோடு, வேலூர் மாவட்டங்களில்
ரூ.284.32 கோடி மதிப்பீட்டில் 2,828 குடியிருப்புகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் திறந்து வைத்தார் - 10.04.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 10.04.2023 அன்று, தலைமைச் செயலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின்கீழ் செயல்படும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் ரூ.284.32 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள 2,828 குடியிருப்புகளைத் திறந்து வைத்தார். மேலும், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் 330 பயனாளிகளுக்குக் குடியிருப்புகளுக்கான ஒதுக்கீடு ஆணைகள், 5,430 பயனாளிகளுக்குப் பணி ஆணைகள், 518 பயனாளிகளுக்கு அடுக்குமாடி மற்றும் மனைகளுக்கான உரிமை ஆவணங்களை வழங்கினார்.

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்

அனைவருக்கும் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ்ச் சென்னை என்.வி.என்.நகர்த் திட்டப் பகுதியில் பழுதடைந்த பழைய குடியிருப்புகள் இடிக்கப்பட்டு, மறுகட்டுமான திட்டத்தின்கீழ்த் தூண், 14 அடுக்குகளுடன் ரூ.104.10 கோடிச் செலவில் 840 புதிய குடியிருப்புகள்;

தேனி மாவட்டம், தேனி, அப்பியபட்டி திட்டப் பகுதியில் தரை மற்றும் இரண்டு தளங்களுடன் ரூ.41.50 கோடிச் செலவில் 432 அடுக்குமாடிக் குடியிருப்புகள், போடிநாயக்கனூர், பரமசிவன் கோயில் தெரு திட்டப்பகுதியில் தரை மற்றும் இரண்டு தளங்களுடன் ரூ.16.35 கோடிச் செலவில் 168 அடுக்குமாடிக் குடியிருப்புகள்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம், இருங்களூர் பகுதி – 2 திட்டப்பகுதியில் தரை மற்றும் இரண்டு தளங்களுடன் ரூ.21.16 கோடிச் செலவில் 240 அடுக்குமாடிக் குடியிருப்புகள், தஞ்சாவூர் மாவட்டம், கூடநாணல் திட்டப்பகுதியில் தரை மற்றும் இரண்டு தளங்களுடன் ரூ.19.21 கோடிச் செலவில் 240 அடுக்குமாடிக் குடியிருப்புகள்;

ஈரோடு மாவட்டம், அரக்கன்கோட்டை திட்டப் பகுதியில் தரை மற்றும் இரண்டு தளங்களுடன் ரூ.15.16 கோடிச் செலவில் 180 அடுக்குமாடிக் குடியிருப்புகள், கோயம்புத்தூர் மாவட்டம்,

பச்சினம்பதித் திட்டப்பகுதியில் தனி வீடுகளாக ரூ.6.88 கோடிச் செலவில் 80 குடியிருப்புகள், உக்கடம் பகுதி IV திட்டப்பகுதியில் தரை மற்றும் மூன்று தளங்களுடன் ரூ.19.39 கோடிச் செலவில் 224 அடுக்குமாடிக் குடியிருப்புகள்;

வேலூர் மாவட்டம், தொரப்பாடி திட்டப் பகுதியில் தரை மற்றும் மூன்று தளங்களுடன் ரூ.17.41 கோடிச் செலவில் 160 அடுக்குமாடிக் குடியிருப்புகள், இராமநாதபுரம் மாவட்டம், பட்டிணம்காத்தான் திட்டப்பகுதியில் தரை மற்றும் இரண்டு தளங்களுடன் ரூ.23.16 கோடிச் செலவில் 264 குடியிருப்புகள்;

என மொத்தம், ரூ.284.32 கோடிச் செலவில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள 2,828 குடியிருப்புகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ள இப்புதிய குடியிருப்புகள், ஒவ்வொன்றும் தலா 400 சதுர அடி பரப்பளவுடன், ஒரு பல்நோக்கு அறை, படுக்கை அறை, சமையல் அறை, கழிவறை ஆகிய வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது. மேலும், அனைத்துக் குடியிருப்பு வளாகங்களும், சாலை வசதி, குடிநீர் வசதி, கழிவு நீரேற்று வசதி, மழைநீர்ச் சேகரிப்புக் கட்டமைப்பு ஆகிய வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. "நம் குடியிருப்பு, நம் பொறுப்பு" திட்டத்தின்கீழ் அனைத்துத் திட்டப்பகுதிகளிலும் குடியிருப்போர் நலச்சங்கங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

இவ்வரசு பொறுப்பேற்றதிலிருந்து இதுவரை ரூ.1,225.26 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட 12,495 அடுக்குமாடி குடியிருப்புகள் வீடற்ற ஏழை, எளிய மக்களுக்காகவும், குடிசைப் பகுதிகளில் வாழும் மக்களுக்காகவும் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

குடியிருப்புகளுக்கான ஒதுக்கீடு ஆணைகள் மற்றும் பணி ஆணைகள் வழங்குதல்

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் 330 பயனாளிகளுக்குக் குடியிருப்புகளுக்கான ஒதுக்கீடு ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 2 பயனாளிகளுக்கும், பயனாளிகள் தாமாக வீடு கட்டும் திட்டத்தின்கீழ் பல்வேறு மாவட்டங்களிலுள்ள 157 பகுதிகளில் வசிக்கும் 5,430 பயனாளிகளுக்குத் தனி வீடுகள் கட்ட தலா ரூ.2.10 இலட்சம் வீதம் ரூ.114.03 கோடி மதிப்பீட்டிலான பணி ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 2 பயனாளிகளுக்கும், அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கான 350 உரிமை ஆவணங்களும், மனைகளுக்கான 168 உரிமை ஆவணங்களும் என 518 பயனாளிகளுக்கு உரிமை ஆவணங்களை வழங்கிடும் அடையாளமாக 4 பயனாளிகளுக்கு ஆணைகளையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

கோயம்புத்தூரில் வ.உ.சி. அவர்களுக்கும், மயிலாடுதுறையில் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் மற்றும் புதுக்கோட்டையில் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் அவர்களுக்கும் திருவுருவச் சிலைகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் திறந்து வைத்தார் - 10.05.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 10.05.2023 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில் கோயம்புத்தூர் வ.உ.சி. பூங்காவில் வ.உ.சிதம்பரனார் அவர்களுக்கும், மயிலாடுதுறையில் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் அவர்களுக்கும், புதுக்கோட்டையில் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் அவர்களுக்கும், ரூ.66 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள திருவுருவச் சிலைகளை காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார். மேலும், ஈரோடு மாவட்டத்தில் உத்தமத் தியாகி ஈரோடு ஈஸ்வரன் அவர்களுக்கும், நாமக்கல் மாவட்டத்தில் சென்னை மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் ப. சுப்பராயன் அவர்களுக்கும் ரூ.5.10 கோடி மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்படவுள்ள திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

சுதந்திரப் போராட்ட வீரர் வ.உ.சிதம்பரனார் அவர்களின் 150ஆவது பிறந்த நாள் விழாவையொட்டி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 03.09.2021 அன்று சட்டப்பேரவையில், தனது வாழ்நாளின் முக்கிய நாட்களைக் கோவைச் சிறையில் கழித்த வ.உ.சிதம்பரனார் அவர்களுடைய முழு உருவச் சிலை கோயம்புத்தூர் வ.உ.சி. பூங்காவில் அமைக்கப்படும் என்றும், 2021-2022ஆம் ஆண்டிற்கான செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மானியக் கோரிக்கையில், பெண் சமூகச் சீர்திருத்தவாதி, எழுத்தாளர், தேவதாசி ஒழிப்பு இயக்கம் மற்றும் திராவிட இயக்கத்தின் அரசியல் முன்னோடியுமான மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் அவர்களுக்கு மயிலாடுதுறையில் திருவுருவச் சிலை அமைக்கப்படும் என்றும், இந்தியாவின் முதல் பெண் சட்டப்பேரவை உறுப்பினர், இந்தியப் பெண்கள் சங்கத்தின் முதல் தலைவர், தமிழ்நாட்டின் சமூகச் சீர்திருத்தப் பெண் மருத்துவர் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் அவர்களுக்குப் புதுக்கோட்டையில் திருவுருவச் சிலை அமைக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டன.

அதன்படி, கப்பலோட்டியத் தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களுக்குக் கோயம்புத்தூர் வ.உ.சிதம்பரனார் பூங்காவில் ரூ.40 இலட்சம்

செலவிலும், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் அவர்களுக்கு மயிலாடுதுறையில் உள்ள வரதாச்சாரியார் பூங்காவில் ரூ.16 இலட்சம் செலவிலும், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் அவர்களுக்குப் புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை வளாகத்தில் ரூ.10 இலட்சம் செலவிலும் அமைக்கப்பட்டுள்ள திருவுருவச் சிலைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார்.

2021-2022ஆம் ஆண்டிற்கான செய்தி மக்கள் தொடர்புத்துறையின் மானியக் கோரிக்கையில், கொங்கு மண்டலத்தில் சுமார் இரண்டு இலட்சம் ஏக்கர் பாசன வசதி பெறும் நீர்ப்பாசனத் திட்டமான கீழ்பவானிப் பாசனத் திட்டம் கொண்டுவர முக்கியக் காரணகர்த்தாவாக இருந்த ஈரோடு தொகுதியின் சட்டமன்ற முன்னாள் உறுப்பினரும், சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்றுச் சுமார் 11 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்த உத்தமத் தியாகி திரு.ஈஸ்வரன் அவர்களது நினைவைப் போற்றும் வகையில் ஈரோடு மாவட்டத்தில் திருவுருவச் சிலை மற்றும் அரங்கம் அமைக்கப்படும் என்றும், தமிழுக்கும், தமிழக மக்களுக்கும் அயராது உழைத்தவரும், சமூகநீதிக் கோட்பாடுகளுக்காகச் சட்டவடிவம் கொடுத்தவருமான, சென்னை மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் ப.சுப்பராயன் அவர்களது சேவைகளை நினைவுகூரும் வகையில், அன்னாருக்கு நாமக்கல் நகரில் அரங்கம் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, உத்தமத் தியாகி திரு. ஈஸ்வரன் அவர்களுக்கு ஈரோடு மாவட்டம், பவானி சாகர், முடுக்கன்துறையில் ரூ.2.60 கோடி மதிப்பீட்டிலும், முன்னாள் முதலமைச்சர் டாக்டர் ப. சுப்பராயன் அவர்களுக்கு நாமக்கல் மாவட்டம், புதுச்சத்திரம் வட்டாரம், நவணிதோட்டக்கூர்பட்டியில் ரூ.2.50 கோடி மதிப்பீட்டிலும் கட்டப்படவுள்ள திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கங்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

படமும்/செய்தியும்

6 வழிச்சாலை அமைக்கும் பணி ஆய்வு

சென்னை, திருவான்மியூர் முதல் அக்கரை வரை நான்கு வழிச் சாலையாக உள்ள கிழக்குக் கடற்கரைச் சாலையை, ஆறு வழிச் சாலையாக அமைக்கும் பொருட்டு ரூ.1,111 கோடி மதிப்பில் 10.50 கி.மீ. நீளத்திற்கு நில எடுப்புடன் கூடிய சாலை அகலப்படுத்தும் பணியைத் தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., அவர்கள் 16.04.2023 அன்று ஆய்வு செய்து நில எடுப்பு மற்றும் கட்டுமானப் பணிகளைத் துரிதமாக முடிக்க உத்தரவிட்டார்.

விளையாட்டுக்களுக்குப் புத்துயிர் அளிக்கும் நோக்கத்தில் மக்களுடன் பெரு நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுவதற்கான ஒரு முன்னெடுப்பு

உங்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Like everyone in Tamil Nadu, I am also a very big fan of M.S. Dhoni. Recently, I went to Chepauk twice, to see Dhoni's batting.

I hope our adopted son of Tamil Nadu will continue to play for CSK. Coming from a humble background, Dhoni became a National icon with his hard work. He is an inspiration for millions of Indian youth. That is why, he is here today as the ambassador of this initiative. We want to create many more Dhonis from our Tamil Nadu, not just in cricket, but in all sports.

தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை என்ற அமைப்பைத் தொடங்கி வைப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். விளையாட்டுத் துறையின் வளர்ச்சியானது மிகப்பெரிய பிரமாண்டத்தை இரண்டு ஆண்டு காலத்தில் அடைந்திருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் உதயநிதி அவர்களது பொறுப்பில் விளையாட்டுத் துறையானது மேலும் மாபெரும் எழுச்சியைப் பெற்றுள்ளது. விளையாட்டுத் துறையில் மிகப்பெரிய மறுமலர்ச்சியை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஏற்படுத்துவார் என்று உங்களைப்போல் நானும் நம்புகிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், 08.05.2023 அன்று சென்னையில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், **"தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை"** யைத் தொடங்கி வைத்து, **"முதலமைச்சர் கோப்பை போட்டிகள் 2023"**-க்கான **"வீரன்"** சின்னம், கருப்பொருள் பாடல், டி-ஷர்ட் ஆகியவற்றை வெளியிட்டு ஆற்றிய உரை.

நாள்தோறும் இந்தத் துறையின் சார்பில் ஏதாவது ஒரு பணி நடைபெற்றுக் கொண்டே இருக்கிறது. இது விளையாட்டுத் துறைதானே என்று நினைக்காமல், இந்தத் துறையின் கேப்டனாக இருந்து - அனைத்து வகை விளையாட்டு வீரர்களையும் சாம்பியன்களாக ஆக்கிக்கொண்டு இருக்கிறார் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் உதயநிதி அவர்கள். அவருக்கும் அவரது துறையைச் சார்ந்த உயரதிகாரிகளுக்கும் அலுவலர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை, பாராட்டுதல்களை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாடு அரசு 44ஆவது உலக செஸ் ஒலிம்பியாட் போட்டிகளை அனைவரும் மெச்சத்தக்க வகையில் மிகக் குறுகிய காலத்தில் வெகு சிறப்பாக நடத்தி முடித்துக் காட்டியது. அதன் தொடர்ச்சியாகத் தமிழ்நாட்டை, விளையாட்டில் ஒரு முன்னோடி மாநிலமாக ஆக்குவதற்குத் தமிழ்நாடு அரசு பல்வேறு சிறப்பான திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது.

பன்னாட்டு மற்றும் தேசிய அளவில் பதக்கங்கள் வென்று நாட்டிற்கும், மாநிலத்திற்கும் பெருமை தேடித் தரும் தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்கு உயரிய ஊக்கத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. கராத்தே, ஸ்குவாஷ், துப்பாக்கி சுடுதல், டோக்கியோ ஒலிம்பிக், பாரா ஒலிம்பிக், வாள் சண்டைப் போட்டிகளில் பதக்கங்கள் வென்றவர்களுக்கும் சிறப்பு நிதியுதவி செய்யப்பட்டுள்ளது.

2021ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் 2023ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை, பல்வேறு தேசிய சர்வதேசப் போட்டிகளில் வெற்றி பெற்ற விளையாட்டு வீரர்களுக்கான உயரிய ஊக்கத் தொகையாக 1,594 பேருக்கு ரூ.43.19 கோடி வழங்கப்பட்டுள்ளது. அனைத்து விளையாட்டுக்களையும் ஊக்கப்படுத்தும் அரசாக தமிழ்நாடு அரசு செயல்பட்டு வருகிறது.

விளையாட்டு என்பது தனிமனிதனின் திறமையாக மட்டும் இருப்பது இல்லை, சமூகத்தின் கூட்டுப் பலத்தைப் பயன்படுத்துவதற்கும், தனிமனித சிறப்பை வளர்த்தெடுப்பதற்கும் ஓர் சிறந்த களம். அதனால்தான் அரசு அதற்கு அதிகப்படியான முக்கியத்துவம் தந்து கொண்டிருக்கிறது. எனவேதான் விளையாட்டு வீரர்களுக்குத் திறன் மேம்பாடு, கல்வி, சுகாதாரம், உடல்தகுதி, தலைமைத் தகுதி, பொருளாதார மேம்பாடு ஆகியவற்றை உருவாக்கித் தருவதைக் கடமையாகக் கருதுகிறோம்.

பள்ளிகள் மற்றும் பொதுச் சமூகம் மூலம் விளையாட்டுத் துறையில் பல்வேறு திட்டங்களில் முதலீடு செய்து அரசு அவர்களுக்கு உதவி வருகிறது. இதில் முதன்மையானதாக முதலமைச்சர் விளையாட்டுக் கோப்பைப் போட்டிகளைச் சொல்லலாம்.

'முதலமைச்சர் கோப்பை' என்ற பெயரில் பள்ளி, கல்லூரி மாணவர்கள், பொதுப் பிரிவினர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் அரசு ஊழியர்களுக்கு மாவட்டம், மாநில அளவில் சிலம்பம், கபடி, கால்பந்து, கூடைப்பந்து உள்ளிட்ட 15 வகையான போட்டிகள் நடத்தப்படுகின்றன. தமிழ்நாட்டை விளையாட்டுப் போட்டிகளில் உலக அரங்கில் தலைநிமிர்ந்து நிற்கச் செய்யும் நோக்கத்தோடு இந்த ஆண்டு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை மானியக் கோரிக்கையில் பல மகத்தான அறிவிப்புகள் செய்யப்பட்டுள்ளன. அவற்றை நீங்களும் அறிவீர்கள்.

*சென்னையில் Squash விளையாட்டுக்கான உலகக்கோப்பைப் போட்டிகள், ஆசிய ஹாக்கி ஆடவர் சாம்பியன்ஷிப், ATP சென்னை ஓபன் டூர் போன்ற உலகப் போட்டிகளை நடத்துதல் ஆகிய இலக்குகளை உருவாக்கிக் கொண்டு செயல்பட்டு வருகிறார் நம்முடைய அமைச்சர் உதயநிதி அவர்கள்.

இந்த வரிசையில் மாநிலத்தில் விளையாட்டு மேம்பாட்டிற்காகப் பொதுமக்கள் மற்றும் கார்ப்பரேட் நிறுவனங்களுடன் இணைந்து 'Tamil Nadu Champions Foundation' என்ற அறக்கட்டளையை உருவாக்குவதும் ஒரு முக்கிய அறிவிப்பு.

தமிழ்நாட்டில் விளையாட்டுக்களுக்குப் புத்துயிர் அளிக்கும் நோக்கத்தில் மக்களுடனும் பெருநிறுவனங்களுடனும் இணைந்து செயல்படுவதற்கான ஒரு முன்னெடுப்பாக இது அமைந்துள்ளது.

நிறுவனங்களும் இதர அமைப்புகளும் அளிக்கும் கூட்டாண்மைச் சமூகப்பொறுப்பு (CSR) நிதிகளை ஒன்றுதிரட்டி இதனைச் செய்யலாம். இதன் மூலமாக நம் மாநிலத்தின் விளையாட்டு உள்கட்டமைப்பு வசதிகளைச் மேம்படுத்தலாம். விளையாட்டு வீரர்களின் தேவைகளை நிறைவு செய்யலாம்.

கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளில் இது போல தனியார் பங்களிப்புச் செயல் திட்டங்கள் நடைமுறையில் இருக்கின்றன. அதைப் போலவே விளையாட்டுத் துறையிலும் செயல்படுத்த தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளைப் பயன்படும். இங்கே அமைச்சர் உதயநிதி அவர்கள் குறிப்பிட்டதைப்போல, 'நம்ம ஸ்கூல் ஃபவுண்டேசன்' தொடங்கியபோது, முதலமைச்சர் என்கிற முறையில் மட்டுமல்லாமல் தனிப்பட்ட முறையில் நான் ரூ.5 இலட்சம் நன்கொடை வழங்கியதாக அவர் குறிப்பிட்டுச் சொன்னார். இங்கேயும் எதிர்பார்ப்பதாகச் சொன்னார். உங்கள் எதிர்பார்ப்பு வீண் போகாது. இந்த அமைப்பிற்கும் என்னுடைய தனிப்பட்ட முறையில் ரூ.5 இலட்சத்தை நான் வழங்குகிறேன் என்பதைத் தெரிவித்து, இந்த அறக்கட்டளை நிதிகளை முறையாகப் பயன்படுத்த வேண்டும். குறிப்பிட்ட விளையாட்டுக்களுக்கு, குறிப்பிட்ட சிலருக்குப் பயன்படுவதாக அமைந்துவிடக் கூடாது.

இந்த அறக்கட்டளை மூலமாக,

- அனைத்து விளையாட்டுக்களும்,
- அனைத்து விளையாட்டு வீரர்களும்,
- அனைத்து மாவட்டங்களைச் சேர்ந்தவர்களும் சம அளவில் பயன்பெற வேண்டும்.

மிக நல்ல நோக்கத்துக்காகத் தொடங்கப்பட்டுள்ள இந்த அறக்கட்டளை, அந்த நோக்கத்தை மிகச் சரியாக நிறைவேற்றிக் காட்ட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தத் துறை மேலும் சிறக்கவும், ஏராளமான விளையாட்டு வீரர்களை உருவாக்கவும், அகில இந்திய அளவில் மட்டுமல்லாமல், உலகளவில் நமது வீரர்கள் பரிசுகளைத் தொடர்ந்து குவிக்கவும் வாழ்த்தி விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

திருச்சிராப்பள்ளி மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில்

ரூ.30.43 கோடி மதிப்பீட்டில் திருக்கோயிலில் பக்தர்கள் வரிசை வளாகம் மற்றும் திருமண மண்டபம்

மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்**
அவர்கள்
திறந்து வைத்தார் - 10.05.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 10.05.2023 அன்று, தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில், ரூ.30.43 கோடி மதிப்பீட்டில் சென்னை, நுங்கம்பாக்கம், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் அலுவலகத்தில் கட்டப்பட்டுள்ள கூடுதல் கட்டடம், திருச்சிராப்பள்ளி மாவட்டம், சமயபுரம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் பக்தர்கள் வரிசை வளாகம், விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணெய்நல்லூர், அருள்மிகு கிருபாபுரீஸ்வரர் திருக்கோயிலில் திருமண மண்டபம் ஆகியவற்றைக் காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார்.

இந்து சமய அறநிலையத்துறை தனது நிருவாகக் கட்டுப்பாட்டிலுள்ள 674 திருக்கோயில்களுக்குக் குடமுழுக்கு, தொன்மை வாய்ந்த திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளுதல், பிரசித்தி பெற்ற திருக்கோயில்களைப் பெருந்திட்டத்தின் மூலம் மேம்படுத்துதல், திருத்தேர்களை பழுதுபார்த்து வீதிஉலா, திருக்குளங்களைப் புனரமைத்தல், பக்தர்களுக்குத் தேவையான வசதிகளை மேம்படுத்துதல், திருக்கோயிலுக்குச் சொந்தமான ரூ.4,300 கோடி மதிப்பிலான சொத்துக்கள் மீட்பு எனப் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி, சட்டமன்றத்தில்

அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளையும் தொடர்ந்து சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், 2021-2022ஆம் ஆண்டிற்கான இந்து சமய அறநிலையத் துறை மானியக் கோரிக்கையில், "ஆணையர் அலுவலக வளாகத்தில் நவீன வசதிகளுடன் கூடிய கூடுதல் கட்டடம் ரூ.15 கோடிச் செலவில் கட்டப்படும்" என அறிவிக்கப்பட்டது. அதனைச் செயல்படுத்திடும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 25.04.2022 அன்று ஆணையர் அலுவலக வளாகத்தில் ரூ.15 கோடிச் மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் கூடிய கூடுதல் கட்டடத்திற்கான கட்டுமானப் பணிகளைத் தொடங்கி வைத்தார்.

இந்து சமய அறநிலையத் துறையின் வரலாற்றிலேயே இல்லாத அளவில் முதன்முறையாக ஒப்பந்தக் காலத்திற்கு 6 மாதங்களுக்கு முன்னதாகவே ரூ.15 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் அலுவலகக் கூடுதல் கட்டடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார். இந்த ஆணையர் அலுவலகக் கூடுதல் கட்டடமானது, மூன்று தளங்களுடன், 33,202 சதுரடி பரப்பளவில், மாவட்ட வருவாய் அலுவலர் நிலையிலான தனி அலுவலர்களின் அறைகள், தலைமைப் பொறியாளரின் அறை, இணை ஆணையர்களின் அறைகள், உதவி ஆணையர்களின் அறைகள், திருப்பணிப் பிரிவு, பொறியியல் பிரிவு, உணவகம், வாகனங்கள் நிறுத்துமிடம், மின்தூக்கி போன்ற வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளன.

மேலும், திருச்சிராப்பள்ளி மாவட்டம், சமயபுரம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் ரூ.13.80 கோடிச் செலவில், திருக்கோயில் வரிசை வளாகத்தில் 4 நுழைவு மண்டபங்கள், 4 அவரசகால வழிகள், காத்திருப்புக் கூடம், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, கழிப்பறைகள், திருக்கோயில் பயன்பாட்டிற்கான கடைகள், மருத்துவ மையம், கட்டணச் சீட்டு விற்பனை மையம், பிரசாத விற்பனை நிலையம், பக்தர்கள் அமர்ந்து செல்லும் வகையில் கிரானைட் கற்களால் ஆன இருக்கைகள், எஸ்.எஸ். தடுப்புகள், கண்கவர் விளக்குகள், மின் விசிறிகள் உள்ளிட்ட வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள பக்தர்கள் வரிசை வளாகம்; விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணெய்நல்லூர், அருள்மிகு கிருபாபுரீஸ்வரர் திருக்கோயிலில் ரூ.1.63 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள திருமண மண்டபம் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை புதிய அமைச்சர் பதவியேற்பு

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. **ஆர்.என்.ரவி** அவர்கள்,
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் முன்னிலையில்,
11.05.2023 அன்று, ஆளுநர் மாளிகையில், முனைவர் டி.ஆர்.பி.ராஜா அவர்களுக்குத்
தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சராகப்
பதவிப் பிரமாணமும், ரகசிய காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார்.

✷ **ஆதிதிராவிடர் துணைத் திட்டத்திற்காக ரூ.17,075 கோடி ஒதுக்கீடு**

✷ **பழங்குடியினர் துணைத் திட்டத்திற்காக ரூ.1,595 கோடி ஒதுக்கீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், 11.04.2023 அன்று, தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மாநில அளவிலான உயர்நிலை விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டத்தில் ஆற்றிய உரை

உங்கள் அனைவருக்கும் என்னுடைய மாலை வணக்கத்தை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

'எல்லார்க்கும் எல்லாம்' - என்ற உன்னதமான நோக்கம் கொண்ட திராவிட மாடல் அரசாக நமது அரசு செயல்பட்டு வருகிறது. அனைத்து வளர்ச்சியும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியாக அமைய வேண்டும் என்பதே இந்த அரசினுடைய நோக்கம், லட்சியம், பாதை!

இதில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயர தனி அக்கறை செலுத்தித் திட்டங்கள் தீட்டி வருகிறோம். இதில் சிலவற்றை மட்டும் இங்கு அனைவருக்கும் நான் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏப்ரல் 14ஆம் தேதி 'சமத்துவ நாளாக' கொண்டாடப்பட்டு வருகிறது.

வன்கொடுமைகளால் பாதிக்கப்படுபவருக்கு வழங்கப்படும் தீருதவித் தொகை (Solatium) குறைந்தபட்சம் ரூ.85,000லிருந்து ரூ.1 இலட்சமாகவும், அதிகபட்சம் ரூ.8.25 இலட்சத்திலிருந்து ரூ.12 இலட்சமாகவும் உயர்த்தப்பட்டது. கடந்த நிதியாண்டில், 3,870 நபர்களுக்கு ரூ.47 கோடி தீருதவித் தொகை (Solatium) வழங்கப்பட்டுள்ளது.

✷ வன்கொடுமையினால் பாதிக்கப்பட்டோரின் குடும்பத்தைச் சார்ந்த 723 நபர்களுக்குக் கருணை அடிப்படையில் பணி நியமனம், கல்வி உதவித்தொகை, வீட்டுமனைப் பட்டா ஆகிய உதவிகளும் வழங்கப்பட்டுள்ளன.

✷ வன்முறையால் பாதிக்கப்பட்டோரைச் சமூகக் கண்ணோட்டத்துடன் அணுகி, அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்திட காவல்துறை மற்றும் வருவாய்த் துறை அலுவலர்களுக்கு விழிப்புணர்வுப் பயிற்சிகளை வழங்கிட அரசாணை வெளியிடப்பட்டு, இப்பயிற்சிகள் அண்ணா பணியாளர் நிருவாகக் கல்லூரியின் மூலம் வழங்கப்பட உள்ளன.

✷ ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிராக நடைபெறும் குற்றங்கள் மற்றும் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய தீருதவிகள் மற்றும் மறுவாழ்வு தொடர்பான வழக்குகளை விரைந்து முடிக்க, ஏற்கெனவே 22 நீதிமன்றங்கள்

உள்ளன. சேலம், கிருஷ்ணகிரி, மதுரை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் கூடுதலாக நான்கு புதிய தனியுறு சிறப்பு நீதிமன்றங்கள் தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, முதற்கட்டமாக, சேலத்தில் ஒரு புதிய தனியுறு சிறப்பு நீதிமன்றம் துவங்கப்பட்டுள்ளது.

- சாதி வேறுபாடுகளற்ற மயானங்களைப் பயன்பாட்டில் கொண்டிருக்கும் முன்மாதிரி சிற்றூர்களில் (Model Village), வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள ஊக்கத் தொகையாகத் தலா ரூ.10 இலட்சம் பரிசு வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த நிதியாண்டில் 70 சிற்றூர்கள் இந்தத் திட்டத்தின்கீழ்ப் பயன்பெற்றுள்ளன.

- தீண்டாமைக் கடைபிடிக்கப்படாமல் பொதுமக்கள் அனைவரும் நல்லிணக்கத்துடன் வாழும் கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்த கிராமங்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திடும் பொருட்டு, ரூ.10 இலட்சம் நிதி வழங்கப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின்கீழ்க் கடந்த நிதியாண்டில் 37 கிராமங்கள் பயனடைந்துள்ளன.

- பொதுமக்களிடையே தீண்டாமைக்கு எதிராக விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக, ஆண்டுதோறும் ஜனவரி மாதம் 24ஆம் தேதி முதல் 30ஆம் தேதி வரை “மனிதநேய வார விழா” நடத்தப்படுகிறது.

- ஆதிதிராவிட மக்கள் கல்விசார்ந்த திட்டங்களுக்காக ரூ.2,206.70 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளின் பராமரிப்பு மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டிற்காக ரூ.120 கோடிச் சென்ற ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- கடந்த நிதியாண்டில் ஆதிதிராவிட நலத் துறையால் நடத்தப்படும் 366 விடுதிகளைப் பழுது பார்க்க ரூ.25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- இந்த அரசு பொறுப்பேற்றபின் திருத்தி அமைக்கப்பட்ட முனைவர் பட்டப் படிப்பிற்கான உதவித்தொகைத் திட்டத்தின்கீழ் இதுவரை 2,954 மாணவர்களுக்குத் தலா ரூ.1 இலட்சம் வீதம் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

- வெளிநாடுகளில் சென்று உயர்கல்வி பயில மாணவர்களுக்கான வருமான உச்சவரம்பு ரூ.8 இலட்சமாக உயர்த்தப்பட்டு, திருத்தி அமைக்கப்பட்ட இந்தத் திட்டத்தின்கீழ் 18 மாணவர்களுக்கு ரூ.3.66 கோடிக் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

- தாட்கோ மூலம் செயல்படுத்தப்படும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களின்கீழ்ப் பயனடைவதற்கான வருமான உச்சவரம்பு ரூ.3 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

- கடந்த நிதியாண்டில், தாட்கோவால் செயல்படுத்தப்படும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களின் மூலம், 20,544 நபர்கள் மற்றும் 296 சுயஉதவிக் குழுக்கள் பயனடைந்துள்ளனர். இந்த நிதியாண்டில் 68,225 நபர்கள் பயனடையும் வகையில் ரூ.285.02 கோடி மதிப்பிலான செயல்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

- அரியலூர் மாவட்டத்தில் உள்ள 16 கிராமங்களில் வாழும் இருளர் மக்களுக்கு 967 ஏக்கர் நிலப்பரப்பில் முந்திரி சேகரம் செய்வதற்குச் சிறப்பினமாக ரூ.86.13 இலட்சம் வழங்கப்பட்டு 500 குடும்பங்களைச் சேர்ந்த, கூலித் தொழிலாளிகளாக இருந்த இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் தற்போது தொழில்முனைவோராக தரம் உயர்த்தப்பட்டு உள்ளனர்.

- ஈரோடு மற்றும் நீலகிரி மாவட்டங்களிலுள்ள பழங்குடியின மக்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்திடும் வகையில் உன்னிக்குச்சி மூலம் ரூ.1.36 கோடிச் செலவில் தளவாடப் பொருட்கள் உற்பத்திக்கான தொழிற்கூடம் அமைக்கப்பட்டுள்ளது.

- இந்த நிதி ஆண்டு ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினர்த் தொழில் முனைவோரின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம் என்னும் புதிய திட்டம் ரூ.100 கோடிச் செலவில் செயல்படுத்தப்படும்.

- நகர்ப்புரப் பகுதிகளிலும், ஊரகப் பகுதிகளிலும் ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை உறுதிசெய்து, முழுமையான சமூகப் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த “அயோத்திதாசப் பண்டிதர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டம்” நடைமுறைப்படுத்தப்படும். இந்தத் திட்டம்

வரும் ஐந்தாண்டுகளில் ரூ.1,000 கோடிச் செலவில் செயல்படுத்தப்படவுள்ளது.

* பழங்குடியினக் கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள், தெரு விளக்குகள், சோலார் விளக்குகள் மற்றும் குடிநீர் வசதிகள் வழங்கும் சிறப்புத் திட்டத்தின்கீழ், கடந்த ஆண்டு ரூ.135 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுப் பணிகள் நிறைவேற்றப்படுகின்றன. வீடற்ற இருளர் உள்ளிட்ட பழங்குடியினருக்கு 4,324 வீடுகள் ரூ.420 கோடிச் செலவில் கட்டப்பட்டு வருகின்றன.

* பழங்குடியினரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையில், விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (CTDP), இந்த ஆண்டு ரூ.94.99 கோடிச் செலவில் உட்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

* பழங்குடியினர் மற்றும் பிற மரபு வழியாக வனங்களில் குடியிருப்போர் (வன உரிமைகள் அங்கீகரித்தல்) சட்டம், 2006-இன் கீழ் இதுவரை 10,410 தனிநபர் உரிமைகளும், 528 சமூக உரிமைகளும் உறுதி செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.

* மாநில அளவில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் சட்டப்பூர்வ உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும், அவர்களின் முக்கியப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகவும், "தமிழ்நாடு மாநிலப் பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடியினருக்கான ஆணையம்" உருவாக்கப்பட்டு இயங்கி வருகிறது.

* பழங்குடியினருக்கு வழங்கப்பட்ட சாதிச் சான்றிதழ்களின் மெய்த்தன்மையினைக் கூர்ந்தாய்வு செய்து இறுதி ஆணை பிறப்பிக்க ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் செயலாளர் / கூடுதல் செயலாளர்கள் தலைமையில் மாநில அளவில் மூன்று கூர்நோக்குக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

* புதிரை வண்ணார் நல வாரியத்திற்கு புத்துயிர் அளித்து, வாழ்வாதார மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்த நிதியாண்டில் ரூ.10 கோடிக் கூடுதல் நிதி ஒப்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

சிறப்புக் கூறுகள் திட்டம் என அழைக்கப்பட்டு வந்த, ஆதிதிராவிடர் துணைத் திட்டத்தின்கீழ் இந்த நிதியாண்டில் மாநிலத் திட்ட ஒதுக்கீடான ரூ.77,930 கோடியில், ஆதிதிராவிடர் துணைத் திட்டத்திற்காக ரூ.17,075 கோடியும், பழங்குடியினர் துணைத் திட்டத்திற்காக ரூ.1,595 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான துணைத் திட்டம் செவ்வனே செயல்படுத்துவதை உறுதிசெய்ய தனிச் சட்டம் ஒன்றை இயற்ற வேண்டும் என்பது நீண்ட நாள் கோரிக்கையாக இருந்து வருகிறது. உரிய ஆலோசனைக்குப் பின்னர், அடுத்த சட்டமன்ற கூட்டத் தொடரில் இதற்கான சட்டமுன்வடிவை அறிமுகப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

* கல்வி புகட்டுதல்
* வேலைவாய்ப்பை உருவாக்குதல்
* அதிகாரம் பொருந்திய பொறுப்புகளில் அமர வைத்தல்
* இட ஒதுக்கீடுகள்
* பொருளாதார உதவிகள்
* மனைகள் தருதல், வீடுகள் வழங்குதல்

இவை அனைத்தும் கண்ணும் கருத்துமாக கவனித்து வழங்கப்பட்டு வருகிறது. இத்தோடு அரசின் கடமை முடிந்துவிட்டதாக நான் கருதவில்லை. சுயமரியாதைச் சமதர்மச் சமூகத்தை உருவாக்குவதற்கு இன்னும் நெடுந்தூரம் பயணிக்க வேண்டும்.

நிதி ஒதுக்கீடுகளால், தொலைநோக்குப் பார்வையால், கண்காணிப்பால் மற்ற வளர்ச்சிகளை நாம் எட்டிவிடலாம். ஆனால் சமூக வளர்ச்சியும், சிந்தனை வளர்ச்சியும் அப்படிப்பட்டது அல்ல. அது மக்கள் மனங்களில் உருவாக வேண்டும். மக்கள் மனதில் மனமாற்றங்கள் ஏற்பட வேண்டும். இது மிகச் சீக்கிரமாக ஏற்பட்டுவிடாது என்பது உண்மைதான்.

பல்லாயிரமாண்டு அழுக்கைச் சில பத்தாண்டுகளில் சரிசெய்திட முடியாது என்பது உண்மைதான்.

அதே நேரத்தில் சமூக வளர்ச்சி - சிந்தனை வளர்ச்சியை உருவாக்கும் நமது விழிப்புணர்வு பயணம் என்பது தொய்வில்லாமல் தொடர வேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டு, இந்த அளவில் என்னுடைய தலைமையுரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்!

கடலூர் மாவட்டத்தில்
பெரியவர் இளையபெருமாள் அவர்களுக்கு நினைவரங்கம்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், விதி 110இன்கீழ்த்
தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் அறிவிப்பு - 18.04.2023

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

ஒடுக்கப்பட்ட சமூக மக்களின் ஒளிவிளக்காக மட்டுமல்ல; நெறிசார்ந்த அரசியலின் அடையாளமாகவும் விளங்கிய அய்யா இளையபெருமாள் அவர்களின் நூற்றாண்டைப் போற்றும் வகையில் விதி 110இன்கீழ் அறிவிப்பு ஒன்றை இம்மாமன்றத்தில் அறிவிப்பதை என்னுடைய கடமையாக நான் கருதுகிறேன்.

சமூகச் சீர்திருத்தத்தின் பெருமைமிகு தலைவர்களான அயோத்திதாசப் பண்டிதர், இரட்டைமலை சீனிவாசன், எம்.சி.ராஜா, என்.சிவராஜ், எல்.சி.குருசாமி, சுவாமி சகஜானந்தர் ஆகியோர் வரிசையில் கம்பீரமாக நின்று போராடியவர்களில் ஒருவர்தான் பெரியவர் எல். இளையபெருமாள் அவர்கள். நந்தனை மறித்த சிதம்பரம் மண்ணில் பிறந்து, நாடு முழுவதும் பட்டியலின மக்களுக்காக அடைபட்டு இருந்த உரிமை வாசலைத் திறந்தவர் இளையபெருமாள் அவர்கள். பள்ளியில் படிக்கும் போது இரட்டைப் பானை முறையைப் பார்க்கிறார். பள்ளிக்குள் மறைந்திருந்து இரவு நேரத்தில் பானைகளை உடைக்கிறார் இளையபெருமாள் அவர்கள். இப்படி அவர் தொடர்ச்சியாக உடைத்ததால்தான், இரட்டைப் பானை முறை அந்தக் காலத்தில் அந்த வட்டாரத்தில் நீக்கப்பட்டது. இராணுவத்தில் சேர்கிறார், அங்கும் பாகுபாடு காட்டப்பட்டது. உடனடியாக, துணிச்சலோடு உயர் அதிகாரிக்குப் புகார் செய்கிறார்; அந்தப் பாகுபாடு களையப்படுகிறது. ஓராண்டுக் காலத்திலேயே இராணுவத்தில் இருந்து விலகி மக்கள் பணியாற்ற வந்துவிடுகிறார்.

ஒன்றுபட்ட தென்னார்க்காடு மாவட்டம் - தஞ்சை மாவட்டத்தில் 1940 முதல் 1970 வரையில் நடந்த மிகப்பெரிய சமூகப் போராட்டங்களை நடத்தியவர் பெரியவர் இளையபெருமாள் அவர்கள். பட்டியலின மக்கள் மத்தியில் எழுச்சி ஏற்பட இவரது போராட்டங்கள்தான் காரணம். காங்கிரஸ் கட்சியில் தன்னை இணைத்துக் கொண்ட இளையபெருமாள் அவர்களுக்கு, சுதந்திர இந்தியாவில் நடந்த முதல் பொதுத் தேர்தலில், 1952ஆம் ஆண்டு, கடலூர் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட வாய்ப்புக் கிடைக்கிறது; வெற்றியும் பெற்றார். அப்போது அவருக்கு வயது 27. டெல்லி சென்ற இளையபெருமாள் அவர்கள், அண்ணல் அம்பேத்கர் அவர்களைச் சந்திக்கிறார். 'இவ்வளவு இளம் வயதில் நாடாளுமன்ற உறுப்பினராக ஆகி வந்திருக்கிறீர்களே? அந்த மக்களுக்காக இதுவரை என்ன செய்திருக்கிறீர்கள்?' என்று கேட்டிருக்கிறார்.

தென்னார்க்காடு மாவட்டம், தஞ்சை மாவட்டங்களில்தான் நடத்திய மக்கள் போராட்டங்கள், தீண்டாமை எதிர்ப்பு

போராட்டங்களை இவர் பட்டியல் போட்டுச் சொன்னதைக் கேட்டு, அண்ணல் அவர்களே வியப்படைந்திருக்கிறார்கள், இளையபெருமாள் அவர்களைப் பாராட்டி இருக்கிறார்கள்.

1980 முதல் 1984 வரை சென்னை எழும்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகவும், மூன்று முறை நாடாளுமன்ற உறுப்பினராகவும், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராகவும், அகில இந்திய தீண்டாமை ஒழிப்புக் கமிட்டித் தலைவராகவும் இருந்தவர் பெரியவர் இளையபெருமாள் அவர்கள்.

அவரது பெரும் சிறப்புகளில் மிக முக்கியமானது; பட்டியலினப் பழங்குடி மக்களின் மேன்மைக்கான 1965ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அகில இந்திய ஆணையத்தின் தலைமைப் பொறுப்பை அவர் வகித்ததுதான். மூன்றாண்டு காலம் இந்தியா முழுமைக்கும் பயணம் செய்து, சாதிக் கட்டமைப்பையும், தீண்டாமைக் கொடுமையையும் ஆய்வு செய்தார்கள். அந்த அறிக்கையானது இந்தியச் சமூக அமைப்பின் சாதிய வேர்களை மறைக்காமல், துல்லியமாக வெளிப்படுத்தும் அறிக்கையாக அமைந்திருந்தது. எனவே, இந்த அறிக்கை வெளியே வருவதைத் தடுக்க சிலர் முயற்சித்தார்கள். அதனை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யும் அன்று அவரது அறையில் தாக்குதல் நடத்தினார்கள். அங்கிருந்து தப்பி வந்து அறிக்கையைத் தாக்கல் செய்தார் பெரியவர் இளையபெருமாள் அவர்கள். இப்படி நடக்கும் என்று தெரிந்து, திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப்பினர் இரா.செழியன் அவர்களிடம் அறிக்கையின் பிரதியைக் கொடுத்து வைத்திருந்தார் இளையபெருமாள் அவர்கள். அதனால்தான் அந்த அறிக்கையை அன்றைய தினம் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்ய முடிந்தது. பிற்காலத்தில் கொண்டு வரப்பட்ட வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்துக்கு அடித்தளமே பெரியவர் இளையபெருமாள் ஆணையத்தின் அறிக்கைதான்.

தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள், 1971ஆம் ஆண்டு அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதற்கு எதிராகச் சிலர் உச்சநீதிமன்றம் போனார்கள். அப்போது கழக அரசு தாக்கல் செய்த மனுவில், 'சமூகச் சீர்திருத்தத்துக்காக அமைக்கப்பட்ட இளையபெருமாள் கமிட்டி அறிக்கை அடிப்படையிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது' என்று குறிப்பிட்டோம். 'அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற சட்டம் செல்லும்' என்பதற்கு ஆதாரமாக இளையபெருமாள் ஆணைய அறிக்கையையே உச்சநீதிமன்றம் தனது தீர்ப்பில் சுட்டிக்காட்டியது.

தலைவர் கலைஞர் அவர்கள், பெரியவர் இளையபெருமாள் மீது மிகப்பெரிய மரியாதையை வைத்திருந்தார்கள். சிதம்பரத்தைச் சேர்ந்தவர் என்பதால் 'சம்மந்தி' என்றுதான் அழைப்பார்கள். எனது பெரியம்மா பத்மா அவர்களது ஊர் சிதம்பரம். 1980ஆம் ஆண்டு தேர்தலில் இந்திரா காந்தி அம்மையார், தலைவர் கலைஞர், பெரியவர் இளையபெருமாள் ஆகிய மூவரும் திறந்தவெளி காரில் ஊர்வலமாகச் சென்று வாக்குக் கேட்டதைத் தமிழ்நாடு அறியும். 1998ஆம் ஆண்டு அண்ணல் அம்பேத்கர் அவர்கள் பெயரிலான தமிழ்நாடு அரசின் விருதை முதன்முதலாகப் பெரியவர் இளையபெருமாள் அவர்களுக்குத்தான் முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள் வழங்கினார்கள்.

இந்திய மனித உரிமைக் கட்சியின் சார்பில் சமூகநீதி மாநாட்டை இளையபெருமாள் அவர்கள் சென்னையில் நடத்தியபோது அதனைத் தொடங்கி வைத்துச் சிறப்புரை ஆற்ற முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களைத்தான் அழைத்திருந்தார்கள். 'சலிப்பேறாத சமூகத் தொண்டர்' என்று இளையபெருமாள் அவர்களைப் பாராட்டி இருக்கிறார் தலைவர் கலைஞர் அவர்கள். இவர்கள் இருவருமே 1924ஆம் ஆண்டு பிறந்தவர்கள், அதே ஜூன் மாதம்தான் அவர்கள் பிறந்திருக்கிறார்கள். தலைவர் கலைஞர் அவர்கள் பிறந்தது ஜூன் 3. இளையபெருமாள் அவர்கள் பிறந்தது ஜூன் 26. இது மிகமிகப் பொருத்தமானது ஆகும்.

அத்தகைய சமூகப் போராளியைப் போற்றுவதைத் திராவிட மாடல் அரசு தனது கடமையாகக் கருதுகிறது. சமூக இழிவு களையப்பட வேண்டும்; சாதிய வன்முறை ஒடுக்கப்பட வேண்டும்; அனைத்துச் சமூகங்களின் ஒற்றுமை உருவாக்கப்பட வேண்டும்; ஒடுக்கப்பட்ட மக்களுக்குச் சட்டரீதியான அனைத்து வாய்ப்புகளும் வழங்கப்பட வேண்டும்; சமத்துவ, சுயமரியாதைச் சமூகம் உருவாக்கப்பட வேண்டும் என்ற உன்னத நோக்கத்துக்காக உழைத்த பெரியவர் இளையபெருமாள் அவர்களின் தொண்டைச் சிறப்பிக்கும் வகையில் கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் நூற்றாண்டு நினைவரங்கம் ஒன்று அமைக்கப்படும் என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

'தீண்டாமையை ஒழிக்க சாதி அமைப்பின் ஆணிவேரை வெட்டியாக வேண்டும். அதற்குச் சாதிய அமைப்பின் பிடிப்பை உடைத்தாக வேண்டும்' என்ற பெரியவர் இளையபெருமாள் வழியில் சுயமரியாதைச் சமதர்மச் சமூகத்தை அமைப்போம் என்று கூறி அமைகிறேன்.

கிறித்துவராக மதம் மாறிய ஆதிதிராவிடர்கள், அனைத்து வகையிலும் சமூகநீதியின் பயன்களைப் பெறும் வகையில் அரசினர் தனித் தீர்மானம்

அரசியலமைப்புச் சட்டத்தில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ள இந்திய அரசை வலியுறுத்திடும் அரசினர் தனித் தீர்மானத்தைத் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் முன்மொழிந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் ஆற்றிய உரை - 19.04.2023

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிறித்துவர்களாக மதம் மாறிய ஆதிதிராவிடர்களையும் பட்டியலில் சேர்த்து, அந்தப் பட்டியலின மக்களுக்கும் அரசியலமைப்புச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அனைத்து உரிமைகளையும் வழங்க வேண்டும் என்ற தீர்மானத்தை இந்த மாமன்றத்தில் கொண்டு வர விரும்புகிறேன்.

ஆதிதிராவிடர்களாக இருந்து மதம் மாறிய பின்னரும் தீண்டாமை உள்ளிட்ட சாதிய வன்கொடுமைகளுக்கு அவர்கள் ஆளாவது தொடரவே செய்கிறது. எனவே இதனைக் கனிவோடு நாம் கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். நமது நாட்டின் அரசியல் சட்டப்படி இந்து, சீக்கியர், பௌத்த மதத்தைத் தவிர்த்த பிற மதங்களைச் சேர்ந்த யாரும் பட்டியலின வகுப்பைச் சேர்ந்தவராகக் கருதப்பட முடியாது. வரலாற்று ரீதியாகவே அவர்கள் ஆதிதிராவிடர் வகுப்பினராக இருக்கும்போது, அவர்களுக்குப் பட்டியலின வகுப்புக்கான உரிமைகளை வழங்குவதே சரியானதாக இருக்கும். அதன் மூலமாகத்தான் அவர்களுக்குக் கல்வி, வேலைவாய்ப்பு ஆகியவை கிடைக்கும்.

அதன் மூலமாகச் சமூகத்தில் அவர்களுக்கான உயர்வும், மேம்பாடும் கிடைக்கும். மதம் மாறிவிட்டார்கள் என்பதற்காகச் சமூகரீதியாக அவர்களுக்குத் தரப்பட்டு வந்த, அதே சமூகத்தைச் சேர்ந்த மற்றவர்கள் அனுபவித்து வரும் உரிமைகளை இவர்களுக்குத் தர மறுப்பது சரியல்ல என்பதுதான் நமது நிலைப்பாடு.

மனிதர்கள் தாங்கள் விரும்பும் மதத்தைப் பின்பற்ற உரிமை உண்டு. ஆனால் சாதி என்பது மாறுதலுக்கு உட்பட்டது அல்ல. இத்தகைய சாதி என்பது நீ வேறு; நான் வேறு என்பதாக இல்லாமல், நான் உயர்ந்தவன்; நீ தாழ்ந்தவன் என்ற முறையில் இருக்கிறது. அதாவது படுக்கைக் கோடாக இல்லாமல், செங்குத்துக் கோடாக இருக்கிறது. மொத்தத்தில் அது சமூகக் கேடாக அமைந்துள்ளது. சாதிய ஏற்றத்தாழ்வை வைத்து எந்த வகையில்

அடக்கி ஒடுக்கினார்களோ, அதே சாதியை வைத்தே இடஒதுக்கீடு வழங்கி உயர்வடைய வைக்கும் தத்துவம்தான் சமூகநீதித் தத்துவம். இந்தச் சமூகநீதித் தத்துவத்தை அனைத்து வகையிலும் முறையாகப் பின்பற்ற வேண்டும் என்பதே திராவிட மாடல் அரசினுடைய நோக்கம்.

அந்த வகையில் கிறித்துவர்களாக மதம் மாறிய ஆதிதிராவிடர்களுக்கும், அரசியல் சட்ட சமூகநீதி உரிமைகள் தரப்பட வேண்டும் என்பதே சரியான நிலைப்பாடு. முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதெல்லாம், 1996, 2006, 2010, 2011 ஆகிய காலக்கட்டங்களில் இதே கோரிக்கையினை நிறைவேற்ற பிரதமருக்கு நேர்முகக் கடிதம் எழுதி, ஒன்றிய அரசைத் தொடர்ந்து வலியுறுத்தியிருக்கிறார். இதே பேரவையில், ஒன்றிய அரசிடம் இந்தக் கோரிக்கை வலியுறுத்தப்படும் என்று 06.01.2011 அன்று ஆளுநர் உரையில் தமிழ்நாடு அரசின் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் கடந்த சட்டமன்றத் தேர்தலில் வெளியிட்ட தேர்தல் அறிக்கையிலும் இதனை வலியுறுத்தி இருந்தோம்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில். பட்டியலின மக்களுக்கு இணையாக கிறித்துவ ஆதிதிராவிடர்களும் சலுகைகள் பெறும் வகையில் அரசாணைகள் வெளியிட்டு உரிய பயன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இடஒதுக்கீடு நீங்கலாக மற்ற உரிமைகள் தரப்பட்டு வருகின்றன. ஒன்றிய அரசால் பட்டியலின மக்களுக்கு வழங்கப்படும் அனைத்துக் கல்வி உதவித் தொகைத் திட்டங்களும் கிறித்துவ ஆதிதிராவிடர்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது. முழுநேர முனைவர் பட்ட ஆராய்ச்சி மாணவர்களுக்கு வழங்கப்படும் ஊக்கத்தொகை, வெளிநாடுகளில் சென்று உயர்கல்வி பயில்பவர்களுக்கான ஊக்கத்தொகை, உயர்கல்விச் சிறப்பு ஊக்கத்தொகை அனைத்தும் இவர்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்றன. இத்துடன் இடஒதுக்கீட்டையும் வழங்குவதே சரியானதாகவும் முறையானதாகவும் இருக்கும் என்று நினைக்கிறோம்.

அரசியலமைப்புத் (பட்டியலின சாதிகள்) திருத்த ஆணை 1950இன்படி, இந்து மதத்தில் இருந்து வேறுபட்ட மதத்தைக் கூறும் எவரும் அட்டவணைச் சாதிகளின் உறுப்பினராக ஆக முடியாது. ஆனால், 1956ஆம் ஆண்டு சீக்கிய மதத்தைப் பின்பற்றுபவர்களையும், 1990ஆம் ஆண்டு பௌத்த மதத்தைப் பின்பற்றுபவர்களையும், பட்டியல் சாதியினராகச் சேர்க்கும் வகையில் திருத்தம் செய்யப்பட்டது. இதே போன்ற திருத்தத்தைத்தான் கிறித்தவர்களாக மதம் மாறிய ஆதிதிராவிடர்களும் எதிர்பார்க்கிறார்கள். இந்தக் கோரிக்கையைப் பல்வேறு தரப்பினரும் அரசுக்கு வைத்திருக்கிறார்கள்.

ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் மதம் மாறும்போது, தானாக ஆதிதிராவிடர் வகுப்பில் இருந்து வெளியேறி விடுகிறார்கள் என்றும்; மதம் மாறிய பின்னும் அவர்களுக்கு ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர் என்று சாதிச் சான்றிதழ் இருந்தால் அது செல்லாது என்றும்; மதம் மாறியவர்களுக்கு ஆதிதிராவிடர் வகுப்புச் சான்றிதழ் வழங்கப்பட்டால் அது போலிச் சான்றிதழ் என்றும்; தேசிய ஆதிதிராவிடர் ஆணையத் துணைத் தலைவர் கடந்த ஆண்டு சொல்லி இருந்தார். அப்போது பல்வேறு தரப்பினரும் இதற்குக் கடுமையாக எதிர்ப்பைத் தெரிவித்தார்கள். இதைத் தொடர்ந்து உச்சநீதிமன்ற முன்னாள் நீதியரசர் கே.ஜி.பாலகிருஷ்ணன் தலைமையிலான ஆணையம் ஒன்றை ஒன்றிய அரசு அமைத்துள்ளது. இந்த ஆணையம் இந்தியா முழுமையும் சுற்றுப்பயணம் செய்து, அனைத்து மாநிலங்களின் கருத்தையும் பெற்ற பிறகே இறுதி அறிக்கையைத் தாக்கல் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இதனை வலியுறுத்தும் வகையில், பின்வரும் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

தீர்மானம்

"இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் பட்டியலின மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள சட்ட ரீதியான பாதுகாப்பு, உரிமைகள் மற்றும் இடஒதுக்கீடு உள்ளிட்ட சலுகைகளைக் கிறித்துவராக மதம் மாறிய ஆதிதிராவிடர்களுக்கும் விரிவுபடுத்தி, அவர்களும் அனைத்து வகையிலும் சமூகநீதியின் பயன்களைப் பெற, அரசியலமைப்புச் சட்டத்தில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளுமாறு இந்திய அரசை இப்பேரவை ஒருமனதாக வலியுறுத்துகிறது" என்ற இந்தத் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

சமூகநீதியானது சமநீதியாக வழங்கப்பட வேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்ட இந்தத் தீர்மானத்தை அனைவரும் ஒருமனதாக நிறைவேற்றித் தர வேண்டுமெனக் கேட்டு, அமைகிறேன்.

ஒடுக்கப்பட்ட மக்களுக்காகச் சிந்தித்த சமூகநீதிக் காவலர் திரு. வி.பி.சிங் அவர்களுக்கு திருவுருவச் சிலை

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110இன்கீழ்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் அறிவிப்பு - 20.04.2023

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் பிரதமர், சமூகநீதிக் காவலர், இந்தியா முழுமைக்கும் பிற்படுத்தப்பட்ட மக்களின் பிதாமகர், மறைந்த வி.பி.சிங் அவர்களுக்கு, இந்தத் திராவிட மாடல் அரசு மரியாதை செய்ய நினைக்கும் மகத்தான அறிவிப்பை இந்த மாமன்றத்தில் தங்கள் அனுமதியோடு 110 விதியின்கீழ் வெளியிட விரும்புகிறேன்.

உத்தரப்பிரதேச மாநிலம், அலகாபாத் மாவட்டத்தில், மிகப்பெரிய ஜமீன்தாரரான ராஜா தயா பகவதி பிரதாப் சிங் அவர்களுக்கு மகனாகப் பிறந்தவர்தான் விஸ்வநாத் பிரதாப் சிங் அவர்கள். ஆடம்பர வாழ்க்கை வாய்த்தாலும், அதில் மனம் ஒட்டாமல் கல்லூரி படிக்கும் காலத்திலேயே காந்திய இயக்கத்தில் ஈடுபட்டார்; சர்வோதய சமாஜில் இணைந்தார்; பூமிதான இயக்கத்தில் பங்கெடுத்தார்; தனது நிலங்களையே தானமாக வழங்கினார்.

1969ஆம் ஆண்டு உத்தரப்பிரதேச சட்டமன்றத் தேர்தலில் நின்று வென்றார். உத்தரப்பிரதேச மாநிலத்தின் முதலமைச்சர்; ஒன்றிய வர்த்தக அமைச்சர்; வெளியுறவுத் துறை அமைச்சர்; நிதி அமைச்சர், பாதுகாப்புத் துறை அமைச்சர் ஆகிய உயர் பொறுப்புகளை வகித்தார். தேசிய முன்னணியை உருவாக்கி 1989ஆம் ஆண்டு இந்தியாவின் பிரதமராகவே ஆனார். மாண்புமிகு வி.பி.சிங் அவர்கள் பிரதமராக இருந்தது பதினோரு மாதங்கள்தான் என்றாலும், அவர் செய்த சாதனைகள் மகத்தானவை. அதனால்தான் அவரை இந்த மன்றத்தில் இப்போதும் போற்றிக் கொண்டு இருக்கிறோம்.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டபோது பட்டியலின, பழங்குடியினருக்கு ஒன்றிய அரசுப் பணியிடங்களில் தனி இடஒதுக்கீடு தரப்பட்டது. ஆனால், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, அவர்களது மக்கள் தொகைக்கு ஏற்ப இடஒதுக்கீடு தரப்படவில்லை. இதனை வழங்குவதற்காக அமைக்கப்பட்ட இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்தான் B.P. மண்டல் தலைமையிலான ஆணையம். சமூகரீதியாகவும், கல்வியிலும் பின்தங்கிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் என்று அழைக்கப்படும் சமூகத்துக்கு, B.P. மண்டல் பரிந்துரையின் ஒன்றிய அரசுப் பணியிடங்களில்

27 விழுக்காடு இடஒதுக்கீட்டை வழங்கலாம் என்ற உத்தரவை அமல்படுத்திய சமூகநீதிக் காவலர்தான் வி.பி.சிங் அவர்கள்.

அவர் பிறப்பால் பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர் அல்ல; ஏழை, எளிய குடும்பத்தைச் சேர்ந்தவரும் அல்ல; ஆனாலும் செய்து காட்டியவர் வி.பி.சிங் அவர்கள். மண்டல் ஆணையத்தின் பரிந்துரையை அமல்படுத்தப் போகிறேன் என்று ஒன்றிய அமைச்சரவைக் கூட்டத்தில் பிரதமர் வி.பி.சிங் அறிவித்தபோது, 'முற்பட்ட சாதியைச் சேர்ந்த ஒருவரால் இதனைச் செய்ய முடியாது' என்று அமைச்சர் ஒருவரே சொன்னபோது, 'இதோ, இப்போதே தேதியைச் சொல்கிறேன்' என்ற கம்பீரத்துக்குச் சொந்தக்காரர் வி.பி.சிங் அவர்கள். அதுதான் அவரது பதவிக்கே நெருக்கடியாக அமைந்தது.

'சில நேரங்களில் வாழ்வதைக் காட்டிலும் மரணத்தைத் தேர்ந்தெடுப்பதே நல்லது' என்று சொல்லி பிரதமர் பதவியை விட்டு விலகியவர் சுயமரியாதைச் சுடரொளி வி.பி.சிங் அவர்கள். 'வி.பி.சிங்கை தூக்கில் கூடப் போட்டுக் கொள்ளுங்கள். ஆனால் ஒடுக்கப்பட்ட மக்களுக்கான நீதியைக் கொடுங்கள்' என்று கூறும் அளவிற்குச் சமூகரீதியாகவும், கல்விரீதியாகவும் பின்தங்கிய வகுப்பினரின் நலனில் அவர் அக்கறை கொண்டிருந்தார். பதவியிலிருந்த 11 மாத காலத்தில், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 27 விழுக்காடு இடஒதுக்கீடு; தகவல் அறியும் உரிமைச் சட்டத்திற்கான தொடக்கப்புள்ளி; தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்திற்கான தொடக்கப் புள்ளி; வேலை உரிமையை அரசியல் சாசன உரிமை ஆக்கியது; தேர்தல் சீர்திருத்தங்கள்; மாநிலங்களுக்கிடையிலான கவுன்சில்; தேசியப் பாதுகாப்புக் குழு; உழவர்கள் பிரச்சினையைத் தீர்க்க மூன்று குழுக்கள்; டெல்லி குடிசைப் பகுதி மக்களுக்கு வாழ்விடங்கள்; அதிகபட்ச சில்லறை விற்பனை விலை (MRP) அச்சிட வேண்டும்; நுகர்வோர் பாதுகாப்பு ஆகிய அனைத்தையும் செய்து காட்டிய மாபெரும் சாதனையாளர்தான் வி.பி. சிங் அவர்கள்.

தமிழ்நாட்டைத் தனது இரத்த சொந்தங்கள் வாழும் மாநிலமாக வி.பி.சிங் அவர்கள் நினைத்தார். தந்தைப் பெரியாரைத் தனது உயிரினும் மேலான தலைவராக வி.பி.சிங் அவர்கள் ஏற்றுக் கொண்டார். 'ஒரு மனிதனுக்குச் சாவைவிட மிகக் கொடுமையானது 'அவமானம்'. அந்த அவமானத்தைத் துடைக்கும் மருந்துதான் பெரியாரின் 'சுயமரியாதை' என்று சொன்னவர் வி.பி.சிங் அவர்கள். தலைவர் கலைஞர் அவர்களைச் சொந்த சகோதரனைப் போல மதித்தார். "எனக்கு நெருக்கடி ஏற்படும்போதெல்லாம் என் பக்கத்தில் இருந்து கலைஞர் அவர்கள் என்னை உற்சாகப்படுத்திக் கொண்டே இருந்தார். தனது ஆட்சியைப் பற்றிக் கூட பொருட்படுத்தாமல் ஒரு கொள்கைக்காக, இலட்சியத்துக்காக என்னோடு இருந்த மாபெரும் தலைவர் கலைஞர்" என்று பாராட்டியவர் வி.பி.சிங் அவர்கள்.

அதற்கேற்றாற்போல், 21.08.1990 அன்று முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் இந்தப் பேரவையில் உரையாற்றியபோது, "இந்திய வரலாற்றிலேயே, புதியதொரு சகாப்தமாக சமூகநீதி வழங்கிடும், இந்தப் புரட்சிகரமான முடிவை எடுத்துள்ள தேசிய முன்னணி அரசுக்கும், பிரதமர் திரு. வி.பி.சிங் அவர்களுக்கும், இந்தப் பேரவை தனது இதயமார்ந்த நன்றியையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறது" என வாழ்த்தி, இந்தச் சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றி, திரு. வி.பி. சிங் அவர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

1988ஆம் ஆண்டு தேசிய முன்னணித் தொடக்க விழா சென்னையில் நடைபெற்றபோது, மாபெரும் ஊர்வலத்தைத் தலைமை தாங்கி நான் நடத்தி வந்தேன். பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் வெள்ளுடை தரித்து அணிவகுத்த வீரக் காட்சியை மேடையில் இருந்தபடி பார்த்து வணங்கினார் வி.பி.சிங் அவர்கள். அவர் பிரதமர் ஆனபின்னர், டெல்லி சென்றோம்; சட்டமன்றக் குழுவோடு நானும் சென்றேன். அப்போது என்னை அவரிடத்தில் அறிமுகப்படுத்தினார்கள். "இவரை எனக்கு அறிமுகப்படுத்துகிறீர்களா?

இவரை எனக்குத் தெரியாதா? நீங்கள்தானே சென்னையில் இளைஞர் படையை அணிவகுத்து ஒரு மாபெரும் பேரணியை நடத்தினீர்கள்!" என்று சொன்னது, என்னைப் பாராட்டியது என் வாழ்நாளில் கிடைத்தற்கரிய மிகப் பெரிய வாய்ப்பாக நான் கருதுகிறேன்.

அத்தகைய சமூகநீதிக் காவலர் அளித்த ஊக்கத்தின், உற்சாகத்தின் காரணமாகத்தான் சமூகநீதிப் பார்வையில், சமூகநீதிப் பயணத்தில் கொஞ்சமும் சலனமும், சமரசமும் இல்லாமல் இந்த அரசு செயல்பட்டு வருகிறது. மருத்துவப் படிப்பில் அகில இந்தியத் தொகுப்பு இடங்களில் இதர பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான இடஒதுக்கீடு அளிக்க வேண்டும் என்பதற்காகச் சென்னை உயர்நீதிமன்றத்திலும், உச்சநீதிமன்றத்திலும் தி.மு.க. போராடியதை நான் அதிகம் விளக்கத் தேவையில்லை.

இட ஒதுக்கீடு கிடையாது என்று சொல்லி வந்த ஒன்றிய அரசை, 27 விழுக்காடு இட ஒதுக்கீட்டிற்கு ஒப்புக்கொள்ள வைத்தது, தி.மு.க. உள்ளிட்ட ஜனநாயக சக்திகள் நடத்திய போராட்டங்கள்தான். அதனை மனதில் வைத்துத்தான், அகில இந்திய அளவில் சமூகநீதிக்கான கூட்டமைப்பை உருவாக்கும் முயற்சியில் இறங்கி இருக்கிறோம். அதற்கான முதல் கூட்டமானது காணொலி மூலமாக நடந்திருக்கிறது. அகில இந்திய அளவில் பெரும்பாலான கட்சிகள் அதில் பங்கெடுத்தன. அகில இந்தியாவுக்கே தமிழ்நாடுதான் வழிகாட்ட வேண்டும் என்று அக்கட்சிகள் அழைப்பு விடுத்துள்ளன. தமிழ்நாட்டின் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு மட்டுமல்ல; இந்தியா முழுமைக்குமான அனைத்து மக்களுக்காகவும் குரல் கொடுத்து வருகிறோம். சி.ஆர்.பி.எப். தேர்வானது இந்தி, ஆங்கிலத்தில் மட்டும்தான் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. தமிழ் உள்ளிட்ட அனைத்து மொழிகளிலும் நடத்த வேண்டும் என்று ஒன்றிய உள்துறை அமைச்சருக்கு நான் கடிதம் அனுப்பி வைத்தேன். தி.மு.க. மாணவரணியும், இளைஞரணியும் மிகப்பெரிய ஆர்ப்பாட்ட அறிவிப்பைச் செய்தார்கள். தமிழ் உள்ளிட்ட 13 மொழிகளில் சி.ஆர்.பி.எப். உள்ளிட்ட அனைத்து மத்திய ஆயுதக் காவல் படைத் தேர்வுகளும் நடைபெறும் என்ற வெற்றிச் செய்தி நமக்குக் கிடைத்திருக்கிறது.

அனைத்து வகையிலும் சமூகநீதியை நிலைநாட்டும் அரசாக இந்த அரசு செயல்பட்டு வருகிறது. இத்தகைய கொள்கை உரத்தை வழங்கியவர்களில் ஒருவர் வி.பி.சிங் அவர்கள் என்பதை யாரும் மறந்துவிட முடியாது. தமிழ்நாட்டு மக்களின் உயிர்ப் பிரச்சினையான காவிரி நீருக்காக நடுவர் மன்ற ஆணையத்தை அமைத்துத் தந்தவர் வி.பி.சிங் அவர்கள். இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வுகாண தனது இல்லத்தில் அகில இந்தியத் தலைவர்கள், மாநில முதலமைச்சர்கள் கூட்டத்தைக் கூட்டி 'இப்போது கலைஞர் சொல்லப் போவதுதான் என் கருத்து' என்று சொன்னவர் வி.பி.சிங் அவர்கள்.

சென்னை கடற்கரையில் நடைபெற்ற ஒரு மாபெரும் பொதுக் கூட்டத்தில், தலைவர் கலைஞர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று, சென்னையில் அமைந்துள்ள உள்நாட்டு விமான நிலையத்திற்குப் பெருந்தலைவர் காமராஜர் பெயரையும், பன்னாட்டு விமான நிலையத்திற்குப் பேரறிஞர் அண்ணாவின் பெயரையும் சூட்டிய ஒப்பற்றத் தலைவரான வி.பி.சிங் அவர்களின் நினைவைப் போற்றும் வகையிலும், அவருக்குத் தமிழ்ச் சமுதாயத்தின் நன்றியைத் தெரிவிக்கும் வகையிலும் சென்னையில் அவரது முழு உருவ கம்பீரச் சிலை அமைக்கப்படும் என்பதை மிகுந்த பெருமிதத்தோடு, இந்த மாமன்றத்தில் அறிவிக்க விரும்புகிறேன்.

உயர் வர்க்கத்தில் பிறந்தாலும், ஒடுக்கப்பட்ட மக்களுக்காகச் சிந்தித்த, எத்தனை உயர் பதவி வகித்தாலும் கொள்கையை விட்டுத் தராத, டயாலிசிஸ் செய்யப்பட்ட உடல்நிலையிலும் ஏழை மக்களுக்காக வீதிக்கு வந்து போராட்டம் நடத்திக் கொண்டிருந்த வி.பி.சிங் அவர்களது புகழ் வாழ்க, வாழ்க, வாழ்க என்று கூறி அமைகிறேன்.



ஒன்பது மாவட்டங்களில் ரூ.95.03 கோடிச் செலவில் நவீன நெல் சேமிப்புத் தளங்கள்

மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
திறந்துவைத்தார் - 25.04.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 25.04.2023 அன்று தலைமைச் செயலகத்தில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின்கீழ்ச் செயல்படும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் ஒன்பது மாவட்டங்களில் ரூ.93.03 கோடிச் செலவில் மொத்தம் 1,16,800 மெட்ரிக் டன் கொள்ளளவில் மேற்கூரை அமைப்புடன் கூடிய 84 நவீன நெல் சேமிப்புத் தளங்களையும், திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் வட்டத்தில் 750 மெட்ரிக் டன் கொள்ளளவில் ரூ.2 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள வட்ட செயல்முறைக் கிடங்கினையும் திறந்து வைத்தார். மேலும், ரூ.39.37 கோடி மதிப்பீட்டில் 10 மாவட்டங்களில் கட்டப்படவுள்ள 63 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் கட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டினார்.

அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையிலும், பொது விநியோகத் திட்டத்திற்கான உணவுத் தானியங்களைச் சேமித்து வைத்திடும் நோக்குடன் கிடங்குகளின் கொள்ளளவினை உயர்த்தும் வகையிலும், உணவுப் பாதுகாப்பின் அங்கங்களான சேமிப்பு, விற்பனை ஆகியவற்றில் முக்கிய பங்காற்றி வரும்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாகச் சேமிப்புக் கிடங்குகளை அதிகரித்து உணவுத் தானியங்களை நவீன முறையில் சேமித்து வைத்திடவும், விவசாயிகளிடமிருந்து கிராம அளவில் நவீனக் கட்டமைப்புடன் கூடிய புதிய நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் கட்டுவதற்கும் அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

மேற்கூரை அமைப்புடன் கூடிய 84 நவீன நெல் சேமிப்புத் தளங்கள் மற்றும் வட்ட செயல்முறைக் கிடங்கு திறந்து வைத்தல்

தமிழ்நாட்டில் பொது விநியோகத் திட்டத்தினை வட்ட அளவில் செம்மையாகச் செயல்படுத்திடவும், விவசாயிகளின் கடின உழைப்பில் உற்பத்தியான நெல் மணிகளை அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு, அவற்றினை இயற்கைப் பேரிடர் மற்றும் மழைப் பொழிவுகளிலிருந்து பாதுகாப்பாகச் சேமித்து வைத்திட தமிழ்நாட்டின் பத்து மாவட்டங்களின் பதினெட்டு இடங்களில் மொத்தம் 2,86,350 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட மேற்கூரை அமைப்புடன் கூடிய நெல் சேமிப்புத் தளங்கள் மொத்தம் ரூ.238.07 கோடி மதிப்பீட்டில் நிறுவ ஆணையிடப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன்படி, முதற்கட்டமாக, தஞ்சாவூர், திருவாரூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, மதுரை, சிவகங்கை, தூத்துக்குடி, திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் ரூ.105.08 கோடி மதிப்பீட்டில் மொத்தம் 1,42,450 மெட்ரிக் டன் கொள்ளளவுடன் அமைக்கப்பட்டுள்ள 106 மேற்கூரை அமைப்புடன் கூடிய நவீன நெல் சேமிப்புத் தளங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 11.02.2023 அன்று பயன்பாட்டிற்குத் திறந்து வைக்கப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக, இரண்டாம் கட்டமாகத் தற்போது அரியலூர், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, திருவள்ளூர், சிவகங்கை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், திருவாரூர், மதுரை ஆகிய மாவட்டங்களில் ரூ.93.03 கோடிச் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 1,16,800 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 84 மேற்கூரை அமைப்புடன் கூடிய நவீன நெல் சேமிப்புத் தளங்களையும், திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் வட்டம், புதுக்காடு கிராமத்தில் 750 மெட்ரிக் டன் கொள்ளளவில் ரூ.2 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள வட்ட செயல்முறைக் கிடங்கினையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

அடிக்கல் நாட்டப்பட்ட 63 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் விவசாயிகளின் விளைபொருளான நெல்லினை அரசு கொள்முதல் நிலையங்கள் மூலம் விரைந்து கொள்முதல் செய்திட ஏதுவாக, விவசாயத்தை பிரதானமாகக் கொண்டுள்ள கிராமங்கள் தோறும் விவசாயிகளின் நலன் கருதி அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அமைப்பதற்கு அரசு உறுதி பூண்டுள்ளது.

அதன்படி, நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் தலா 250 மெட்ரிக் டன் நெல்லினைச் சேமித்து வைத்திடும் வகையில் தஞ்சாவூர் மாவட்டத்தில் 20 நிலையங்கள், திருவாரூர் மாவட்டத்தில் 10 நிலையங்கள், நாகப்பட்டினம் மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களில் தலா 7 நிலையங்கள், திண்டுக்கல் மாவட்டத்தில் 9 நிலையங்கள், புதுக்கோட்டை மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் தலா 3 நிலையங்கள், கடலூர் மாவட்டத்தில் 2 நிலையங்கள், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் தலா 1 நிலையம் என மொத்தம் 10 மாவட்டங்களில் ரூ.39.37 கோடி மதிப்பீட்டில் 63 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் கட்டுவதற்கான பணிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

இதன்மூலம், விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் நெல் மணிகள் மழைக்காலங்களில் சேதமடையாத வகையில் பாதுகாப்பாகச் சேமித்து வைக்கப்படுவதுடன், விவசாயிகள் தங்களது அறுவடை செய்யப்பட்ட நெல்லினைக் கிராமத்தின் அருகாமையிலேயே அரசு கொள்முதல் நிலையங்களில் அரசு நிர்ணய விலையில் விற்பனை செய்திட ஏதுவாக அமையும். மேலும், இதனால் விவசாயிகளின் போக்குவரத்து இடர்பாடுகள் மற்றும் செலவினம் தவிர்க்கப்படும்.

இளைஞர்களுக்குத் தன்னைப் பற்றிய சிந்தனையும் நாட்டைப்பற்றிய பொதுநோக்கமும் இருக்க வேண்டும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், 24.04.2023 அன்று சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகக் கலையரங்கத்தில் நடைபெற்ற மாபெரும் தமிழ்க் கனவு 100ஆவது தமிழ் மரபு மற்றும் பண்பாட்டுப் பரப்புரை நிகழ்ச்சியில் கலந்து கொண்டு ஆற்றிய உரை.

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்!

“வங்கக் கடலோரம் வாஞ்சைமிகு தாலாட்டில் - தம்பியுடையான் படைக்கஞ்சான் என்று சொல்லியவாறு தனது தம்பி கலைஞர் அவர்களின் பாதுகாப்புடன் துயில்கின்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரால் அமைந்துள்ள இந்த அரங்கில் உங்களை எல்லாம் சந்திக்கின்ற வாய்ப்பைப் பெற்றமைக்கு நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்!

“பொங்கு கடல் நடையும் பூவையரின் மென் நடையும் - தன் புதுத்தமிழ் நடையில் காட்டியவன் பொல்லாங்கு உரைப்போரை வாதத்தில் மாட்டியவன் பொடியெடுத்துப் போடும் நேரம் புன்னகையால் எதிரிகளைப் பொடியாக வாட்டியவன், புழுதிக்குணம் படைத்தோரை ஓட்டியவன், பொன்மகுடம் தமிழ்த்தாய்க்குச் சூட்டியவன், என்று பேரறிஞர் அண்ணா அவர்களைப் பற்றிப் பாராட்டிப் போற்றி எழுதினார் நம்முடைய தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்!

இலட்சக்கணக்கான தமிழ்நாட்டு இளைஞர்களைத் “தம்பி” என்று அழைத்து அரவணைத்தார் பேரறிஞர் அண்ணா. அண்ணா என்ற அந்த ஒற்றைச் சொல்தான் இலட்சக்கணக்கான இளைஞர்களைத் தமிழ் சொந்தங்களை இணைக்கின்ற ஒற்றுமைச் சொல்லாக மாறியது!

இதையும் தாண்டி, ‘உடன்பிறப்பே’ என்ற சொல்லைத் தேர்ந்தெடுத்தார் நம்முடைய தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள்.

"அண்ணா" "தம்பி" "உடன்பிறப்பு" இதெல்லாம் குடும்பப் பாச உணர்வை ஊட்டுகின்ற சொற்கள்! இப்படி உறவாக இணைத்துச் செயல்பட்டதுதான் தமிழ்ச் சமுதாயத்தினுடைய விடியலுக்கு அடித்தளம் அமைத்தது!

பேரறிஞர் அண்ணாவின் பேச்சுக்களை - மாலை நேரத்துக் கல்லூரிகள் - என்று சொல்லுவார்கள்!

சென்னை கன்னிமாரா நூலகத்தில் இருக்கின்ற பெரும்பாலான புத்தகங்களைப் படித்தவர் என்று பெயர் பெற்ற ஒரு அறிஞர்தான் நம்முடைய பேரறிஞர் அண்ணா. தான் படித்த அனைத்தையும் தன்னோட மொழியில் இந்த நாட்டுக்குச் சொன்னார்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் இளைஞர்களிடத்தில்தான் அதிகமாகப் பேசுவார். அதுவும் கல்லூரிகள், பல்கலைக்கழகங்களில்தான் அதிகமாகப் பேசுவார். அவரோட பேச்சுக்கள் எல்லாம் ஏதாவது தலைப்பை மையப்படுத்திதான் இருக்கும்!

அந்தத் தலைப்பைக் கூட அவருக்கு முன்கூட்டியே தரமாட்டார்கள். அவர் ஒலிவாங்கி முன்னாடி நிற்கும்போதுதான் தலைப்பை சொல்வார்கள். உடனே அந்தத் தலைப்பில் பேசுவார்.

1961ஆம் ஆண்டு சென்னை கிறித்துவக் கல்லூரியில் பேசும்போது, 'என்ன தலைப்பு' என்று கேட்டார் அண்ணா. அந்த நிகழ்ச்சி நடத்துகின்ற மாணவர் தலைவர், 'தலைப்பு இல்லை' என்று சொன்னார்.

'தலைப்பில்லை' என்ற தலைப்பிலேயே அண்ணா பேசினார். அந்த உரையில், 'தமிழ்நாடு' என்ற தலைப்புச் சென்னை அரசில் கிடைத்ததேத் தவிர, அரசியல் சட்டத்தில் 'தமிழ்நாடு' என்ற தலைப்புத் தரப்படவில்லை. 'சென்னை ராஜ்யம்' என்ற 'தலைப்பு இல்லாத் தலைப்பு' தரப்பட்டிருக்கிறது.

ஒரு நாடு தலைப்பைப் பெற வேண்டும் என்றால் அது 'சிற்றுரிமை' பெற்றால் மட்டும் போதாது – 'முற்றுரிமை' பெற்றாக வேண்டும். நாடு என்ற தலைப்பிற்கே முழு அதிகாரம் அந்த நாட்டு மக்களுக்கு இருக்க வேண்டும் என்பதுதான் அரசியல் இலக்கணம். தமிழ்நாடு முழு அதிகாரம் பெறவில்லை. எனவே தமிழ்நாட்டிற்குத் தலைப்பு இல்லை! என்று "தலைப்பு இல்லா நாடாகத் தமிழ்நாடு திகழ்வதா?" என்ற தலைப்பில் மாணவர்களிடத்தில் உரையாற்றினார். 1961இல் இந்த உரையை ஆற்றினார். 1967இல் ஆட்சிப் பொறுப்புக்கு வந்ததும் நம்முடைய தாய்நிலத்துக்குத் "தமிழ்நாடு" என்று பெயரிட்டார். அதனால்தான் அவர், தம்பியருக்கு அண்ணன் மட்டுமல்ல; தாய்த் தமிழ்நாட்டுக்கே தலைமகன்!

இப்படிப் பேரறிஞர் அண்ணாவின் உரைகள் ஒவ்வொன்றும் அறிவுப்பூர்வமானவை! கருத்தாழமிக்கவை!

பேரறிஞர் அண்ணா பேசிய தலைப்புக்களில் சிலவற்றை மட்டும் இங்கே நான் குறிப்பிட்டுக் காட்டுகிறேன்.

இலட்சியம் வளர்த்த வரலாறு

மலரும் மாணவர்

போர்வாள்

சுதந்திர இந்தியாவில் வாலிபர் தேவை

என்னைக் கவர்ந்த புத்தகங்கள்

வீட்டிற்கோர் புத்தகச் சாலை

மேடைப்பேச்சு

போர் முரசு

ஆற்றோரம்

ஏ தாழ்ந்த தமிழகமே!- இப்படி எத்தனையோ தலைப்புக்களில் பேசினார் அண்ணா.

தமிழிலும் ஆங்கிலத்திலும் அவர் ஆற்றிய உரைகள் நமக்கெல்லாம் வழிகாட்டும் அறிவுப் பெட்டகமாக, கருவூலங்களாக!

"தமிழில் அடுக்கு மொழியில் விளையாடுகிறீர்களே, ஆங்கிலத்திலும் முடியுமா?" என்று அவரிடம் கேட்டார்கள். "ஏன் முடியாது.. எப்படிப்பட்ட வாக்கியம் வேண்டும்?" என்று திரும்பக் கேட்டார். "because என்கிற சொல்லைத் தொடர்ந்து மூன்று முறை வருமாறு ஒரு வாக்கியம் சொல்ல முடியுமா?" என்று கேட்டதும் அண்ணா சொன்னார்கள்..

'No sentence ends with because, because, because is a conjunction' - என்று சொன்னார் அறிஞர் அண்ணா.

பேரறிஞர் அண்ணா ஆற்றிய தமிழ் சொற்பொழிவுகளின் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா? 12,775. ஆங்கில உரைகளின் எண்ணிக்கை, ஏறத்தாழ 400-ஐ தாண்டியிருக்கும். பொதுமக்களிடமும் இளைய சமூகத்திடமும் பேசுவதை மிகுந்த விருப்பத்துடனும், அக்கறையுடனும் செய்தவர் நம்முடைய அண்ணா அவர்கள். இளைய சமுதாயம் மீது அளப்பரிய நம்பிக்கையை அவர் கொண்டிருந்தவர். தான் கண்ட கனவுகளை அவர்கள் நனவாக்குவார்கள் என்று நம்பினார். அவர்கள் கண்ட கனவுகளைத் தன்னுடையதாக ஆக்கிக்கொண்டார். அப்படிப்பட்ட அண்ணாவின் நினைவு நாளில், 'மாபெரும் தமிழ்க் கனவு' என்ற பண்பாட்டுப் பரப்புரை நிகழ்ச்சி தொடங்கப்பட்டது. இப்படி ஒரு நிகழ்ச்சியைக் கல்லூரிகளில் நடத்த இருப்பதாக இந்தத் தமிழ் இணையக் கல்விக்கழகத் தலைவர், நம்முடைய அரசுச் செயலாளர் திரு. உதயச்சந்திரன் அவர்கள் என்னிடத்தில் சொன்னார், "இதன் முதன்மை நோக்கம் என்ன?" என்று நான் கேட்டேன்.

"இன்றைய இளைய தலைமுறைக்கு தமிழ்ப் பண்பாட்டையும், தமிழர் மரபையும் உணர்த்துவதற்காக!" என்று அவர் சொன்னார். நிச்சயம் இதனைச் செய்ய வேண்டும் என்பதை ஏற்றுக்கொண்ட நான் ஒரு வேண்டுகோளையும் வைத்தேன். "அரசியல் சார்பு இல்லாமல் பொதுவானதாக நடத்துங்கள்" என்று கேட்டுக் கொண்டேன்.

"எந்த இடத்திலும் என்னுடைய பெயரோ, படமோ இடம்பெறக் கூடாது" என்றும் கண்டிப்புடன் கேட்டுக் கொண்டேன். நான் சொன்னபடி நடத்திக் காட்டி இருக்கிறார்கள்!

இதனுடைய தொடக்க நிகழ்ச்சிக்கு என்னை அழைக்கவில்லை. ஆனால் 100ஆவது நிகழ்ச்சிக்கு அழைத்திருக்கிறார். இது கூடச் சரியானதுதான். இந்த 100 நிகழ்ச்சிகளும் சரியாக, முறையாக நடந்திருக்கிறதா? என்பதைக் கண்காணிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

100 நிகழ்ச்சிகளில், 200 சொற்பொழிவுகள் நடந்துள்ளன. இதில் மொத்தம் ஆயிரம் கல்லூரிகளைச் சேர்ந்த ஒரு இலட்சம் மாணவர்கள் பங்கெடுத்துள்ளார்கள். ஒரு இலட்சம் மாணவ, மாணவியருக்குத் தமிழ் மரபும், பண்பாடும் பயிற்றுவிக்கப்பட்டுள்ளது.

இதில் பங்கெடுத்து உரையாற்றிய எழுத்தாளர்கள் - சொற்பொழிவாளர்கள் - ஊடகத் துறையைச் சார்ந்தோர் - அறிஞர்கள் - சமூகச் செயற்பாட்டாளர்கள் - சட்டமன்ற உறுப்பினர்கள் - நாடாளுமன்ற உறுப்பினர்கள் - கலைத்துறையைச் சார்ந்தவர்கள் - தொழில் முனைவோர் - அரசு அதிகாரிகள் என அனைவருக்கும் என நான் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் கனவைத் தூக்கிச் சுமந்த உங்கள் அனைவருக்கும் எனது நன்றிகள். மிகப்பெரிய வரலாற்றுக் கடமையை நீங்கள் செய்திருக்கிறீர்கள்!

நீங்கள் ஆற்றிய உரை, ஒரு நாள் நிகழ்ச்சியாகக் கருதப்படலாம். ஆனால், பலரது நினைவடுக்குகளில் போய்ச் சேர்ந்திருக்கும் என்ற செய்திகள், நாளைய நினைவுக்கு வரும்போதுதான் முழுப்பயன்பாடுகூட வெளிவரும்.

அந்த அறிவும் ஆற்றலும் மாணவர்களைக் கூர்மைப்படுத்தி வைத்திருக்கும். அந்த வகையில், நீங்கள் பேச்சாளர்கள் - சொற்பொழிவாளர்கள் அல்ல, ஆசான்கள் என்று சொல்லவே நான் ஆசைப்படுகிறேன். இந்த ஒட்டுமொத்த நிகழ்ச்சியை இணையக் கல்விக் கழகத்தினர் ஒருங்கிணைத்திருக்கின்ற மிகக் குறுகிய காலத்தில் செறிவாக இதனைச் செயல்படுத்திக் காட்டிய தமிழ் இணையக் கல்விக் கழகத்தினர்க்கு என்னுடைய பாராட்டுதல்களை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்தோடு உங்கள் பணி முடிந்து விடவில்லை. இன்னும் இருக்கிறது. தொடர்ச்சியான பரப்புரைகள் மூலமாகத்தான் நல்ல பல கருத்துகளை விதைக்க முடியும். ஒரு கருத்தைத் திரும்பத் திரும்ப சொன்னவர்களிடமே மீண்டும் மீண்டும் சொல்ல வேண்டும் என்று முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் சொல்வார்கள். அதுமாதிரி விதைத்துக் கொண்டே இருக்க வேண்டும். அப்படி விதைத்தால்தான் பேரறிஞர் அண்ணா காலத்தில் உருவானதைப் போன்ற மாணவர்களை உருவாக்க முடியும்.

"நான் திராவிட இனத்தைச் சேர்ந்தவன். நான் என்னைத் திராவிடன் என்று அழைத்துக் கொள்ளப் பெருமைப்படுகிறேன். இப்படிக் கூறுவதால் நான் வங்காளிக்கோ, மராட்டியர்க்கோ, குஜராத்தியர்க்கோ எதிரானவன் அல்ல. நான், என்னைத் திராவிட இனத்தைச் சேர்ந்தவன் என்று சொல்லிக்கொள்ளும்போது திராவிடனிடம் இந்த உலகத்துக்கு வழங்க திட்டமான - தெளிவான - மற்றவர்களிடம் இருந்து வேறுபட்ட சில இருக்கின்றன" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் பேசினார்கள்.

நம் தாய்த்தமிழ்நாட்டுக்குத் தமிழ்நாடு என்று பெயர் சூட்ட வேண்டும் என்பதை வலியுறுத்திப் பேசும் போது இதையெல்லாம் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள்.

தாய்த் தமிழ்நாட்டு இளைஞர்களாகிய நீங்கள் - தமிழின் பெருமையை - தமிழினத்தின் பண்பாட்டை - தமிழ்நாட்டின் வரலாற்றை - முழுமையாக அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் அண்ணாவின் தம்பிமார்களாகிய எங்களால் இந்த மாபெரும் தமிழ்க் கனவு நிகழ்ச்சி ஒருங்கிணைக்கப்பட்டு இருக்கிறது.

சில நாட்களுக்கு முன்பு, இதே அரங்கில் ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி திரு.ஆர்.பாலகிருஷ்ணன் அவர்களுடைய "ஒரு பண்பாட்டின் பயணம்" என்ற நூல் வெளியீட்டு விழாவில் நான் கலந்துகொண்டேன். அது புத்தகம் அல்ல, தமிழர்களின் பண்பாட்டுக் கருவூலம்!

நீங்கள் படித்துத் தெரிந்து கொண்டிருக்கும் சிந்துச் சமவெளி நாகரிகத்தைப் பற்றிய முழுமையான ஆய்வுநூல் அது. அந்தப் புத்தகத்தை வெளியிடக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்ததை நான் இன்றைக்கும் பெருமையாகக் கருதிக் கொண்டிருக்கிறேன்.

சிந்துப் பண்பாடு என்பது 5,000 ஆண்டுகள் பழமையானது என்றால் அங்கு வாழ்ந்த மக்கள் யார்? அவர்கள் பேசிய மொழி என்ன? என்ற கேள்விக்கான விடையைத்தான் பாலகிருஷ்ணன் அவர்கள் ஆய்ந்து சொல்கிறார்...

அங்கு வாழ்ந்த மக்கள் பயன்படுத்திய மொழி, தமிழ் மொழி. வாழ்ந்த மக்கள் சங்ககாலத் தமிழரின் மூதாதையர் என்பதை நிறுவி இருக்கிறார். 5,000 ஆண்டுகளுக்கு முன்பே பண்பாட்டு நெறிமுறைகளோடு வாழ்ந்த சமூகம், தமிழ்ச் சமூகம். இன்றைக்கும் நமது பயன்பாட்டில் இருக்கும் கொற்கை, வஞ்சி, தொண்டி, ஊர், பட்டி, பள்ளி, காவேரி, பாண்டியன், குமரன், மதுரை, வன்னி, வேல் ஆகிய சொற்களெல்லாம் சிந்துப் பண்பாட்டு வெளியான குஜராத், மராட்டியம், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் ஆகிய இடங்களில் இருக்கிறது என்பதை அவர் நிறுவி இருக்கிறார்.

தமிழர்களின் பண்பாட்டுப் பெருமை இது! இதனை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

"நான் மெக்கானிக்கல் இன்ஜினியரிங் படிக்கிறேன்!

நான் பிசிக்ஸ் படிக்கிறேன்..!

நான் எதற்கு இதைப் படிக்க வேண்டும்?

நான் எதற்காக இதனைத் தெரிந்துகொள்ள வேண்டும்?" என்று நீங்கள் நினைக்கக் கூடாது!

நாம் தமிழினத்தைச் சேர்ந்தவர்கள்!

நமது இனத்தின் வரலாற்றைத் தெரிந்து கொள்ள வேண்டும்!

நமது மொழியின் சிறப்பை, நமக்காக உழைத்த தலைவர்களை, நமது நாட்டின் வளத்தைத் தெரிந்து வைத்திருக்க வேண்டும். ஒருவர் தனது பயணத்தை, எங்கிருந்து தொடங்கினார், எதற்காகத் தொடங்கினார் என்பதை நினைவில் வைத்திருந்தால்தான், அவரது பயணத்தின் இலக்கை அடைய முடியும்! இல்லையென்றால் அவர் இலக்கை மறந்து வழிதவறிவிடுவார்!

இது ஒரு இனத்தின் பயணம்! நம் தமிழினத்தின் பயணம்! நமது வரலாறு என்பது, நமது இலக்கை, தலைமுறைகளைக் கடந்தும் நினைவுபடுத்துவது!

அதற்காகத்தான் மாபெரும் தமிழ்க் கனவு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. அரங்கத்தின் மேடையில், பதாகைகளில் வள்ளுவர் நிறைந்திருந்தார். 'மாபெரும் தமிழ்க் கனவு' என்பது வள்ளுவர் வகுத்ததுதான்.

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற கனவு அது. அதுவே சமூகநீதி. அதை எல்லா நிலையிலும் சாத்தியப்படுத்துவதற்கு நாம் ஓயாது உழைத்துக்கொண்டிருக்கிறோம்.

தந்தைப் பெரியார் - பேரறிஞர் அண்ணா - தமிழினத் தலைவர் கலைஞர் என அனைவரிலும் வள்ளுவரை நீங்கள் பார்க்கலாம்! வள்ளுவர் சொன்ன சமத்துவத்தை நோக்கியே திராவிட இயக்கம் உழைக்கிறது!

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்" என்பதுதான் தமிழரின் அறநெறி!

சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறி முறையின் - மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கில் உள்ள படி" – என்பதுதான் தமிழரின் அறநெறி!

சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே. சாத்திரச் சந்தடிகளிலே, கோத்திரச் சண்டையிலே, ஆதியிலே அபிமானத்து அலைகின்ற உலகீர் அலைந்து அலைந்து வீணேநீர் அழிதல் அழகலவே! - என்பதுதான் தமிழரின் அறநெறி!

சங்க காலத் தமிழர் வாழ்க்கை என்பது அறம் சார்ந்த வாழ்க்கை! இடைக்காலத்தில் புகுந்த சனாதனம், இந்த அறத்தைக் கொன்றது. சமய நம்பிக்கைகளுக்குள் சனாதனம் நுழைந்ததும் – உழைப்புக்குள் நிலவுடைமை நுழைந்ததும்தான் தமிழ்ச் சமுதாயத்தில் சாதிய ஏற்றத்தாழ்வையும் - பொருளாதார ஏற்றத்தாழ்வையும் விதைத்தது. இதனை எதிர்கொள்வதற்கான போராட்டம்தான் காலம் காலமாக நடந்து வருகிறது.

திருவள்ளுவர், வள்ளலார் தொடங்கி, இருபதாம் நூற்றாண்டில் தந்தைப் பெரியார் வரையிலான சமூக சீர்திருத்த தலைவர்களின் வரலாற்றை இன்றைய இளைய தலைமுறை அறிய வேண்டும்.

எப்படி இருந்த நாம் இப்போது இப்படி வளர்ந்திருக்கிறோம் என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

கோவிலுக்குள் வர முடியாது -

சாலைகளில் நடக்க முடியாது -

படிக்கக் கூடாது -

எதிரே வரக்கூடாது -

போன்ற தடைகள் எல்லாம் இப்போது இல்லை என்றால், எப்படி இல்லாமல் ஒழிக்கப்பட்டது? அதுதான் நமது சமூகச் சீர்திருத்தத் தலைவர்களுடைய வெற்றி!

தோள் சீலைப் போராட்டத்துக்கு 200ஆவது ஆண்டு விழா. வைக்கம் போராட்டத்துக்கு இது நூற்றாண்டு விழா ஆண்டு!

இந்த வரலாறுகளைப் படியுங்கள்!

ஒருகாலத்தில் சமூக வாசல் அடைக்கப்பட்டுக் கிடந்தது. அதனை நீதிக்கட்சி ஆட்சி திறந்து விட்டது.

பள்ளிக்கூடங்கள் மூடி இருந்தது. பெருந்தலைவர் காமராசர் திறந்து வைத்தார்.

கல்லூரிவாசல்களைப் பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களும் திறந்து விட்டார்கள்.

நம்முடைய அரசு உயர்கல்வியை உருவாக்கித் தரும் அரசு. அனைத்து மாணவர்களுக்கும் அனைத்து விதமான தகுதிகளையும் உருவாக்கித் தரும் அரசு. நான் முதலமைச்சராக இருந்து மட்டுமல்ல, ஒரு தந்தையாக இருந்து திட்டங்களைத் தீட்டித் தருகிறேன்..

தமிழ்நாட்டில் ஒரு கல்விப் புரட்சியே நடந்து கொண்டு இருக்கிறது.

பள்ளிக் கல்வியாக இருந்தாலும் -

கல்லூரிக் கல்வியாக இருந்தாலும் -

பல்கலைக் கல்வியாக இருந்தாலும் -

அது உங்களைக்கல்வித்தகுதி பெற்றவர்களாக மாற்ற வேண்டும்.

ஆனால் அதனையும் தாண்டிய தனித்திறமைகள் அவசியம். அவசியம். அவசியம். அதனை மறந்துவிடாதீர்கள். எல்லோருமே அதிக மதிப்பெண் பெறுகிறீர்கள். ஆனால் அதிலும் தனித்திறமை கொண்டவர்களாக இருக்கக்கூடியவர்களுக்குத்தான் நல்ல வேலை கிடைக்கிறது.

சுயமாகச் சிந்திப்பதும், சிந்தித்ததை அடுத்தவருக்கு வெளிப்படுத்துவதும் அதைச் சொல்வதும், அதை எழுதிக் காட்டுவதும் மிகமுக்கியமான தனித்திறமைகள். அறிவின் கூர்மை - அறிவாற்றல் என்பது இதுதான்!

இப்படித் தமிழ்நாட்டு மாணவர்கள், இளைஞர்கள் அனைவரும் திகழ வேண்டும் என்பதற்காகத்தான் 'நான் முதல்வன்' என்ற திட்டத்தைக் கடந்த ஆண்டு மார்ச் மாதம் 1ஆம் நாள் எனது பிறந்தநாளில் தொடங்கி வைத்தேன். இது எனது கனவுத் திட்டம். நான் மட்டுமே முதல்வன் அல்ல, தமிழ்நாட்டு இளைஞர்கள் அனைவரையும் நான் முதல்வன் என்று சொல்ல வைத்துக் கொண்டிருக்கும் திட்டம் அது. இதனை நன்கு பயன்படுத்திக் கொண்டு தமிழ்நாட்டு இளைஞர்கள் அனைவரும் முன்னேற்றப் பாதையில் செல்ல வேண்டும் என்று நான் உங்களையெல்லாம் கேட்டுக் கொள்கிறேன்.

உங்களிடம் உயர் கல்வி, வேலை வாய்ப்பு வழிகாட்டிப் புத்தகம் தரப்பட்டுள்ளது. மாநில அளவிலும் - ஒன்றிய அளவிலும், இந்தியாவுக்கு வெளியிலும் என்னென்ன வேலை வாய்ப்புகள் இருக்கின்றன என்பதை இந்தக் கையேடு சொல்கிறது.

தந்தைப்பெரியார் அவர்கள்தான் சொல்வார்கள்...

"தமிழர்களே நீங்கள் எங்காவது போய் முன்னேறி விடுங்கள்" என்பார். அத்தகைய வழிகாட்டுதலை வழங்கி இருக்கிறோம்.

தமிழ்ப் பெருமிதம் என்ற கையேடும் - கல்வி வேலைவாய்ப்பு வழிகாட்டி புத்தகமும் ஒரு இலட்சம் மாணவ, மாணவியர் கைக்குப் போய்ச் சேர்ந்திருக்கிறது. இணையம் வழியாக இன்னும் பல இலட்சம் பேருக்குப் போய்ச் சேர்ந்திருக்கும்.

இந்தக் கையேட்டைத் தயாரித்து வழங்கிய தமிழ் இணையக் கல்விக் கழகத்திற்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்வி வேலை வாய்ப்புக் கையேடு என்பது உங்களை உயர்த்திக் கொள்ள!

தமிழ்ப் பெருமிதம் என்ற கையேடு, நமது இனத்தையும் மொழியையும் உயர்த்துவதற்காக!

தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு, தன்னைப் பற்றிய சிந்தனையும் இருக்கவேண்டும், நாட்டைப் பற்றிய பொதுநோக்கமும் இருக்கவேண்டும். இரண்டுமே முக்கியம்தான்!

இந்த அரங்கத்தில் இருக்கும் உங்களைப் போல, இளம் வயதில், அதாவது 18 வயதில், கோவையில் நடந்த தி.மு.க. மாணவர் மாநாட்டுக்கு, பார்வையாளராகச் சென்றிருந்தேன். அப்போது அழைப்பிதழில் பெயர் போடும் அளவுக்கு முக்கியப் பேச்சாளராக நான் வளரவில்லை. 'எனக்கு ஒரு நிமிடம் பேசுவதற்கு வாய்ப்புத் தர முடியுமா?' என்று மாநாட்டுத் தலைவராக, பொறுப்பாளராக இருந்த எல்.கணேசன் அவர்களிடம் அனுமதி கேட்டு அனுமதியும் கொடுத்தார். பேசினேன். "மொழிக்காக, நம்முடைய இனத்துக்காக போராடுகிறோம். போராடுகிற இந்த நேரத்திலே நம்முடைய உயிரை இழக்கின்ற தியாகத்தைச் செய்வதற்குக்கூடக் காத்திருக்கிறோம். மொழிக்காக – இனத்துக்காக 'தனயனை இழந்த தந்தை' என்று என்னுடைய தந்தைக்குப் பாராட்டுக் கிடைக்கும்" என்று நான் பேசினேன்.

'இது நடந்தது, 1971ஆம் ஆண்டு!

எனது முதல் மாநாட்டு பேச்சு இது!

அதே மேடையில், தலைவர் கலைஞர் இருந்தார், அப்போது அவர் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருக்கிறார். எனக்கு மட்டுமல்ல, இளைஞர்கள் அனைவர்க்கும் அவர் அறிவுரை கூறினார்.

"முதலில் நன்கு படியுங்கள்! அதுதான் உங்களது பெற்றோருக்கு நீங்கள் ஆற்ற வேண்டிய முதல் கடமை" என்று குறிப்பிட்டார் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்!

அதே அறிவுரையைத்தான் இன்றைய இளைஞர்களுக்கும் நான் சொல்வேன்.

படியுங்கள்! படியுங்கள்! படியுங்கள்!

இதுதான் என்னுடைய முதல் வேண்டுகோள்!

கல்விதான் உங்களிடம் இருந்து யாராலும் பறிக்க முடியாத சொத்து! அந்த சொத்தைச் சேகரித்துவிட்டால் மற்ற சொத்துக்கள் தானாக வந்து சேர்ந்துவிடும்!

எனவே பள்ளிக் காலத்தில், கல்லூரிக் காலத்தில் படிப்பில் இருந்து கவனச் சிதறல்கள் இருக்கக் கூடாது. எந்தச் சூழலிலும் தவறான பழக்க வழக்கங்களுக்கு அடிமை ஆகிவிடாதீர்கள். அது உங்கள் உடல் நலனுக்கு மட்டுமல்ல, இந்த நாட்டு நலனுக்கும் கேடு விளைவிக்கும்.

அதேபோல் இணைய தளங்களை, சமூக வலைத்தளங்களைத் தேவைக்கு மட்டும் பயன்படுத்துங்கள். குறிப்பாக மாணவிகள், நிச்சயமாகப் படித்தாக வேண்டும். பட்டங்கள் வாங்கத் தவறக் கூடாது. வாங்கிய பட்டத்துக்குத் தகுதிவாய்ந்த வேலைகளுக்கு நிச்சயம் செல்ல வேண்டும். உயர் பதவிகளை அடைய வேண்டும். தங்களின் பொருளாதாரத் தேவையைத் தாங்களே பணியாற்றிப் பெறும் தகுதியை அடைய வேண்டும்.

மாணவராக இருந்தாலும் - மாணவியாக இருந்தாலும் தைரியம் - துணிச்சல் - தன்னம்பிக்கை - அஞ்சாமை ஆகியவை வேண்டும். சமூகநீதி - சமநீதி - சமதர்மம் – சகோதரத்துவம் ஆகிய நெறிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். அதற்காக உழைக்க வேண்டும்!

எனக்கு ஒரு மாபெரும் கனவு இருக்கிறது. "எல்லார்க்கும் எல்லாம்" என்பதுதான் அந்தக் கனவு!

கனவு என்றால், கண்ணை மூடிக் கொண்டு கற்பனை உலகில் மிதப்பது அல்ல!

ஒரு இலட்சியத்தை நெஞ்சிலேந்தி நாளும் உழைப்பது!

அந்த உழைப்பைத்தான் நாள்தோறும் நான் இந்தத் தமிழ்ச் சமுதாயத்திற்காகத் தந்துகொண்டு இருக்கிறேன்!

என்னுடைய கனவை நோக்கிய பெரும் பயணத்துக்குக் கைகாட்டி, கலங்கரை விளக்காக இருக்கக் கூடியவைதான், மாபெரும் தமிழ்க் கனவு போன்ற நிகழ்ச்சிகள்!

இதனைச் சிறப்பாக நடத்தித் தந்த அனைவருக்கும் எனது வாழ்த்துக்கள்!

இதுபோன்ற நிகழ்ச்சிகள் உருவாக்க இருப்பதே உண்மையான உணர்ச்சிகள்.

நாடு இதனால் அடையும் தமிழ் மலர்ச்சிகள்.

ஆகவே, உங்கள் அத்தனை பேருக்கும் மீண்டும் ஒருமுறை நன்றிகூறி விடைபெறுகிறேன்.

நன்றி! வணக்கம்!

ரூ.3.25 கோடியில் திருவருட்பிரகாச வள்ளலாரின் முப்பெரும் விழா மற்றும் தொடர் அன்னதானத்திற்கான அரசு மானியம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் வழங்கினார் - 25.04.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 25.04.2023 அன்று, தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் திருவருட்பிரகாச வள்ளலாரின் முப்பெரும் விழா மற்றும் தொடர் அன்னதானத்தினைச் செயல்படுத்திடும் வகையில், தமிழ்நாடு அரசின் மானியமாக ரூ.3.25 கோடிக்கான காசோலையை வள்ளலார் முப்பெரும் விழா சிறப்புக்குழுவின் தலைவர் டாக்டர் பி.கே.கிருஷ்ணராஜ் வானவராயர் அவர்களிடம் வழங்கினார்.

2022-2023ஆம் ஆண்டிற்கான இந்து சமய அறநிலையத் துறை மானியக் கோரிக்கையில் அறிவித்தபடி, திருவருட்பிரகாச வள்ளலாரின் முப்பெரும் விழாவினை அக்டோபர் 2022 முதல் அக்டோபர் 2023 வரை 52 வாரங்களுக்கு முக்கிய நகரங்களில் கொண்டாடிடும் வகையில் டாக்டர் பி.கே.கிருஷ்ணராஜ் வானவராயர் அவர்கள் தலைமையில் 14 உறுப்பினர்களைக் கொண்ட சிறப்புக்குழு அமைக்கப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 05.10.2022 அன்று நடைபெற்ற வள்ளலார் முப்பெரும் விழாவின் தொடக்க விழாவில் "வள்ளலார் - 200" இலச்சினை, தபால் உறை, சிறப்பு மலர் ஆகியவற்றை வெளியிட்டு, 52 வாரங்களுக்கான விழாக்களில் முதல் வார நிகழ்ச்சிகளையும், ஆண்டு முழுவதும் அன்னதானம் வழங்கும் நிகழ்வையும் தொடங்கி வைத்து, விழாப் பேருரை ஆற்றும்போது, "வள்ளலாரின் முப்பெரும் விழா 52 வாரங்களுக்குப் பல்வேறு நகரங்களில் சிறப்பாக நடத்திட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த நேரத்தில் நான் ஒரு மகிழ்ச்சியான செய்தியை உங்களுக்குத் தெரிவிக்க விரும்புவது, ஓராண்டிற்குத் தொடர் அன்னதானம், பேச்சாளர்களுக்கு சன்மானம் உள்ளிட்ட இந்த விழாவிற்கு ரூ.3.25 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது" என்று அறிவித்தார்.

அதன்படி, வள்ளலார் முப்பெரும் விழா மற்றும் தொடர் அன்னதானம் செலவினத்திற்காக அரசு மானியமாக ரூ.3.25 கோடிக்கான காசோலையினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வள்ளலார் முப்பெரும் விழா சிறப்புக்குழுவின் தலைவர் டாக்டர் பி.கே.கிருஷ்ணராஜ் வானவராயர் அவர்களிடம் வழங்கினார்.

தமிழ்நாடு முழுவதும் வள்ளலாரின் முப்பெரும் விழா கொண்டாடப்பட்டு தினந்தோறும் 150 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது.

உளுந்தூர்ப்பேட்டைத் தொழிற்பேட்டையில் ரூ.2,302 கோடி முதலீட்டில் 20,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது - 17.04.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், 17.04.2023 அன்று, தலைமைச் செயலகத்தில், உலக அளவில் காலணிகள் உற்பத்தியில் முன்னிலை வகிக்கும் தைவான் நாட்டின் பௌ சென் (Pou Chen) குழுமத்தைச் சேர்ந்த ஹை க்ளோரி ஃபுட்வேர் இந்தியா பிரைவேட் லிமிடெட் (M/s High Glory Footwear India Private Limited) நிறுவனம், அடுத்த 12 ஆண்டுகளில் ரூ.2,302 கோடி முதலீடு மற்றும் 20,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், கள்ளக்குறிச்சி மாவட்டம், சிப்காட்-உளுந்தூர்பேட்டை தொழிற்பூங்காவில், காலணிகள் உற்பத்திக்கான புதிய ஆலை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாக விளங்கி வரும் தமிழ்நாட்டினை, 2030ஆம் ஆண்டிற்குள் ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக உயர்த்திட வேண்டும் என்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் இலக்கினை விரைவில் அடைவதற்காகத் தமிழ்நாடு அரசின் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை, உயர் தொழில்நுட்பம் சார்ந்த தொழில் முதலீடுகளை (Capital intensive high-tech industries) ஈர்த்திடுவது மட்டுமல்லாமல், பெருமளவில் வேலைவாய்ப்பு அளித்திடும் தொழில் முதலீடுகளையும் (Employment intensive) ஈர்த்திட முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, 2024ஆம் ஆண்டு ஜனவரி 10, 11 ஆகிய தேதிகளில் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டினைச் சிறப்பான முறையில் நடத்தி, பெருமளவிலான முதலீட்டினை ஈர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

பௌ சென் கார்ப்பரேஷன் (Pou Chen)

தைவான் நாட்டைச் சேர்ந்த பௌ சென் கார்ப்பரேஷன் (Pou Chen) காலணிகள் தயாரிப்பில் உலகளவில் முன்னணி நிறுவனமாக விளங்குகிறது. இந்நிறுவனம், உலகப் புகழ்பெற்ற காலணி நிறுவனங்களுக்கு ஒப்பந்த உற்பத்தியாளராக விளங்குகிறது.

புரிந்துணர்வு ஒப்பந்தம்

பௌ சென் குழுமத்தைச் சேர்ந்த ஹை க்ளோரி ஃபுட்வேர் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனம், காலணி உற்பத்திக்காக அடுத்த 12 ஆண்டுகளில், ரூ.2,302 கோடி முதலீடு மற்றும் 20,000 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் அளிக்கும் வகையில், கள்ளக்குறிச்சி மாவட்டம், சிப்காட் உளுந்தூர்ப்பேட்டைத் தொழிற் பூங்காவில் காலணிகள் உற்பத்திக்கான ஆலை அமைக்கவுள்ளது. இத்திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் இன்றையதினம் தமிழ்நாடு அரசிற்கும் ஹை க்ளோரி ஃபுட்வேர் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கும் இடையே மேற்கொள்ளப்பட்டது.

கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் தமிழ்நாடு காலணி மற்றும் தோல் பொருட்கள் கொள்கை 2022 மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டதன் தொடர்ச்சியாக, இத்திட்டம் ஈர்க்கப்பட்டிருப்பது, குறிப்பிடத்தக்கது. மேலும், தொழில் வளர்ச்சி மாநிலம் முழுவதும் பரவலாக இருக்க வேண்டும் என்பதன் அடிப்படையில், பின்தங்கிய மாவட்டங்களில் முதலீடுகளை ஈர்த்திட அரசு மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்குப் பலன் அளித்திடும் வகையிலும் இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டம் அமைக்கப்படுவதன் மூலமாக, புதியதாக உருவாக்கப்பட்டுள்ள கள்ளக்குறிச்சி மாவட்டம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளைச் சார்ந்த இளைஞர்களுக்கு, குறிப்பாகப் பெண்களுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்புகள் உருவாகும். அதுமட்டுமின்றி, ஏற்கெனவே, காலணி மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் முன்னணி மாநிலமாக விளங்கி வரும் தமிழ்நாடு, தனது நிலையை மேலும் வலுப்படுத்திக் கொள்ள இது உதவும்.

ஜூன் 26: சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்களின் பிறந்த நாள்

“கல்லக்குடி கொண்டான்”

பாஞ்சாலங்குறிச்சியிலே அவருக்கு மிகவும் பிரியமான மாவீரன் கட்டபொம்மனுக்கு ஒரு நினைவுச் சின்னத்தை எழுப்ப வேண்டுமென்று, பாஞ்சாலங்குறிச்சியிலே கோட்டையை புதுப்பித்துக் கட்டினேன்.

அந்த விழாவிற்கு வந்திருந்த சிலம்புச் செல்வர் அவர்கள் பேசும்போது, வள்ளுவர் கோட்டம் கட்டுவதற்கு ஏற்பாடு, பூம்புகார் கட்டுவதற்கு ஏற்பாடு, இங்கே பாஞ்சாலங்குறிச்சியை இவ்வளவு அழகான கோட்டையாகக் கருணாநிதி உருவாக்கியிருக்கிறார் என்று சொல்லிவிட்டு, ஒரு பாச உணர்வோடு சொன்னார். இதையெல்லாம் இருந்து பார்த்துக் கருணாநிதியை வாழ்த்துவதற்கு அண்ணா இல்லையே, என்று வருத்தப்பட்டுவிட்டுச் சொன்னார், அண்ணா இல்லாவிட்டாலும் கருணாநிதி அவர்களே, அண்ணா இடத்திலே நான் இருந்து உங்களை வாழ்த்துகிறேன் என்று அன்றைக்குச் சொன்னார். இன்றைக்குச் சொன்னதுபோல் அந்தச் சொல் என்னுடைய காதுகளிலே ஒலித்துக் கொண்டிருக்கின்றது.

என்றும் என் மீது ஒரு தனி பாசம் கொண்டவர். “கல்லக்குடி கொண்டான்” என்ற பட்டத்தை அவர்தான் திருச்சியிலே நடைப்பெற்ற ஒரு விழாவிலே வழங்கினார். மற்றவர்களைப் பாராட்டுவதில் சளைக்காதவர். தமிழுக்காக உழைக்கின்ற யாராக இருந்தாலும், தமிழுக்காகப் போராடுகின்ற யாராக இருந்தாலும் அவர்களையெல்லாம் தட்டிக் கொடுத்து ஊக்கப்படுத்த வேண்டுமென்று எண்ணுகிறவர்.

*- முத்தமிழறிஞர் **கலைஞர்** அவர்கள், 01.07.2006 அன்று நடைப்பெற்ற சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவில் ஆற்றிய உரையிலிருந்து...*

ஜூன் 5: கண்ணியத் தென்றல்
காயிதே மில்லத் அவர்களின் பிறந்த நாள்

"தேச பக்தர்"

சகிப்புத் தன்மையின் மறுவடிவமாகத் திகழ்ந்தவர் கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்கள். எளிமையின் திருவுருவமாகத் திகழ்ந்தவர் காயிதே மில்லத் அவர்கள். இனிய இயல்புகளின் உறைவிடமாகத் திகழ்ந்தவர் காயிதே மில்லத் அவர்கள். தலைசிறந்த தேச பக்தர் காயிதே மில்லத் அவர்கள்.

அவர் தலைசிறந்த தேச பக்தர் என்பதற்கு வேறு எடுத்துக்காட்டுகள் தேவையில்லை. பாராளுமன்றத்திலே அவர் ஆற்றிய உரை ஒன்றே போதுமானது. பாகிஸ்தான் ஆக்கிரமிப்பின்போது, பாகிஸ்தான் போராட்டத்தின்போது, இந்திய இராணுவத்தில் என்னுடைய மகனைச் சேர்த்துப் போருக்கு அனுப்ப நான் தயாராக இருக்கிறேன் என்று சொன்ன உரை ஒன்றே அவர் எத்தகைய தேச பக்தர் என்பதற்குச் சரியான சான்றாகும்.

அப்படிப்பட்ட தேச பக்தர், நாட்டுப் பற்றாளர், மொழிப் பற்றாளரும்கூட! தமிழ்மொழி இந்தியாவின் பொது மொழியாக, தேசிய மொழியாக ஆக்க வேண்டும் என்று திட்டவட்டமாக தெளிவாகத் தெரிவித்தவர். இந்தியாவின் பொது மொழியாக எது இருப்பது என்ற சர்ச்சை அரசியல் நிர்ணயச் சபையிலே எழுந்த நேரத்தில், இலக்கிய ரீதியாக, இலக்கண ரீதியாக, வரலாற்று ரீதியாக, வளம் பொருந்திய ஒரே மொழி தமிழ் மொழிதான், அந்த மொழிதான் இந்தியாவின் பொது மொழியாக இருக்கவேண்டுமென்றவர் காயிதே மில்லத் அவர்கள்.

- முத்தமிழறிஞர் **கலைஞர்** அவர்கள் கண்ணியத்திற்குரிய
காயிதே மில்லத் அவர்களின் 95ஆவது பிறந்த நாளையொட்டி
அவரது நினைவிடத்திற்குச் சென்று மலரஞ்சலி செலுத்தி ஆற்றிய உரையிலிருந்து...

அறிவுப் புரட்சிக்கு புத்தகங்களே ஆயுதம்

நல்ல புத்தகங்கள் நல்ல தோழன்!

ஒரு புத்தகத்தை நாம் படிக்கத் தொடங்கும்போது, அது நம்முடன் உரையாடத் தொடங்குகிறது. நாம் அறியாத உலகத்தைக் காட்டுகிறது. அறிவூட்டுகிறது! நம்மைப் பண்படுத்துகிறது!

அதனால்தான், புத்தகங்களைப் பரிமாறிக்கொள்வதை ஓர் இயக்கமாகத் தி.மு.க.வினர் முன்னெடுக்கிறோம்.

புத்தக வாசிப்பைப் பரவலாக்கும் வகையில், நமது திராவிட மாடல் அரசு மாவட்டங்கள் தோறும் புத்தகக் காட்சிகளை நடத்துவதுடன், நூலகங்களுக்கும் புத்துயிர் அளித்துள்ளது.

அறிவுப் புரட்சிக்கு புத்தகங்களே ஆயுதம்!

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
உலக புத்தகத் தினத்தை முன்னிட்டு
சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள
வாழ்த்துச் செய்தி - 23.04.2023

tndiprnews DIPR TN tndipr TN DIPR www.dipr.tn.gov.in

சென்னை, தண்டையார்பேட்டையில்

ரூ.34.49 கோடி மதிப்பீட்டில்

அரசு அச்சகப் பணியாளர்களுக்குப் புதிய குடியிருப்புகள்

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்
திரு. **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் அடிக்கல் நாட்டினார் - 11.05.2023

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.எஸ்.எஸ்.சிவசங்கர் அவர்கள் ஆகியோர் முன்னிலையில், பத்திரிகையாளர் நல வாரியத்தின் சார்பில் 7 பத்திரிகையாளர்களுக்கு நலவாரிய உறுப்பினர் அட்டையினையும், பணிக்காலத்தில் உயிரிழந்த அரசு அச்சகப் பணியாளர்களின் வாரிசுதாரர்கள் 8 நபர்களுக்குக் கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளையும், 1 இலட்சத்து ஒன்றாவது தமிழரசு இதழ் சந்தாதாரருக்குத் தமிழரசு இதழையும் வழங்கிச் சென்னை தண்டையார்பேட்டை காமராஜர் நகர், அரசு அச்சகப் பணியாளர்களுக்கு 96 புதிய குடியிருப்புகள் ரூ.34.49 கோடி மதிப்பீட்டில் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டினார்.

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் ஆற்றிய விழாப் பேருரை:

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறையின் சார்பாக, பத்திரிகையாளர் நல வாரிய உறுப்பினர் அட்டை வழங்குகின்ற நிகழ்ச்சி மற்றும் அரசு அச்சகப் பணியாளர்களுக்கான நவீன வசதியுடன் ரூ.34.49 கோடி மதிப்பீட்டில் இங்கே அடிக்கல் நாட்டியிருக்கக்கூடிய 96 குடியிருப்புகள் மற்றும் கருணை அடிப்படையிலான பணிநியமன ஆணை வழங்குகின்ற நிகழ்ச்சி மற்றும் தமிழரசு இதழினுடைய ஒரு இலட்சத்து ஒன்றாவது சந்தா வழங்குகின்ற இந்த நிகழ்ச்சி ஒரு சிறப்பான நிகழ்ச்சி. உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய வாழ்த்துக்களையும், வணக்கத்தையும் முதலில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கழக அரசு தேர்தல் அறிக்கையிலே சொன்னபடி, பத்திரிகையாளர் நல வாரியம் அமைக்கும் பணி இன்று தொடங்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தேர்தல் அறிக்கையில் சொன்ன ஒவ்வொரு வாக்குறுதியையும் ஒவ்வொரு நாளாக நாங்கள் நிறைவேற்றி வருகின்றோம். அதன் ஒரு பகுதியாக இன்று, தேர்தல் அறிக்கையில் சொன்ன வாக்குறுதியை காப்பாற்றியிருக்கிறோம், நிறைவேற்றியிருக்கிறோம்.

பத்திரிகையாளர் நலன் சார்ந்த அரசாக என்றுமே நம்முடைய திராவிட முன்னேற்றக்

கழக அரசு செயல்பட்டு வருகிறது. ஆட்சிக்கு வந்ததும், தேர்தல் அறிக்கையில் சொன்னதுபோல, சென்ற அரசால் போடப்பட்ட அத்தனை அவதூறு வழக்குகளையும் நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரசாணை வெளியிட்டு அத்தனை வழக்குகளையும் இரத்து செய்தார். அதேபோல, கொரோனா நேரத்தில், பத்திரிகையாளர்களை முன்களப் பணியாளர்களாக அறிவித்தது மட்டுமல்லாமல், அவர்களுக்கெல்லாம் ரூ.5,000 நிதி உதவி கிடைக்கச் செய்ததும் நம்முடைய அரசு. தொடர்ந்து, பத்திரிகையாளர்களுக்காகச் சேவை செய்ய நம்முடைய அரசு காத்துக் கொண்டிருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும்.

அதேபோல், இன்று இந்த நிகழ்ச்சிக்குப் பொதுவாகப் பத்திரிகையாளர்களெல்லாம் வந்திருக்கிறீர்கள், மூத்த பத்திரிகையாளர்களும் வந்திருக்கிறீர்கள். மற்ற நிகழ்ச்சிகள், மற்ற துறை நிகழ்ச்சிகளையெல்லாம் நீங்கள் அந்த நிகழ்ச்சியின் செய்தியைச் சேகரிப்பதற்காக வருவீர்கள். ஒவ்வொரு பத்திரிகையிலும் ஒவ்வொரு அளவில் வரும், ஒவ்வொரு கோணத்தில் வரும், சில சமயம் வராமல் கூட போய்விடும். ஆனால் இன்றைக்கு உங்களுடைய நிகழ்ச்சி. இந்த நிகழ்ச்சியின் செய்தியை நீங்கள் சேகரிக்காமல் இருக்க முடியாது. இன்னும் சொல்லப்போனால், இன்றைக்கு வேறொரு மிக முக்கியமான நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கிறது, ஒரு புதிய அமைச்சர் பதவியேற்று இருக்கிறார். அந்த நிகழ்ச்சியை விட்டுவிட்டு இந்த நிகழ்ச்சியில் செய்தி சேகரிப்பதற்கு வந்திருக்கிறீர்கள். எனவே, அந்தளவிற்கு இந்த நிகழ்ச்சி ஒரு முக்கியமான நிகழ்ச்சிதான். நேற்று நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு.சாமிநாதன் அவர்கள் இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து, உடனே இந்த அரசு நிகழ்ச்சியை நடத்த வேண்டும் என்று இந்த நிகழ்ச்சியை நடத்தியிருக்கிறார் என்றால், பத்திரிகையாளர்களுக்கு இந்த அரசு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறது என்பதை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

எப்போதும்போல நீங்கள் தொடர்ந்து இந்த அரசுக்குத் துணைநின்று, ஏதாவது தவறு நடந்தால் அதை சுட்டிக்காட்டி, நல்லது செய்தால் எங்களைத் தட்டிக்கொடுத்து நீங்களெல்லாம் உங்களுடைய பணியைத் தொடர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, வந்திருக்கக்கூடிய அத்தனை பேருக்கும் என்னுடைய வாழ்த்துக்களையும், வணக்கங்களையும் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகின்றேன்.

“இதயம் கலங்காதோய்”

மலையளவு நெஞ்சுறுதி
வானளவு சொற்பெருக்குக்
கடலளவு கற்பனைகள்
கனிந்துருகும் கவிக்கனிகள்
இவைதலையாய் ஏற்றமுற்று
இளந்தலைகள் வாழ்த்தொலிக்க
அவைத்தலைமை ஏற்றிருக்கும்
அன்புமிகும் என்தோழ!
கூட்டத்தைக் கூட்டுவதில்
கூட்டியதோர் கூட்டத்தின்
நாட்டத்தை நாட்டுவதில்
நற்கலைஞன் நீயிலையோ!
அந்தச் சிரிப்பல்லவோ
ஆளையெல்லாம் கூட்டிவரும்
அந்தச் சிறுமீசை
அப்படியே சிறைப்படுத்தும்!
சந்திரனைப் போலத்
தகதகவென்றே ஒளிரும்
அந்த வழுக்கையில்தான்
அரசியலே உருவாகும்!
எந்தத் துயரினிலும்
இதயம் கலங்காதோய்!
முந்து தமிழ்த் தோழ!
முனைமழுங்கா எழுத்தாள!
திருவாரூர்த் தேரினையே
சீராக்கி ஓடவிட்டுப்
பல்கும் மழைத்துளியைப்
பரிசாகப் பெற்றவனே!
கருணாநிதித் தலைவா!
கவிதை வணக்கமிது!

– கவியரசு கண்ணதாசன்

வெற்றிக்கதை

பெண்களின் நிலையறிந்து மகளிருக்கான கட்டணமில்லாப் பேருந்து பயணத்திட்டத்தைச் செயல்படுத்திய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி

மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் பெண்கள் முன்னேற்றம் பெற 1973இல் இந்தியாவிலேயே முதன்முறையாக காவல்துறையில் மகளிரைப் பணிநியமனம் செய்ய ஆணையிட்டார்கள்.

பெண்கள் தன்னம்பிக்கையுடனும் சுயமரியாதையுடனும் சொந்தக் காலில் நிற்க வேண்டும் என்பதற்காக 1989ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டத்தில் மகளிர் சுயஉதவிக் குழு தொடங்கி வைத்தார்கள்.

1989ஆம் ஆண்டில் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம், 1990ஆம் ஆண்டில் ஏழைப் பெண்களுக்குத் திருமண நிதி உதவி வழங்கும் திட்டம், டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதி உதவித் திட்டம், அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண நிதி உதவித் திட்டம், அன்னை தெரசா அம்மையார் நினைவு ஆதரவற்ற பெண்களுக்கான திருமண நிதியுதவித் திட்டம், ஈ.வெ.ரா மணியம்மையார் நினைவு ஏழை விதவையர் மகள் திருமண நிதி உதவித் திட்டம் ஆகிய திருமண நிதியுதவித் திட்டங்களைத் தொடங்கி செயல்படுத்தினார்கள்.

1990ஆம் ஆண்டில் அரசுப் பதவிகளில் பெண்களுக்கு 30 சதவிகித இடஒதுக்கீடு, 1990இல் பெண்களுக்குப் பரம்பரை சொத்தில் சம உரிமை அளித்திடும் சொத்துரிமைச் சட்டம், 1997ஆம் ஆண்டில் பள்ளிகளில் இரண்டாம் வகுப்பு வரை முற்றிலும் பெண்கள் மட்டுமே ஆசிரியர்களாக நியமனம், இந்தியாவிலேயே முதன்முறையாகப் பெண்களுக்கு உள்ளாட்சி அமைப்புகளில் 33 சதவிகிதம் இட ஒதுக்கீடு, 50 வயது கடந்து திருமணமாகாமல் வறுமையில் வாடும் ஏழைப் பெண்களுக்கு மாதாந்திர ஓய்வூதியம் வழங்கும் திட்டம் ஆகிய திட்டங்களைச் செயல்படுத்தினார்கள்.

அன்றாடம் சிறு தொழில் செய்யும் மகளிர் தாங்கள் சம்பாதித்த பணத்தை வட்டி என்ற பெயரில் தனிநபர்களிடம் இழப்பதைத் தடுக்க 1998ஆம் ஆண்டு மகளிர் சிறு வணிகக் கடன் திட்டம், மகளிர் சுயஉதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களை மாநில அளவில் சந்தைப்படுத்துவதற்காக வள்ளுவர் கோட்டம் அருகில் ரூ.10 கோடிச் செலவில் அன்னை தெரசா மகளிர் வளாகம் ஆகியவற்றை நிறைவேற்றி முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் பெண்களின் முன்னேற்றத்திற்கு இந்தியாவிற்கே முன்னோடியாகத் திகழ்ந்தார்கள்.

மாணவ, மாணவியர்கள் தாங்கள் விரும்பிய பள்ளிகளுக்குச் சென்று கல்வி பயில, தூரம் ஒரு தடையாக இருக்கக் கூடாது என்பதற்காக மாணவ, மாணவியர்களுக்கான இலவசப் பேருந்து பயண அட்டைத் திட்டம் கொண்டு வரக் காரணமாக இருந்து, 2006-2011 காலத்தில் உள்ளாட்சித் துறை அமைச்சராகப் பல்லாயிரக்கணக்கான மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்களுக்குத் தன் கையாலேயே சுழல் நிதி, பொருளாதாரக் கடனுதவிகளை வழங்கி, இன்று தமிழகத்தின் முதலமைச்சராகப் பதவியேற்றுள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் தமிழக மக்களின் வாழ்வில் புது ஒளியை ஏற்படுத்தும் வகையிலும், தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையிலும், 5 முக்கிய அரசாணைகளைப் பிறப்பித்தார்.

அவற்றில் ஒன்றாக, தமிழகம் முழுவதும் உள்ள அரசுப் போக்குவரத்துக் கழகக் கட்டுப்பாட்டில் இயங்கும் சாதாரணக் கட்டண நகரப் பேருந்துகளில் பயணம் செய்யும் அனைத்து மகளிரும் கட்டணமில்லாமலும், பேருந்துப் பயண அட்டை இல்லாமலும் 08.05.2021 முதல் பயணம் செய்ய ஆணை பிறப்பித்துள்ளார்.

இதனடிப்படையில், நாமக்கல் மாவட்டத்தில் நாமக்கல் - இராசிபுரம், நாமக்கல் - மோகனூர், நாமக்கல் - காளப்ப நாயக்கன்பட்டி, நாமக்கல் - வளையப்பட்டி, நாமக்கல் - எருமப்பட்டி, திருச்செங்கோடு - குமாரபாளையம், குமாரபாளையம் - ஈரோடு, பள்ளிபாளையம் - ஈரோடு என பல்வேறு வழித்தடங்களில் தினந்தோறும் மொத்தம் 110 பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இந்த நகரப் பேருந்துகள் அனைத்திலும் மகளிர் கட்டணமில்லாமல் பயணம் செய்யலாம் என்ற ஒட்டுவில்லை ஒட்டப்பட்டுள்ளது. அரசின் இத்திட்டம் முட்டைப் பண்ணைகள், ஜவுளி உற்பத்தி நிலையங்கள், மருத்துவமனைகள், வணிக நிறுவனங்கள், உழவர் சந்தை உள்ளிட்ட இடங்களுக்கு மிகக்குறைந்த வருமானம் தரும் பணிக்குச் செல்லும் பெண்கள் தாங்கள் சம்பாதித்த பணத்தில் 25 முதல் 40 சதவீதம் வரை பயணச் செலவுக்கே செலவிட்டு வந்த நிலையில் தற்போது அவர்களுக்கு இந்த அறிவிப்பு மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இத்திட்டத்தினால் பயன்பெற்ற பயனாளி சேந்தமங்கலத்தைச் சேர்ந்த கட்டடத் தொழிலாளி திருமதி மருதாயி நம்மிடம் தெரிவித்ததாவது,

மருதாயி

எம்பேரு மருதாயி, நா எங் குடும்பத்தோட சேந்தமங்கலத்தில குடியிருக்கேன். நாமக்கல் டவுன்ல கிடைக்கற கட்டட வேல, காய்கறி விக்கிறது மாதிரி வேலைகள பாத்து பொழப்ப ஓட்டிகிட்டு இருக்கேன். ஒரு நாளக்கு ரூ.300, ரூ.400ன்னு வருமானம் கிடைக்கும். வாரத்துல 5 நாளு வேல கிடைச்சா பெருசு. புதுசா வந்திருக்கற முதலமைச்சர் ஸ்டாலின் ஐயா, பொம்பளைங்க டவுன் பஸ்ல டிக்கெட்டு வாங்காம, செலவு பண்ணாம வந்துட்டு போலாம்னு செல்லியிருக்காரு. ஒரு நாளுக்கு பஸ்க்கு மட்டு 50 ரூபா ஆகிட்டு இருந்துச்சு. இன்னிக்கு 50 ரூபா எனக்கு மிச்சம். அன்றாடங் காச்சியா வாழற எங்கள போல கட்டட வேல பாக்கற பொம்பளங்களுக்கு இந்த உதவிய செஞ்சு கொடுத்த முதல்வரய்யாவுக்கு என்னோட நன்றிய சொல்லிக்கிறேன், என்று தெரிவித்தார்.

இத்திட்டத்தினால் பயன்பெற்ற பயனாளி ஏளூரைச் சேர்ந்த மருத்துவமனைப் பணியாளர் ஆர்.பிரியா நம்மிடம் தெரிவித்ததாவது,

ஆர். பிரியா

எனது பெயர் ஆர்.பிரியா, ஏளூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் நாமக்கல் நகரில் தனியார் மருத்துவமனையில் பணிபுரிந்து வருகிறேன். ஸ்டாலின் சார் தேர்தல் வாக்குறுதியாக மகளிருக்கு நகரப் பேருந்துகளில் இலவச பயணம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அறிவித்திருந்தார்கள். அவர் முதலமைச்சராக போறார் என்று தெரிந்தவுடன் நமக்கு 2, 3 மாசத்துக்குள்ள இலவச பேருந்து சலுகை கிடைக்கும்னு நானும், என்னுடன் பணியாற்றும் பெண்களும் நினைத்தோம். ஆனா ஸ்டாலின் சார் தமிழ்நாடு முதலமைச்சராகப் பொறுப்பேற்ற உடனே அரசு நகரப் பேருந்துகளில் மகளிர் இலவசமாகப் பயணம் செய்ய முதல் கையெழுத்திட்டு 08.05.2021 அன்று முதல் நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளார்கள். இன்னைக்கே எங்ககிட்ட கண்டக்டர் டிக்கெட் வாங்கல. எனக்கு ரொம்ப சந்தோசமா இருந்துச்சு. மாத சம்மளத்திற்கு வேலைக்கு போற என்னைப் போன்ற பெண்கள் முக்கியமாக சொந்த தேவைகளுக்குக் கூட சம்பளத்திற்கு ஏற்ற மாதிரி, செலவு செய்ய வேண்டியிருந்தது. இப்ப எங்களுக்கு மிச்சமாகின்ற பணத்தில் மிக அத்தியாவசியமான பொருட்களைத் தந்தை, அண்ணன், தம்பியிடம் கேட்காமல் வாங்கிக் கொள்ள இயலும். முதலமைச்சர் அவர்கள் வழங்கிய சலுகையினால் கிடைக்கும் பணத்தைச் சேமித்து முறையாகப் பயன்படுத்த இருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்திட்டத்தால் பயன்பெற்ற பயனாளி பொட்டணம் கிராமத்தைச் சேர்ந்த எஸ்.சவுந்தர்யா நம்மிடம் தெரிவித்ததாவது,

எஸ்.சவுந்தர்யா

எனது பெயர் சவுந்தர்யா.நான் பி.இ.சிவில் இன்ஜினியர் படித்து முடித்துத் தற்போது தனியார் நிறுவனத்தில் என்ஜினியராக பணியாற்றி வருகிறேன். சிவில் இன்ஜினியர் வேலைகளில் பெண்களால், பல்வேறு இடங்களுக்குச் சென்று பணிகளை மேற்கொள்வது கடினம். எனவே அலுவலகத்தில் அமர்ந்து மேற்கொள்ளும் வகையிலான பணிகளில் ஈடுபட்டு வருகிறேன். அதன் காரணமாகச் சம்பளமும் அதற்கேற்றாற் போல்தான் குறைவாகக் கிடைக்கும். என்னதான் இன்ஜினியர் என்று சொன்னாலும் தனியார் பணியில் கிடைக்கும் சம்பளத்தில் செலவுகள் பயமுறுத்தும் வகையிலேயே இருக்கின்றது. தமிழ்நாடு முதலமைச்சராக திரு.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற உடனே தான் அளித்த வாக்குறுதியின்படி, அரசு போக்குவரத்துக் கழக நகரப் பேருந்துகளில் மகளிர்கள் இலவசமாகப் பயணம் செய்ய முதல் கையெழுத்திட்டு நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளார்கள். இதனால் எனது போக்குவரத்துச் செலவு முழுவதும் மிச்சமாகும். இதனை நான் கனவில்கூட நினைத்துப் பார்க்கவில்லை. சம்பளம் போதாது எனவே சென்னை போன்ற நகரத்திற்குப் பணிக்குச் செல்லலாம் என்று எண்ணியிருந்த நிலையில் இந்த திட்டத்தினால் எனது தாய், தந்தைக்கு உறுதுணையாக நாமக்கல்லிலேயே பணியைத் தொடர முடிவு செய்துள்ளேன். பெண்களின் நிலையறிந்து இந்த திட்டத்தினைச் செயல்படுத்திய மாண்புமிகு முதல்வர் ஸ்டாலின் அவர்களுக்கு எனது குடும்பத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொகுப்பு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்

நாமக்கல் மாவட்டம்.



தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் முன்னிலையில், 08.05.2023 அன்று சென்னையில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், "தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை"யின் இலச்சினை மற்றும் வலைதளத்தை இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் திரு. மகேந்திர சிங் தோனி அவர்கள் வெளியிட்டார்.

தமிழரசு
Tamilarasu

R.N.I. No. 21446/70 Regn. No. TN/CCN/643/2021-2023
& WPP No. TN/PMG (CCR) 518/2021-2023

Date of Publication : 2nd week of every month
Date of Posting : 27th - 30th of every month

செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் "தமிழரசு" இதழின் 1 இலட்சத்து 1 ஆவது சந்தாதாரருக்கு தமிழரசு இதழை 11.05.2023 அன்று சென்னை, கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலக கூட்ட அரங்கில் நடைபெற்ற விழாவில் வழங்கினார்.

Published by D.MOHAN, I.A.S., on behalf of Information and Public Relations Department
Government of Tamil Nadu, Secretariat, Fort St. George, Chennai - 600 009 and Printed by: T. Suyambulingom at TAMILARASU PRESS,
Rajiv Gandhi Salai, Taramani, Chennai - 600 113. Editor : D.MOHAN, I.A.S.,